திருக்கோயில்

"என்கடன் பணி செய்து கிடப்பதே"




மாலை 1] விகாரி ஆனி ஜூலை 1959 [மணி 10

சென்னை அரசாங்க அறநிலையப்

அகழ்சூழ்ந்த திருப்புகலூர்க் கோயில்

24—6—59-ல் கும்பாபிஷேகம் நடைபெற்றது



பொருளடக்கம்

திருக்கோயில்

ஆண்டுக் கையொப்பம் : ரூபாய் பத்து

அறநிலையப் பாதுகாப்பு ஆட்சி அலுவலகம்,

மவுண்ட் ரோட், சென்னை-2

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமிகோயில் கும்பாபிஷேகம்

8—7—59

திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி, வள்ளியம்மை, தெய்வயானை, சண்முகர் முதலிய மூர்த்திகளுக்கு 8 7–59, காலை 3-45 க்குமேல் 4-15 மணிக்குள் மகாகும்பாபிஷேகம் நடைபெறும் இரவு 8-30 மணிக்கு சண்முகர் முதலிய உற்சவ மூர்த்திகள் வீதிவலம் வரும். பூர்வாங்க கிரியைகள் 1-7-59 முதல் நடக்கும். 4-7–59 முதல் 7-7-59 வரை சமயச் சொற்பொழிவுகளும் இன்னிசையரங்குகளும் உண்டு.



ஸ்ரீரங்கநாதர்

ACC. NO. 45197.

திருக்கோயில்

திங்கள் வெளியீடு

மாலை 1] விகாரி ஆனி - 1959 ஜூலை [மணி 10

ஆலய அமைப்பு

குடதிசை முடியைவைத்துக்
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்புகாட்டித்
தென்திசை யிலங்கைநோக்கி
கடல்நிறக் கடவுளெந்தை
யரவணைத்துயிலுமா கண்டு
உடல் எனக்குருகுமாலோ
ஏன்செய்கே னுலகத்தீரே.

—திருமாலை

கங்கையிற் புனிதமாய
காவிரி நடுவுபாட்டு
பொங்குநீர் பரந்துபாயும்
பூம்பொழிலரங்கந் தன்னுள்
எங்கள்மால் இறைவன் ஈசன்
கிடந்ததோர் கிடக்கை கண்டும்
எங்ஙனம் மறந்து
வாழ்கேனேழையே னேழையேனே.

—திருமாலை

சைவ வைணவத் திருக்கோயில்களின் அமைப்பு மனித சரீரத்தின் அமைப்பை யொட்டி யிருப்பதைப் பல திருப்பதிகளிலே காண்கிறோம். 12-7-59 அன்று காலை ஸ்ரீரங்கநாதசுவாமி ஆலயத்தில் மகாசம்ப்ரோக்ஷணம் நடைபெற இருக்கின்றது. சைவர்கள் கோயில் என்று சிறப்பாகக் கூறுவது சிதம்பரம். வைணவர்கள் கோயில் என்றும் பெரிய கோயில் என்றும் சிறப்பாகக் கூறுவது ஸ்ரீரங்கம். இத்திருத்தலத்தில் ஸ்ரீரங்கநாதர் பெரிய பெருமாளாகத் தெற்குநோக்கிய திருமுக மண்டலத்துடன் சயனத் திருக்கோலத்தில் சேவை சாதிக்கிருர். பிராட்டியார் திருப்பெயர் ஸ்ரீரங்கநாயகித்தாயார். விமானம் பிரணவாக்ருதிவிமானம்சொர்ணமயமானது. ஒரே நதியின் இரு கிளைகளான காவிரி கொள்ளிட நதிகளிரண்டுக்கும் மத்தியில் அமைந்திருப்பதாலும், திருவுக்கு அரங்கமா யிருத்தலாலும் திருஅரங்கம் என வழங்குப். இத்திருப்பதி பூலோக வைகுண்டம் எனவும் போகமண்டலம் எனவும் புகழ்பெற்று விளங்குகிறது. ஆழ்வார்கள் பதின்மராலும் ஆண்டாளாலும் மங்களாசாசனம் செய்யப் பெற்றதும் 247 பாசுரங்களையுடையதும் இத்திருப்பதி யொன்றே. ஆண்டாள், குலசேகராழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணழ்வார், இவர்கள் எம்பெருமானுர் திருநாட்டுக்கெழுந்தருளிய திவ்யதேசம். பெரிய நம்பிகள் பட்டர் வடக்குத் திருவீதிப்பிள்ளை பிள்ளைலோகாச்சாரியார் முதலிய ஆசாரிய புருஷர்கள் திருவவதாரம் செய்த புண்ணிய

தலம். பிரம்மதேவனிடம் திருவாராதன மூர்த்தியாக இருந்த ஸ்ரீரங்கநாதனை இக்ஷ்வாகு அருந்தவம் புரிந்து பெற்றான். இக்ஷ்வாகுவம்சத்து அரசர்கள் இராமபிரான் வரையில் சூரிய குலதெய்வமாகப் பூசிக்கப்பெற்று இராமபிரானால் விபீஷணாழ்வாருக்கு அளிக்கப்பெற்று அவரால் அயோத்தியினின்றும் இலங்கைக்குக் கொண்டுபோகும் வழியில் உபயகாவிரி நடுவில் எம்பெருமான் பிரணவாக்ருதி விமானத்துடன் திருக்கோயில் கொண்டருளத் திருவுள்ளம்கொண்டு விநாயகரை அந்தணச் சிறுவன் வேடத்தில் தோன்றச் செய்தனர். விபீஷணர்தம் ஜல உபாதையைத் தீர்த்துக் கொண்டு வரும்வரை ஸ்ரீரங்கநாதனையும் விமானத்தையும் வைத்துக்கொண்டிருக்கும்படி வேண்டத் தான் மூன்றுமுறை கூவியழைப்பதாகவும் அதற்குள் வந்து திரும்பப் பெற்றுக்கொள்ளாவிடில் தான் கீழே வைத்துவிட்டுப் போய்விடுவதாகவும் வாக்குக்கொடுத்து அவ்வாறே மும்முறை கூவியழைத்தும் விபீஷணரால் திரும்பி வரக் கூடாமையால் ஸ்ரீரங்கநாதமூர்த்தியை விநாயகராகிய அந்தணச் சிறுவர் கீழே வைத்து விட்டார். எம்பெருமானும் இப்போதுள்ள திருக்கோயிலில் விமானத்துடன் புடைபெயராது திருவுள்ளமுவந்து தங்கியுள்ளார். விபீஷணரால் மூர்த்தியையும் விமானத்தையும் மறுபடியும் எடுக்க முடியாமற் போகவே விநாயகரைத் துரத்த அவர் திருசிரபுரமலையுச்சியில் ஏறியமர்ந்து கொண்டார் என்பர். இப்போதும் அங்குள்ள உச்சிப் பிள்ளையார் சிரசில் மூன்று முட்டிக்கை குட்டிய அடையாள மிருப்பதுபோல் தோற்றமிருக்கிறதாம். விபீஷணர் இலங்கையிலிருந்து தினந்தோறும் புஷ்பங்களுடன் வைகுண்டம்போய் ஸ்ரீரங்கநாதப் பெருமாளுக்குப் பூஜை செய்து வந்ததாகவும் அதனாலுண்டான கஷ்டங்களை யுத்தேசித்து எம்பெருமானை இலங்கைக்கு எழுந்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க அதற்கிணங்கி விக்கிரகரூபமாய்பூக்குடலையில் அமர்ந்துவந்ததாகவும் விநாயகப் பெருமான் திருவிளையாடலால் உபய காவிரியின் மத்தியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளியதாகவும் சொல்வதுண்டு.

உலகத்தில் முதல் முதல் தோன்றிய விஷ்ணு கோயில் ஸ்ரீரங்கம். அதன் பிறகே மற்ற விஷ்ணு ஆலயங்கள் ஏற்பட்டதாகவும் அதனால் ஸ்ரீரங்கம் பெரிய கோயில் என்று வழங்குகிறதென்றும் கூறுவர். ஸ்ரீரங்கநாதர் விமானத்துடன் கோயில் கொண்ட இடத்தை மூலஸ்தானமாக அமைத்துச் சுற்றிலும் ஏழு பிரகாரங்கள் கட்டப்பெற்றுள்ளன. இந்த ஏழு பிரகாரங்களுள் வெளிப்பிரகாரங்கள் ஆறும் ஆறு ஆதாரங்களைக் காட்டுகின்றன. வெளியே யிருந்து முறையே மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அநாகதம் விசுத்தி ஆஞ்சேயம் என்பவை. மூலாதாரத்திலிருந்து, நாபி, மார்பு, நெஞ்சுக்குழி, புருவமத்தியாகிய சக்கரங்களைக் குறிக்கும். இந்த ஆறு பிரகாரங்களிலும் வீடுகளும் கடைகளும் இருக்கின்றன. ஏழாவது பிரகாரமாகிய பிரம்ம கபாலத்துக்குள்ளிருக்கும் வெளியில் திருஅரங்கநாதன்பள்ளிகொண்டுள்ள கர்ப்பக்கிரகம் இருக்கிறது. சிரசில் மண்டை ஓட்டுக்குள் சிவப்பு வெண்மை நிறமுள்ள மூளை வளைவுகளுடன் சுற்றிக்கொண்டிருக்கிறது. இந்த மூளைக்கு சகஸ்ராகமலமென்றும் பெயருண்டு. இந்த மூளை மெல்லிய ஜவ்வினால் மூடப்பெற்று அதற்கும் மண்டை ஓட்டிற்கும் நடுவில் வெளியிருக்கிறது. இதுவே பரமாத்மாவாகிய அரங்கநாதன் அமர்ந்திருக்குமிடம். மூலஸ்தானம் எனப்படும். இது போன்றே திருவேங்கடத்திலும் ஏழுமலைகளுக்கு மேல் ஸ்ரீநிவாசன் திருக்கோயில் கொண்டிருக்கிறான்.

ஸ்ரீரங்கநாதர் ஐந்து தலைகளையுடைய ஆதிசேஷன்மேல் சயனித்திருப்பதேன்? பிராணவாயு முதலிய ஐந்து வாயுக்கள் நமது சரீரத்தில் இருக்கின்றன. இந்த ஐந்து வாயுக்களே ஐந்து சிரசுகளையுடைய நாகேந்திரனான ஆதிசேஷன். இந்த ஐந்து வாயுக்களையும் மனத்தையும் யோக பலத்தால் அடக்கி யோக நித்திரையாகிய அறிதுயிலில் அமர்ந்த கோலமே ஆதிசேஷன் மேல் எம்பெருமான்பள்ளி

கொண்டிருக்கும் திருக்கோலம். தன்னை யடக்கி யாட்கொண்ட எம்பெருமானுக்கு நாகேந்திரன் தன் ஐந்து தலைகளையும் படமாக விரித்துக் குடை பிடித்ததுபோல் விளங்கக் காண்கிறோம்.

12-7-59 நடைபெறும் மகாசம்ப்ரோக்ஷணத்தின்போது ஆதிசேஷனுக்கு வெள்ளியங்கியும் தங்க சிரசுகளும் சாத்தி எம்பெருமானுக்குத் தைலக்காப்புச் சாத்தி சேவார்த்திகளுக்கு சேவை சாதித் தருளும் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக விருக்கும்.

கொண்டல் வண்ணனைக்
கோவலனாய் வெண்ணெ
யுண்டவாயன், என்னுள்ளம்
கவர்ந்தானை,
அண்டர்கோனணியரங்கன்
என்னமுதினைக்
கண்ட கண்கள்
மற்றொன்றினைக் காணாவே.

—அமலனாதிபிரான்.

திருவரங்கம் – ஆழ்வார்கள் மங்களாசாசனம்

கொழுப்புடைய செழுங்குருதி கொழுத்திழிந்துகுமிழ்த்தெறிய
பிழக்குடைய அசுரர்களைப் பிணம்படுத்த பெருமானூர்
தழுப்பரிய சந்தனங்கள் தடைவரைவா யீர்த்துக்கொண்டு
தெழிப்புடைய காவிரிவந் தடிதொழும் சீரரங்கமே. —பெரியாழ்வார்

கண்ணாலங்கோடித்துக் கன்னிதன்னைக் கைப்பிடிப்பான்
திண்ணார்ந்திருந்த சிசுபாலன் தேசழிந்து
அண்ணாந்திருக்கவே யாங்கவளைக் கைப்பிடித்த
பெண்ணாளன் பேணுமூர் பேருமரங்கமே. —ஆண்டாள்

எத்திறத்திலும் யாரொடும்கூடும், அச்
சித்தந்தனைத் தவிர்த்தனன் செங்கண்மால்
அத்தனே அரங்காவென் றழைக்கின்றேன்
பித்தனா யொழிந்தேனெம் பிரானுக்கே. —குலசேகராழ்வார்

சரங்களைத்துரந்துவில் வளைத்து இலங்கைமன்னவன்
சிரங்கள்பத்தறுத்துதிர்த்த செல்வர்மன்னு பொன்னிடம்
பரந்துபொன்நிரந்துநுந்தி வந்தலைக்கும் வார்புனல்
அரங்கமென்பர்நான்முகத் தயன்பணிந்த கோயிலே. —திருமழிசையாழ்வார்

பச்சைமாமலைபோல்மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம்கொழுந்தேயென்னும்
இச்சுவை தவிரயான்போ யிந்திர லோகமாளும்
அச்சுவைபெறினும்வேண்டே னரங்கமா நகருளானே.
—தொண்டரடிப்பொடியாழ்வார்

அமலனாதிபிரா னடியார்க்கென்னை யாட்படுத்த
விமலன், விண்ணவர்கோன் விரையார்பொழில் வேங்கடவன்
நிமலன்நின் மலன்நீதிவானவன் நீள்மதிளரங்கத்தமான், திருக்
கமலபாதம்வந்தென் கண்ணினுள்ளன வொக்கின்றதே. —திருப்பாணாழ்வார்

பொய்வண்ணம் மனத்தகற்றிப் புலனைந்தும் செலவைத்து
மெய்வண்ணம் நினைந்தவர்க்கு மெய்நின்ற வித்தகனை
மைவண்ணம் கருமுகில்போல் திகழ்வண்ண மரகதத்தின்
அவ்வண்ண வண்ணனை யான்கண்டது தென்னரங்கத்தே.
—திருமங்கையாழ்வார்

ஒன்றும்மறந்தறியே னோதநீர் வண்ணனைநான்
இன்றுமறப்பனோ வேழைகாள்,—அன்று
கருவரங்கத்துட் கிடந்து கைதொழுதேன் கண்டேன்
திருவரங்கமே யான்திசை. —பொய்கையாழ்வார்

திறம்பிற்றினியறிந்தேன் தென்னரங்கத்தெந்தை
திறம்பாவழிசென்றார்க் கல்லால்,—திறம்பாச்
செடிநரகைநீக்கித்தான் செல்வதன்முன், வானோர்
கடிநகரவாசற் கதவு. —பூதத்தாழ்வார்

பண்டெல்லாம்வேங்கடம் பாற்கடல்வைகுந்தம்
கொண்டங்குறைவார்க்குக் கோயில்போல்,—வண்டு
வளங்கிளரும்நீள்சோலை வண்பூங்கடிகை,
இளங்குமரன் றன்விண்ணகர். —பேயாழ்வார்

தண்ணந்துழாய்வளை கொள்வதுயாமிழப்போம், நடுவே
வண்ணம்துழாவி யோர்வாடையுலாவும், வள்வாயலகால்
புன்னந்துழாமே பொருநீர்த் திருவரங்காவருளாய்
எண்ணந்துழாவுமிடத்து, உளவோபண்டு மின்னன்னவே. —நம்மாழ்வார்

அறநிலைய ஆணையாளர் திரு. அ. உத்தண்டராமன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் கீழ்க்கண்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்கள்

23—6—59

1. ஸ்ரீ இரத்தினகிரீசுவர சுவாமி கோயில், திருமருகல்: திருமுறைக்கோயில் துவக்கவிழா.
2. ஸ்ரீ அக்னீசுவர சுவாமி, திருக்கொள்ளிக்காடு: திருமுறைக்கோயில் திறப்புவிழா. கல்லில் பொறித்த திருஞானசம்பந்தரின் தேவாரத் திருப்பதிகத் திறப்புவிழா.
3. ஸ்ரீ வெள்ளிமலை நாதசுவாமி கோயில், திருதென்கூர்: திருமுறைக்கோயில் திறப்பு விழா. கல்லில் பொறித்த திருஞானசம்பந்தரின் தேவாரத் திருப்பதிகத் திறப்புவிழா.
4. ஸ்ரீ நெல்லிவனநாத சுவாமி கோயில், திருநெல்லிக்காவல்: திருமுறைக்கோயில் திறப்பு விழா. கல்லில் பொறித்த திருஞானசம்பந்தரின் தேவாரத் திருப்பதிகத் திறப்புவிழாவும், நூல் நிலையத் திறப்புவிழாவும்.

24—6—59

1. திருச்செங்காட்டங்குடி கோயிலில் திருப்பணிக்காக அறநிலையப் பாதுகாப்புத்துறை அமைச்சர் அவர்களால் கால்கோள் விழாவும், திருமுறைக்கோயில் திறப்புவிழாவும் செய்யப்பட்டன.
2. திருப்புகலூர், கும்பாபிஷேகம்.



கலியாணசுந்தரர்

திருப்புகலூர்

தஞ்சாவூர் மாவட்டத்தில் நன்னிலம் கோட்டத்திலுள்ள பாடல் பெற்ற பதியான திருப்புகலூர் கோயிலின் மகாகும்பாபிஷேகம் 24-6-59 புதன்கிழமை காலை மிகச் சிறப்பாக நடந்தேறியது. பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர். 23-6-59 அன்று தேரடி விநாயகர், ஞான விநாயகர், சித்தர் கோயில், சிந்தாமணீசர் இந்த கோயில்களுக்குக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 24-6-59–ல் அக்கினீசுவரர், வர்த்தமானீசுவரர், மற்ற மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் இனிது நிகழ்ந்தது, முன்னாள் மத்திய அரசாங்க இரயில்வே துணை அமைச்சர் திரு. O. V. அழகேசன் அவர்கள் தலைமையில், சென்னை அறநிலையத்துறை அமைச்சர் கனம் திரு. M. பக்தவத்சலம் அவர்களால் திருஞானசம்பந்தர் நூல்நிலையம், சுந்தரர் பொங்கல் (பொன்கல்) மண்டபம், தேவாரத்திருப் பதிகக் கல்வெட்டு இவைகள் திறந்துவைக்கப்பெற்றன. கோவை (சிவக்கவிமணி

C. K. S.) ஸ்ரீமத் சம்பந்தசரணாலயத் தம்பிரான் அவர்கள் இயற்றிய வாகீசர் அல்லது மெய்யுணர்தல் என்ற நூலும், 'திருக்கோயில்' இதழாசிரியர் திரு. G. கலியாணம் M. A. அவர்கள் எழுதிய திருப்புகலூர்த்தல வரலாறு என்ற நூலும் தேவஸ்தான வெளியீடுகளாக அமைச்சர் அவர்களால் வெளியிடப்பெற்றன. அவர்களே தேவஸ்தான கூட்டுறவுப் பண்ணையையும் ஆரம்பித்து வைத்தார்கள். இந்த நிகழ்ச்சிகளில் அறநிலையத் துறை ஆணையர் திரு. A. உத்தண்டராமன் I. A. S. அவர்களும், தஞ்சை துணை ஆணையர் திரு. A. சர்க்கரை B. A. B. L., அவர்களும் மற்ற அதிகாரிகளும் கலந்துகொண்டார்கள். தருமகர்த்தர்கள் மகாகும்பாபிஷேகம் நடைபெறுவதற்கும், பொது மக்கள் வழிபடுவதற்கும் நல்ல முறையில் சிறந்த ஏற்பாடுகள் செய்து வைத்தார்கள்.

மகாகும்பாபிஷேகம் நடைபெற்ற பெருமையுள்ள தலமான திருப்புகலூரைப்பற்றி நாம் சிறிது அறிந்துகொள்ள வேண்டும். இப்பதி அப்பர், சம்பந்தர், சுந்தரர் இம்மூவராலும் பாடப்பெற்றது. நன்னிலம் இரயில் நிலையத்திலிருந்து கிழக்கே நான்கு கல் தொலைவிலுள்ளது. மோட்டார், வண்டி வசதிகள் உண்டு. முடிகொண்டான் ஆற்றின் வடகரையில் கோயில் அமைந்திருக்கிறது. 90 அடி உயரமுள்ள ஐந்து நிலைக்கோபுரம் அதை அழகு செய்கிறது. கோயிலுக்கு இரண்டு பிராகாரங்கள் உள்ளன. வெளிமதிலின் புறத்தே அப்பர் நந்தவனம் இருக்கிறது. அதைச்சுற்றி நான்கு புறமும் நீர் நிறைந்த அகழ் இருக்கிறது. தென்புறம் ஒரு பகுதியில் கோயிலுக்குப் போக வழியுள்ளது.

தேவாரம், பெரிய புராணம், கல்வெட்டுக்கள் முதலியவற்றில் இத்தலத்தின் பெயர் திருப்புகலூர் என்று காணப்படுகிறது. புன்னகவனம், சரண்யபுரம் சரண்யபுரி, இரக்தாரண்யம் என்ற வேறு பெயர்களும் இப்பதிக்கு உள்ளன. கோயிலின் உள்ளே இரண்டு மூலத்தானங்கள் உள்ளன. ஒன்று அக்கினீசுவரர்; மற்றொன்று வர்த்தமானீசுவரர். சுயம்பு மூர்த்தியான இறைவனுக்கு புகலூர் நாதர், புன்னகநாதர், அக்கினிபுரீசுவரர், கோணப்பிரான் என்ற பெயர்களும், இறைவிக்கு கருந்தாழ்குழலி, கருந்தார்க்குழலி, சூளிகாம்பாள் என்ற பெயர்களும் அமைந்துள்ளன. மற்றொரு மூலத்தானத்தில் எழுந்தருளியுள்ள பெருமானுக்கு வர்த்தமானீசுவரர் என்றும், தேவிக்கு மனோன்மணி என்றும் பெயர்கள் வழங்குகின்றன. வர்த்தமானீச்சரத்திற்குத் தனியே திருஞானசம்பந்தர் ஒரு பதிகம் அருளியுள்ளார். கோணப்பிரான், கருந்தாழ்க்குழலி என்ற பெயர்கள் தேவாரத்திலும், திருப்புகலூர் மகாதேவர், கைலாயமுடைய நாயனார், கோணற்பெருமாள் என்ற பெயர்கள் கல்வெட்டுக்களிலும் காணப்படுகின்றன. இங்கு, சந்திரசேகரர் சந்நிதி மிகவும் சிறப்புடையது. கோயிலின் உட்பிராகாரத்தில் பூதேசுவரர், பவிஷ்யேசுவரர், அப்பர், வாதாபி கணபதி முதலியோரின் திருவுருவங்கள் இருக்கின்றன. வெளிப்பிராகாரத்தில் அம்பிகை கோயில் கொண்டெழுந்தருளியுள்ளாள். அதே பிரகாரத்தில். சிந்தாமணீசர் ஆலயமும், அப்பர் ஐக்கியக் காட்சியையும் காணலாம். கோயிலைச் சுற்றியுள்ள திருக்குளத்தின் தென் மேற்குக் கரையில் சித்தர் கோயில் ஒன்றிருக்கிறது. பூம்புகலூர் மேவிய புண்ணியனைப் பதினெண் சித்தர்களும் வழிபட்டதாகச் சொல்லப்படுகிறது. தெற்குமட விளாகத்தில் நெற்குன்ற வாணர் என்பார் வழிபட்ட ஞானவிநாயகர் ஆலயம் இருக்கிறது.

கோயிலைச் சுற்றியுள்ள திருக்குளத்தை அக்கினிதீர்த்தம், பாணதீர்த்தம் என்பர். அக்கினிபகவானும், பாணாசுரனும் இங்கு வழிபட்டமையால் இத்தீர்த்தத்திற்கு அப்பெயர்கள் ஏற்பட்டன. 'தீர்த்தமே திகழும் பொய்கைத் திருப்புகலூர்' என்று அப்பரடிகளும், 'பொங்குதண்புனல் சூழ்ந்து போதணி பொழிற்புகலூர்' என்று சம்பந்தப் பெருந்தகையும், 'பூவிற்பொலி பொய்கைசூழ் புகலூர்' என்று சேக்கிழார் சுவாமிகளும் போற்றியுள்ளனர். இத்தல விருட்சம் புன்னைமரம். இது வடக்குப் பிரகாரத்தில் இருக்கிறது. தேவாரத்தில் 'புன்னைப் பொழிற்புகலூர்' என்றும், பெரியபுராணத்தில் 'புன்னாக மணங்கமழும் பூம்புகலூர்' என்றும் கூறப்பட்டிருக்கிறது.

முருகநாயனார் இப்பதியில் அவதரித்து இறைவனுக்குப் பூத்தொண்டு புரிந்ததும், அவர் மடத்திற்குச் சம்பந்தர், அப்பர், சிறுத்


தொண்டர், திருநீல நக்கர் முதலியோர் எழுந்தருளி உடனுறைந்ததும், அப்பமூர்த்திகள் இங்குப் பலகாலம் தங்கி, உழவாரத்தொண்டு புரிந்து, அற்புதங்கள் நிகழ்த்தி, பதிகங்கள் பாடி இறைவன் திருவடிப்பேறெய்தியதும், சுந்தரருக்காக இறைவன் செங்கற்களைப் பொன்கற்களாக அருள் செய்ததும் ஆன நிகழ்ச்சிகள் இப்பதிக்கு மிக்க சிறப்புச் செய்கின்றன.

திருப்புகலூருக்கு சம்பந்தர் 2 பதிகங்களும், அப்பர் 5 பதிகங்களும், சுந்தரர் ஒரு பதிகமும் பாடியிருக்கின்றனர். திருப்புகலூர் வர்த்தமானீச்சரத்திற்கு சம்பந்தர் பாடிய தனிப்பதிகம் ஒன்றும் உண்டு.

திருப்புகலூரைப் பற்றித் தேவாரத்தில் கூறப்பட்டிருப்பதுடன் பதினோராந் திருமுறையில் பரணதேவ நாயனாரின் சிவபெருமான் திருவந்தாதியிலும், பட்டணத்துப் பிள்ளையாரின் திருவேகம்பமுடையார் திருவந்தாதியிலும் சிறப்பாகப் பேசப்பட்டிருக்கிறது. சரண்யபுர மஹாத்மியம் என்ற வடமொழி நூல் ஏட்டுப் பிரதியாக உள்ளது. தொண்டை நாட்டுப் புலியூர்க்கோட்டம் நெற்குன்றம் என்ற ஊரினரான நெற்குன்றவாணர் **திருப்புகலூரந்தாதி** என்ற நூலை இயற்றியுள்ளார்.

இத்திருக்கோயிலில் பல கல்வெட்டுக்கள் இருக்கின்றன. முதல் இராஜராஜன், முதல் இராஜேந்திரன், முதல் குலோத்துங்கன், மூன்றும் குலோத்துங்கன் முதலியவர்கள் காலத்தவை. அவைகளில் பல அரிய செய்திகள் காணப்படுகின்றன. 'திருப்பொய்கைக் கரை சூழ்ந்த' என்ற குறிப்பு வருவதால் அகழ் கோயிலைச் சுற்றியிருப்பதைச் சொல்லப்பட்டிருக்கிறது. சிவலிங்கமூர்த்திக்குக் **கோணப்பெருமான்** என்ற பெயர் உண்மையைத் தெரிவிக்கின்றன. மூல மூர்த்தி சிறிது வடபுறமாகச் சாய்ந்திருப்பதை இன்றும் காணலாம். 'தொல்லை நீர்ப்புகலூர்க் கோணப்பிரானைக்குறுகக் குறுகா கொடுவினையே' என்று அப்பரடிகள் அருளியிருக்கிறார். இக்கோயிலிலுள்ள விநாயகருக்கு **வாதாபி கணபதி** என்ற பெயர் கல்வெட்டில் காணப்படுகிறது. அப்பமூர்த்திக்கு நித்திய பூசைக்காக நிபந்தம் ஏற்பட்ட செய்தியை முதல் இராஜராஜன் (கி. பி. 985-1012) காலத்திய கல்வெட்டு ஒன்று அறிவிக்கிறது. 'குளிச்செழுந்த நாயனார்' என்று அப்பர் குறிப்பிடப்படுகிறார். யாழ்மூரி நாயனார்', 'நக்க நாயனார்' என்று திருநீல கண்ட யாழ்ப்பாணர், திருநீலநக்கர் இவர்கள் குறிப்பிடப்படுகின்றனர்.

நம்பி முருகன் திருமடம் என்று முருக நாயனார் மடம் ஒன்று இருந்ததாகத் தெரிகிறது. பெரியபுராணத்தில் அப்பர் சுவாமிகள் ஒருவருக்கு மாத்திரம் தான் திருநட்சத்திரம் குறிக்கப்பட்டுள்ளது. திருநாவுக்கரசருக்குச் சித்திரைச் சதயத்தை யொட்டிப் பத்து நாட்கள் விழாவும், வைகாசி மாதத்தில் பத்துநாட்கள் விழாவும் நடைபெறுகின்றன. இவ்வாறு முன்னர் நடந்ததைக் கல்வெட்டுக்கள் அறிவிக்கின்றன. கோயிலில் திருப்பதிகம் விண்ணப்பஞ் செய்வார்க்கு (தேவாரம் பாடுபவர்க்கு) நிபந்தம் விடப்பட்டிருக்கிறது. திருமுறை மக்களால் மிகுதியும் கையாளப்பட்டதைக் கல்வெட்டுக்களில் காணப்படும்



அக்கினீசுவரர், வர்த்தமானீசுவரர்
(இரண்டு மூலஸ்தானங்கள்)

'இம்மையே தருவாள்', 'பொய்யாத சேவடி', 'ஒளி வளர்விளக்கு', என்ற சொற்றொடர்களால் அறியலாம். சுவாமியின் பெயரை மக்களுக்கு இடுவதைக் 'கோனல் மாதேவன்', 'கோனல் வடுகன்', என்று வரும் ஆட்சியால் தெரிந்து கொள்ளலாம். முடிகொண்டான் ஆற்று வடகரையில் மனதுக்கினியான் என்பான் செய்வித்த ஆதுலர் சாலைக்கு நிலம் விடப்பட்டிருக்கின்றது. திருப்புகலூர் அந்தாதி பாடிய நெற்குன்ற வாணரைப்பற்றிய குறிப்பு கல்வெட்டில் காணப்படுகிறது.

கோயில் தருமகர்த்தர்களாக இப்போதிருக்கும் திரு. M.D. தியாகராஜ பிள்ளை M.L.A., திரு. R. இராதகிருஷ்ண நாயுடு இவர்கள் கோயிலில் பல திருப்பணிகள் செய்துள்ளார்கள். கோபுரங்கள், மண்டபங்கள், மதில்கள், பிரகாரங்கள், திருக்குளம் இவைகள் செப்பனிடப்பட்டு சுதைச் சிற்பங்கள் அமைத்து, வண்ண ஓவியங்கள் தீட்டப்பெற்றிருக்கின்றன. திருநாவுக்கரசர் மண்டபத்தின் முகப்பில் திருக்கயிலாயக் காட்சியும், வசந்த மண்டபத்தின் மேல் பாணாசுரன் இலிங்கத்தைப் பெயர்க்க முயற்சிப்பதும், அக்கினிபகவான் சந்திரசேகரரை வழிபடுவதும், பள்ளியறை முன்மேல் சிவசக்தி நடனமும், ஆகிய சிற்ப வேலைகள் அற்புதமானவை. இரண்டாவது திருவாயிற் சுவரில் அப்பர் உழவாரக் காட்சியும் அரம்பையர் நடனமும் வண்ண ஓவியங்களாக கவின் பெற வரையப்பட்டிருக்கின்றன. திருநாவுக்கரசர் மண்டபத்திற்குப் பலகணிகள் அமைத்து, அவர் திருவுருவத்தை எழுந்தருளச் செய்து சமயப் பேரவை கூடுவதற்குத் தகுந்த இடமாக அமைக்கப் பெற்றிருக்கிறது. திருஞானசம்பந்தர் பேரால் நூல் நிலையம் திகழ்கிறது. 'இம்மையே தரும் சோறும் கூறையும்' என்று இத்தலத்தைப் பாடிய சுந்தரர் பேரால் உணவுச்சாலை அமைந்துள்ளது. முருகநாயனார் நந்தவனம் நன்கு பராமரிக்கப்பட்டு வருகிறது. சூளிகாம்பாள் பசு மடத்தில் பசுக்கள் வளர்க்கப்படுகின்றன. அபிஷேகம் ஆகும்பாலை காலை மாலை இரு வேளைகளிலும் குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது. பகல் உணவு பள்ளிச் சிறுவர் சிறுமியர்களுக்கு அளிக்கப்படுகிறது. திலகவதியார் சித்த வைத்தியசாலையில் இலவசமாக மருந்துகள் அளிக்கப்படுகின்றன. நல்ல முறையில் மருந்துகள் தயாரித்து எளிய விலையில் விற்பதற்காக சித்த வைத்திய ஆராய்ச்சி மன்றம் ஒன்றும் இத்தேவஸ்தானத்தாரால் தஞ்சையில் நிறுவப்பெற்றிருக்கின்றது. வெளியூரிலிருந்து திருப்புகலூருக்கு ஆலய வழிபாடு செய்வோர் தங்குவதற்காக மகாத்மா காந்தியின் பெயரால் இல்லம் ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. திறந்த வெளி அரங்கு ஒன்றும் கட்டப்பட்டிருக்கிறது, மின்சார விளக்குகளும், குடி தண்ணீர்க்குழாயும் ஊருக்கு மிகவும் பயன்படுகின்றன. அவ்வப்போது நூல் வெளியீடுகளும், சமயச் சொற்பொழிவுகளும், தேவாரப் பயிற்சியும் நடைபெறுதற்கான ஏற்பாடுகளும் இந்த தேவஸ்தானம் செய்துகொண்டு வருவது மிகவும் பாராட்டத்தக்கது. இதை மற்றக் கோயில்களும் முன் மாதிரியாக எடுத்துக் கொள்ளலாம்.

ஸ்ரீரங்கம் மகாசம்பிரோக்ஷணம்

ஸ்ரீ அரங்கநாத சுவாமி மூலஸ்தானத் திருப்பணிகள் முடிவடைந்து விட்டன. ஜூன் மாத முடிவுக்குள் எல்லா திருப்பணிகளும் முடிந்து விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுவரையில் வந்த நன்கொடை ரூ. 50,000. 31-5-59ல் தேவஸ்தான அலுவலகத்தில் பல மடங்களின் பிரதிநிதிகள், ஆகமசாஸ்திர அறிஞர்கள் வந்திருந்தார்கள். துணை ஆணையாளர் திரு. K. சோமசுந்தர தேசிகர் M.A., உதவி ஆணையாளர் திரு. T. E. ஜனார்த்தனம் B.A. இவர்களும் கலந்துகொண்டார்கள். சுமார் ஐம்பது அறிஞர்கள் வந்திருந்தனர். ஸ்ரீரங்கம்கோயில் அர்ச்சகர்களால் தயாரிக்கப்பட்ட மகா சம்பிரோக்ஷண நடைமுறை விவரங்கள் கூட்டத்தினரால் அங்கீகரிக்கப்பட்டன. 6-7-1959ல் ஆரம்பித்து 12-7-59ல் மகாசம்பிரோக்ஷணம் நடைபெறும். மூன்றும் பிரகாரம் வடமேற்கு மூலையில் யாகசாலை கட்டப்படும். வழிபடுவோர்க்கு வேண்டிய வசதிகள் செய்யப்பெறும். நினைவுக்கெட்டிய காலத்துக்குள் இக்கோயிலில் மகாசம்பிரோக்ஷணம் நடைபெற்றதாகத் தெரியவில்லை யாதலால இது ஒரு சிறந்த வாய்ப்பு. பொதுமக்கள் இதைப் பயன்படுத்தி திருவரங்கநாதனின் திருவருளுக்குப் பாத்திரப்படுவார்களாக. இந்த நல்ல வைபவத்துக்கு நன்கொடை அளிப்பவர்கள் விரைவில் செய்யவேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

K. K. மேனன் B.A., B.L.,
நிர்வாக அதிகாரி.

சைவம்

திரு. K. வச்சிரவேலு முதலியார் B.A., L.T.,

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

2. மதாசாரியர்களின் தோற்றம் : கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வடமொழிநூல்களையே முக்கிய பிரமாணமாக வைத்துச் சமயக் கொள்கைகளைக் கல்வி அறிவு கொண்டு நிறுவும் வழக்கம் வலியுறுவதாயிற்று. திருநான்மறை முடிவு எனப்படும் உபநிடதங்களின் பொருண் முடிவைப் பிரம சூத்திரங்களைத் துணையாகக் கொண்டு நிச்சயிக்க வேண்டும் என்பது பற்றிப் பலர் பிரம சூத்திரங்களுக்கும், உபநிடதங்களுட் பற்பலவற்றுக்கும் உரைகள் எழுதத் தொடங்கினர். அவ்வுரைகள் ஒன்றோடு ஒன்று மாறுபட்டனவாய் வேறு வேறு மதங்கள் தமிழகத்தே தோன்றுவதற்குக் காரணமாகி விட்டன. உண்மையநுபவம் வாய்க்கப் பெற்ற அருளாசிரியர்களைவிட, பேருரைகள் எழுதிய போதகாசிரியர்களே அதிகம் போற்றப்படுவாராயினர்*; இவ்வாறு மதங்களைத் தோற்றுவித்த ஆசிரியர்களுள் குறிப்பிடத் தக்கவர் மூவர்; அவர் சங்கரர், இராமாநுஜர், மத்துவர் என்போர் ஆவர்.

(i) சங்கரர் : இவர் சுமார் கி. பி. 788-ல் வடதிருவாங்கூரில் தோன்றியவர். 'முக்கிய உபநிடதங்களின் முடிவு பிரமம் ஒன்றே உள்பொருள் என்பது. உலகமும் உயிர்களும் ஆகிய பிற எல்லாம், கயிற்றில் தோன்றும் பாம்பு போல, பிரமத்தில் ஏற்றி உணரப்படும் வெறும் பொய்த் தோற்றமேயாம். இத்தோற்றத்தை 'அது, நீ' என்றாற்போல எழுந்துள்ள மகா வாக்கியங்களால் ஏற்படும் ஆன்ம ஞானத்தால் அபவாதம் செய்து (ஒழித்து) சச்சிதானந்தமாகிய பிரமம் ஒன்றே உள்பொருள் எனத் தெளிதலே பிறப்பு அறுத்தற்குச் சிறந்த சாதனம்; இதுவே, கடவுள் உனக்கு எனக் கொண்டு பத்திநெறி நிற்றலைப் பார்க்கினும் மேலானது' என நிறுவினர்.

மேலும், 'உயர்ஞான நெறியை உணர்ந்து கொள்ளுதற்கு (i) முக்கிய உபநிடதங்களும், (ii) பிரம சூத்திரமும், (iii) பகவற்கீதையும் ஆகிய மூன்றுமே பிரமாணம் ஆகத் தக்கவை; பிற நூல்கள் பிரமாணம் ஆகா' என்பது சங்கரருடைய அடிப்படைக் கொள்கை.

சங்கரர் பிரமம் எனக் கூறுவது உடம்பு தோறும் நிகழும் உணர்வுக்கு அடிப்படையாக உள்ள உயிரையே ஆகும்; அதுவும் ஒன்றேயன்றிப் பல அன்று என்பது அவர் கொள்கை.

இக்கொள்கை சிவநெறிக் கொள்கைக்கு மாறானது என்பது உணரத்தக்கது. சைவத்தில், கடவுள், உயிர், தளை என்னும் மூன்றும் உள்பொருள்கள். அவை ஒன்றிலிருந்து பிறிதொன்று தோன்றியது எனக் கூறப்படாத என்றும் உள்ள பொருள்கள். கடவுளும் உயிரும் அறிவுடைப் பொருள்கள் எனினும், கடவுள் இயற்கை உணர்வுள்ள பொருள்; சார்ந்ததன் வண்ணமாய் ஏகதேசப்படாது, எல்லாம் ஒருங்கே அறியும் அறிவு; உணர்த்தும் அறிவு. அஃது ஒன்றே. உயிர்கள் செயற்கையால் அறிவன, ஒன்றொன்றாகச் சுட்டிச் சார்ந்த

* "I have always felt that the real paralysis of Indian life and thought began when the acharyas were exalted over the Rishis, when cold formalism superseded passionate devotion, and when categories were prized above realisations"—Sri K. S. Ramaswami Sastri in his Foreward to Sri Rudram—Tamil commentary.

தன் வண்ணமாய் அழுந்தி ஏகதேசப்பட்டு அறிவன; அறிவிக்க அறிவன. அவை பல. தனி அறிவில் பொருள். உயிர்களின் பிறப்புக்குக் காரணமாக உள்ளவை. இனி, சங்கரர் கொண்ட கொள்கைகளுள் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கது **அத்வைதம்** என உபநிடதங்களுள் வரும் சொல்லுக்கு அவர் கொண்ட பொருள். இச்சொல் பல இடங்களில் வரினும், சாந்தோக்கியத்தில் அது வரும் இடம் பற்றியே பெரிதும் ஆராயப்படும்.

சுவேதகேது என்னும் குமாரனுக்கு அவன் தந்தை முதற்பொருளை அறிவுறுத்தத் தலைப்பட்டு, முதற்கண் பின்வருமாறு கூறுகிறான். "ஏ நல்லோய்! இது முதற்கண் ஒன்றேயாய், சத்தாகிய, அத்விதீயமாகிய பிரமமே ஆக இருந்தது."

இத் தொடரில் **இது** என்றது பெயரும் வடிவும் உள்ளதாய் நம்மால் அறியப்படும் உலகை. **முதற்கண்** என்றது இவ்வுலகு காரியப்படுதற்கு முன், அதாவது சிருட்டிக்கு முன் என்றபடி. எனவே, இவ்வுலகு காரியப்படுதற்கு முன், தான் வேறு புலப்படாது, காரண ரூபத்தில் முதற்பொருளை ஆதாரமாகக் கொண்டு அவனிற் பிரிப்பின்றி இருந்தது என்பது இத்தொடரின் திரண்ட கருத்து.

இத்தொடர்க்குச் சங்கரர் கொண்ட பொருள், 'முடிந்த உண்மைப் பொருள் (Ultimate reality) இருப்பு மாத்திரமாகிய, ஒன்றேயான பிரமமே' என்பது. அவர் கருத்தின்படி **அத்விதீயம்** என்பது இரண்டாவதொரு பொருளின் இன்மையைக் குறிக்கும். எனவே, **பொருள் ஒன்றே** என்பது முடிபு. பிரமம் அறிவு மாத்திரமாயிருப்பது. அதற்கு வேற்றினமாகிய சடப்பொருள்களையோ, ஒத்த இனமாகிய அறிவுள்ள உயிர்களையோ பிரமத்திற்கு வேறாகக் கொண்டு உரைத்தல் பொருந்தாது. இன்னும், பிரமம் தனக்கு உள்ளே கூட அறிவை உடையது என்றாற்போல குணகுணி பாவமோ, அவயவ அவயவிபாவமோ தோன்ற உரைக்கக்கூடாது. அறிவு மாத்திரமாக உள்ள கேவலம் ஒன்று எனப்படும் என்பர்.

இவ்வாறு, இவர், அத்விதீயம் என்னும் சொற்குப் பொருள் ஒன்று எனக் கொண்டதோடு, தமது ஒரு பொருட் கொள்கையை வலியுறுத்தி (விஜாதீய, சஜாதீய, சுவகத பேதங்கள் இன்றிக்) **கேவலம்ஒன்று** எனக் கூறுதலால், இவர் மதம் **கேவலாத்துவிதம்** எனப்படும்.

(ii) இராமாநுஜர்: இவர் சங்கரர்க்குப் பின் இருநூறு ஆண்டுகள் கழித்து, செங்கற்பட்டு மாவட்டத்தில் தோன்றியவர். ஆழ்வார்களுடைய திவ்வியப் பிரபந்தங்களின் பத்தி நெறிக்கு மாறுபடாதபடி பிரம சூத்திரங்களுக்கு உரை செய்து, சங்கரர் கொள்கையை மறுத்து மதம் ஸ்தாபித்தார்.

மேலே காட்டிய **அத்விதீயம்** என்னும் சொற்குப் பொருள், சங்கரர் கொண்டது போல, **ஒன்று** என்றே கொண்டாராயினும், மேற்காட்டிய வாக்கியத்தின் தாற்பரியத்தை வேறாகக் கொண்டார். அரசன் ஒருவன் இருந்தான் என்றால், அவனுக்கு நாடில்லை; குடிமக்கள் இல்லை; அவனும் ஆடையோ அணியோ ஒன்றும் இன்றிக் கேவலம் ஒருவனும் நிருவாணியாய் உளன் என்று யாரும் கொள்ள மாட்டார். ஆதலினால், உலகமாகிய உடைமையும், உயிர்களாகிய அடிமையும், அனந்த கலியாண குணங்களாகிய பண்பும் முதல்வனுக்கு இல்லை என்றல் பொருந்தாது. பாசமும், உயிரும், அனந்தகலியாண குணமும் முதல்வனுக்கு விசேடணங்களாக வேதங்களுள் கூறப்படுதலின், அவற்றால் விசேடிக்கப்பட்டு **விசிட்டமாய் உள்ள பிரமம் ஒன்று** என்பதே மேற்படி வாக்கியத்தின் தாற்பரியம் என நிறுவினார். இவ்வாறு இவர் தம் கருத்து விளங்குதற்கு விசிட்டம் என்னும் அடையை **அத்வைதம்** என்னும் சொல்லோடு கூட்டி மொழிந்தமையின், இவர்மதம் விசிட்டாத்வைதம் எனப்பட்டது.

இவர் கொண்ட தாற்பரியப் பொருள் சிவநெறிக் கொள்கைக்கு ஒத்ததே; ஆயினும், அத்விதியம் என்னும் சொற்குப் பொருள் ஒன்று என உரைத்தலை சைவர் உடன்படுவதில்லை. அப்பொருள் ஒன்றே (ஏகமேவ) என முன் வந்த சொல்லாலேயே கொள்ளக்கிடக்கின்றது; மீண்டும் கூறுதல் கூறியது கூறுதல் ஆம். உயிர்க்கும் முதல்வனுக்கும் உள்ள சம்பந்தத்தை உணர்த்தும் சொல்லே அத்விதீயம் என்பது. அது உயிரும் கடவுளும்

பொருள் வகையால் இரண்டேயாயினும், செலுத்தப்படுவதும் செலுத்துவதுமாக உடனிற்கும் கலப்பினால் பிரிப்பின்றி ஒன்றேயாய் நிற்றலைக் குறிக்கும் என்பது சைவர் கொண்ட பொருள்.

இங்ஙனம் சிவநெறியோடு மாறுபட்ட கொள்கைகள் தமிழகத்தே மக்களிடைப் பரவிய காலத்தில் அவற்றை அவ்வப்போது மறுத்து வேதாகமங்களின் உண்மை முடிபை உரைத்து வந்தவர்கள் ஹரதத்தாசாரியர், கச்சியப்பசிவாசாரியர், வாசீச முனிவர் முதலாகப் பலர் இருப்பினும், **மெய்கண்ட முதல்வர்** ஒருவரே உண்மையின் புணர்ப்பு இன்னது எனக் கோவைப்படுத்து உணர்த்தும் திருவருட் செங்கதிரவனாகத் தமிழகத்தே திகழ்வாராயினர்.

3. **அரதத்தர்**: இவர் ஒன்பதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில், சோணாட்டில், கஞ்சனூரில், வைணவக்குடியில் தோன்றியவர். இளம் பருவத்திலே சிவபிரான் திருவருள் பெற்று அற்புதங்களாலும், வேதப்பிரமாணங்களாலும் சிவபிரானது முழுமுதற்றன்மையினையும் முப்பொருள் உண்மையினையும் தெளிவித்தருளினார். இவர் அருளிச் செய்துள்ள நூல்கள் **சுருதிசூக்திமாலை, பஞ்சரத்தின மாலிகை** முதலியவை. இவை வடமொழியில் உள்ளவை; தமிழ் மொழி பெயர்ப்புக்களுடன் வெளியிடப்பட்டுள்ளன.

சுருதிசூக்திமாலையுள் கூறப்படும் பொருள்கள் அறிஞர்களால் சிந்திக்கத்தக்கவை. அது வேதங்களின் பொருண் முடிபைக் கோவைப்படுத்திக் கீழே வருமாறு கூறுகிறது:—(i) சிவபெருமான் உயிர்களின் வணக்கத்திற்கு உரியவர்; (ii) அவர் அருட்குணங்களால் நிறைந்தவர்; (iii) அவரேகாயத்திரி மந்திரத்தின் முக்கியப் பொருளாகிய உயிர்ப்பிரேரகர் ஆவர்; (iv) அவரே மகாநாராயண உபநிடதத்திற் கூறப்படும் தகர வித்தையில் உபாசிக்கப்படும் பொருளாக உள்ளார்; (v) அவரே வைதிக ஆராதனையாகிய வேள்விக்கு இறைவர் ஆவர்—என்னும் ஐந்து உண்மைகளின் மேல் வைத்து வேதங்களின் தாற்பரியத்தை உணர்த்துகின்றார்.

இதன் கண் 151 சுலோகங்கள் உள்ளன. அவற்றில் இரண்டு சுலோகங்களின் பொருள் இங்கே தரப்படுகின்றது:—

(அ) 47-ஆம் சுலோகம்: "மகேசுவர, நீ அருளிச்செய்த நூல்கள், நீ உலகத்தை இடமாகக் கொண்டு தங்கி இருத்தல் பற்றி, உன்னை **உலக உருவினன்** என உபசாரத்தாற் கூறுகின்றன. வேதத்தின் நுண் பொருள்களை உணரவல்ல ஞானிகள் அதன் தாற்பரியத்தை அறிகின்றார்கள்; மற்று மந்தமதிகளாக உள்ளவர்கள் உபசாரம் என்பது அறியமாட்டாது சொன்மாத்திரையே பற்றி உண்மை என்று மயங்குவர்."

(ஆ) 155-ஆம் சுலோகம்: "(இறைவனே!) வேதசிரசு உன் உபாசனையில் (சிவோஹம் அஸ்மி என்றாற்போல) அத்வைத பாவனையை விதிக்கின்றது. அதுபற்றிச் சீவான்மாவுக்கும் பரமான்மாவுக்கும் முற்றொருமை (நிருபசரித ஐக்கியம்) கூறுதல் பொருந்துவது அன்று; என்னை? கருடோஹம் பாவனை செய்வோன் அம்மந்திரத்தின் வேறே என்பது தெளிவு. ஆயினும், அப்பாவனை அரவின் நஞ்சை நீக்கத் தவறுவதில்லை. (இவ்வாறே உபநிடதங்கள் கூறும் அத்வைத பாவனை உயிரின் மூல மலத்தை நீக்குவதற்கு இன்றியமையாதது ஆகின்றது)".

குறிப்பு: 'பிரமம் ஒன்றே உள்பொருள்' எனவும், 'அத்வைதம் என்னும் சுருதி உயிர் பிரமத்தின் வேறன்று, உயிரும் பிரமமும் ஒன்றே என்பதை உணர்த்தும்' எனவும் சங்கரர் நிறுவினர் என மேலே கூறினோம். இங்குக் காட்டிய அரதத்தாசாரியர் திருவாக்குக்கள் சங்கரர் கொள்கையை மறுத்து எழுந்தமை காண்க.

இன்னும், சங்கரர் வேதத்தின் கன்ம காண்டத்தைப் பொருட்படுத்தாது தள்ளி முக்கிய உபநிடதங்கள் மாத்திரையே பற்றிப் பொருணிச்சயம் உணர்த்துகிறார். ஆனால், அரதத்தாசாரியர் வேதம் வேதாந்தம் இரண்டையும் சமமாகப் பிரமாணம் எனக்கொண்டு ஆராய்ந்து பொருணிச்சயம் உணர்த்துகிறார் என்னும் வேறுபாடும் நினைவிற் கொள்ளற்பாலது. அரதத்த ஆசாரியர்கொண்ட விரிந்த ஆராய்ச்சி முறையே சைவர்களால் கைக்கொள்ளப்படுவது.

இனி, மத்துவர் மெய்கண்ட முதல்வர் காலத்துக்குப் பின்னே தோன்றியவர் ஆயினும் மெய்கண்ட நூல்களின் பொருணிலை

தண்ணார் தமிழளிக்கும் தென்பாண்டி நாட்டகத்தே திருக்குற்றால மலைச்சாரலில் ஒரு சிற்றூர் உண்டு. அது குறிஞ்சிவளம் மிக்கது; காமர் பூஞ்சோலை கவினுற நிறைந்தது; 'பைம்பொழில்' என்னும் பெயரால் அழைக்கப்பட்டது. தற்போது அப்பெயர் உருக்குலைந்து 'பம்புளி' என்று வழங்கப்படுகிறது. பம்புளிப்பட்டணம், பண்புளிப்பட்டணம், கம்புளிப்பட்டணம், பண்பை, பண்பொழி என்றும் பலவாறு சொல்லப்படுகிறது. இவ்வூர் தென்காசி புகைரதச் சாலையினின்றும் வடமேற்கே ஏழுகல் தூரத்துளது. இச்சிற்றூருக்கு வடமேற்கே மூன்று கல் தொலைவில் செடி கொடி மரங்கள் யாவுமில்லாத ஒரு சிறு மலை இருக்கின்றது. அதைத் 'திருமலை' என்ற பெயரால் அழைக்கின்றனர். அம்மலையின் வளத்தைக் குறத்தியின் வாய்மொழியாகக் கூறுதும்.

“ சந்திநொறுஞ் சிந்தமுத்த
மீந்தெனக்கால் வீசும்
சாதிகிளை மீதுகிளி
வேதமுறை பேசும்
மந்திகனி கொண்டுமத
நந்தியின்மேற் சாடும்
வானுலகின் பூவெடுத்துக்
கானவர்கள் சூடும்
அந்திதொறு மைந்துவகைத்
துந்துபிகள் முழங்கும்
ஆற்றெலிநென் காற்றெலிவான்
மேற்றிசையைப் பிளக்கும்
செந்தமிழ்மா முனிமகிழ்ந்து
சந்ததமும் போற்றும்
செங்குவளைத் திருமலைத
னெங்கள் மலையம்மே ”

இச்சிறு மலைமீதே முருகப்பெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கின்றார்.

இக்குன்று ஏறக்குறைய 300 அடி உயரமிருக்கலாம். பாறையிலேயே வெட்டப்பட்ட படிக்கட்டுகள் இருக்கின்றன. குன்றின் தென்புறமிருந்தே மேலே ஏறவேண்டும். அடிவாரத்தில் படிகள் தொடங்குமிடத்தே ஒரு விநாயகர் கோயில் இருக்கிறது. சுமார் 500 படிகள் உள்ளன. ஏறிச்செல்ல கால் மணிநேரம் பிடிக்கிறது. மேலே சென்றதும் முதலில் ஒரு உச்சிப் பிள்ளையார் கோயிலைக் காணலாம். அதனருகே ஒரு சிறு பொய்கை உண்டு. அதைத் 'திருக்குவளைச் சுனை' என்கின்றனர். மழைநீர் நிறைந்து தேங்கி நிற்கின்றது. எக்காலத்தும் நீர்வற்றாதிருக்கின்றதாம். அதில் எவரும் இறங்கிக் குளித்தல், கைகால் கழுவு

யைத் தெளிய உணர்தற்கு அவர் மதமும் உணரத்தக்கது. ஆதலினால், அது பின்னர்ச் சுருக்கமாகத் தரப்படுகின்றது.

(iii) மத்துவர் கொள்கை: மத்துவர் என வழங்கும் ஆனந்த தீர்த்தர் என்பவர் சங்கரர், இராமாநுஜர் என்னும் மதாசாரியர்களுடைய கொள்கைகளை மறுத்து, பிரம சூத்திரங்களுக்கு உரை எழுதினர். உயிரும் கடவுளும் வேறு வேறான பொருள்களே என்னும் அடிப்படையின் மேல் இவர் கொள்கை இருத்தலினால், இவர் மதம் பேதவாதம் எனப்படும்.

'திருமாலே உயர்ந்த தெய்வம்; அவர்க்குச் செய்யும் பக்தியே முத்திக்குச் சிறந்த சாதனம். முத்திநிலையில், உயிர்கள் ஸ்ரீவைகுந்தத்தில் இறைவனோடு ஒத்த கருத்துடையவைகளாய் இருக்கும். இவ்வாறு முதல்வனும் உயிர்களும் இடவொருமையும், கருத்தொருமையும் உடைமையே ஐக்கியம் ஆகும். உயிர்கள் அடிப்படையில் சத்துவம், இராசதம், தாமதம் என்னும் குணங்கள் பற்றி மூவகைப்படும். ஆதலால், அவை அடையும் முத்தி நிலையும் மூன்று வகைப்பட்டு இருக்கும். அவை (i) இன்பமே உள்ள முத்தி, (ii) இன்பமும் துன்பமும் உள்ள முத்தி, (iii) துன்பமுமே உள்ள முத்தி என்பவை. இவை மத்துவர் கொள்கையின் சுருக்கம்.

இவர் காலம் கி. பி. 1238 முதல் 1318 வரை. ஆதலினால், மெய்கண்ட தேவரும் அவர் தம் மாணாக்கர் அருணந்தி சிவனாரும் இவர் காலத்துக்கு முற்பட்டவர்கள் ஆவர், உமாபதிசிவனார் இவர் மதத்தை அறிந்திருத்தல் கூடும். (தொடரும்)

தல் முதலியன கூடாது. நீரைக் கலன்களில் மூகந்து வந்து கரைப்புறத்தே பயன்படுத்திக் கொள்ளவேண்டும். தண்ணீர் மிக்க தூய்மையாக இருக்கிறது.

கோயிலுக்கு வெளியே ஒரு புளியமரத்தினடியில் ஒரு கல்லில் வேலும் மயிலும் செதுக்கப்பட்டிருக்கின்றன. அதில் 'உத்தண்ட வேலாயுதம்—ஆதிமூல நிலையம்' என்றும் பொறிக்கப் பெற்றிருக்கின்றது. அதுவே பழைய கோயிற்குறி என்று சொல்லப்படுகிறது.

திருமுருகன் திருமுன் கிழக்கு நோக்கியிருக்கின்றது. ஆனல் கோயில் வாயில் தெற்கு நோக்கியுளது. குமரநாயகன் திருவுருவக்கோலம் கண்டவர் மனதைக் கவரும் வனப்பு மிக்கது; அக்காட்சியைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காண விழையா என்பது ஒருதலை. அவ்விக்கிரகம் மலைக்கு அருகே அரைகல் தூரத்தே ஓடும் அனுமான் நதி என்ற ஆற்றின் தென்கரையிலுள்ள கோட்டைத் திரடு என்ற இடத்திலிருந்து கொண்டுவரப்பட்டதாகச் சொல்கின்றனர்.

அழகிய சிறு கோயில். அதை இப்பொழுதுள்ள நன்னிலைமைக்குக் கொண்டு வந்தது ஒரு மங்கையர் திலகத்தின் மாண்புறு செயலாகும். அவர் மறவகுல மாது; திறமிகு கற்பின்மிக்கார்; துறவற மேற்கொண்ட தூய்மையார்; சிவகாமிப் பரதேசி என்ற பெயரினர். எங்கும் பொருள் தண்டி இப்பொழுதுள்ள கோயிலுக்குத் திருப்பணி செய்தவர் அத்துறவியே யாவர். மேலும் கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைப் பிறர் கைக்கொள்ள அவ்வம்மையார் நீதிமன்றத்தில் வழக்காடி அந்நிலங்களைக் கோயிலுக்குரித்தாக்கி, பூசை நைமித்திகங்கட்கான ஏற்பாடுகளைச் செய்வித்தார். கோயிலுக்கு 200 கோட்டை விரைப்பாடு நிலங்கள் இருக்கின்றன. ஆண்டு வருமானம் சுமார் ரூபா 20,000 என்று தெரிகிறது. அருந்திருப்பணி ஆற்றிய அம்மையார் 50 ஆண்டுகட்கு முன்பு அறுமுகச் செவ்வேள் அடி நிழலெய்தினர்.

கோயிலுக்கு வெளிப்பிரகாரத்தில் வடமேற்கு மூலையில் ஒரு பழைய காளிகோயில் இருக்கிறது. ஆண்டவனை வழிபட வருவோர் தங்குவதற்காக கோயிலுக்குச் சொந்தமான சில விடுதிகள் மலைமீது கட்டப்பட்டிருக்கின்றன. கோயிலில் ஒரு சிறு நூல் நிலையமும் இருக்கின்றது. சைவத்தையும் தமிழையும் பற்றிய சிறந்த நூல்கள் அங்கு இருக்கின்றன. சித்திரை பௌர்ணமி, தைப்பூசம், கந்தர் சஷ்டி இத்திருவிழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன.

இத்தலத்தைப்பற்றி எழுந்துள்ள நூல்களைப்பற்றிச் சில சொல்வது இன்றியமையாதது. முருகதாசக் கவிராயர் என்னும் சிவராமலிங்கம் பிள்ளை என்பவர், திருமலைத் தல புராணம், திருமலைக் குமரனந்தாதி, திருமலைக் குமரன்திருப்புகழ், திருமலைக்குமரன் பதிகம், திருமலைக்குமரன் வண்ணம், திருமலைக்குமரன் சிங்காரச்சிந்து, சேவற்கும்மி இவைகளை இயற்றியிருக்கின்றனர். தலபுராணம் பதினைந்து சருக்கங்கள் கொண்டது. சிவகாமிப் பரதேசி திருப்பணிச் சருக்கம் என்பது இந்நூலில் குறிக்கத்தக்கது. மேலும் புலவர் புராண ஆசிரியரான நெல்லையம்பதி திருப்புகழ்ச் சுவாமிகள் என்ற தண்டபாணி சுவாமிகளைப்பற்றியும் ஒரு சருக்கம் இருக்கிறது. திருமலைக்குமரன் பதிகத்தினின்றும் கீழே ஒரு செய்யுள் தருதும்.

"பந்தமென்னுந் திண்கயிற்றுற்
கட்டுண்டு எளியேன்
பதைபதைத்து நடுநடுங்கிப்
பட்டிடும்பா டெல்லாம்
தந்தைநீ யறிந்திருந்துந்
தயவிலாத வன்போல்
சன்மார்க்க ருடன்கூடித்
தானுமுறைந் தனையோ
மைந்தனு னிடம்போ
யென்குறையைச் சொல்வேன்
வையகத்தி லுனையலது
வேறுகதி யிலையே
சிந்தைதா னிரங்கியருள்
சிவசமய குருவே
திருமலைமே வுங்குமர
தெய்வசிகா மணியே."

இன்னும் செங்கோட்டை கவிராஜ பண்டாரத்தையா என்பவர் 'திருமலை முருகன்

பிள்ளைத்தமிழ்' என்ற நூலை இயற்றியிருக்கிறார். அதினின்றும் அழகிய பாடல் ஒன்று பின்வருமாறு:—

"நொந்து கமழ்ந்திடு குஞ்சியு
முவிரு குலமணி மௌலிகளுங்
கோக நகங்களொ ராறு
மலர்ந்தன குளிருந் திருமுகமுஞ்
கந்த மணங்கமழ் கந்தர
முங்கிரி தண்டிய திண்புயமுந்
நனியயி லுங்கர தலமு
மிலங்கிய சந்துறு நடமார்புந்
தொந்தி தருஞ்சிறு பண்டியு
மேலணி சுந்தர வரைஞாணுந்
துகிலும் பரிபுர பதமுங்
கொடுதுயர் துலையும் படியடியார்
சிந்தையி னின்று நடம்புரி
யுங்குக செங்கோ செங்கீரை
திருமலை யறுமுக சரவண
பவகுக செங்கோ செங்கீரை"

மேற்சொன்ன நூல்களேயன்றி மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் 'கலைமகள்' என்ற மாத இதழின் அனுபந்தமாக "திருமலையாண்டவர் குறவஞ்சி" என்ற ஒரு நூலை வெளியிட்டுள்ளார்கள். தொடக்கத்தே குறத்தி மலைவளம் கூறுவதாகக் குறிக்கப்பெற்ற செய்யுள் இந்நூலினின்றும் எடுக்கப்பட்டதே. நூல் பதிப்புரையில் அய்யரவர்கள் இதனை இயற்றிய ஆசிரியர் பெயர் தெரியவில்லை யென்றும், இதன் ஏட்டுப் பிரதியொன்று 'குற்றாலக் குறவஞ்சி' ஆசிரியரான திரிகூடராசப்பக் கவிராசர் வீட்டிலிருந்து தமக்குக் கிடைத்ததென்றும் கூறி யிருக்கிறார்கள். நூல் முழுவதும் இல்லை. 90-ஆம் பாட்டின் முற்பகுதி வரைதான் கிடைத்திருக்கிறது.

மற்றும், "ஒருபது மிருபது..." "வனசமொத்த பதகுருநாதா...." என்ற தொடக்கத்த அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ்ப் பாடல்கள் இரண்டு இத்தலத்தைப்பற்றிய தென்தலபுராண இறுதியில் சேர்க்கப் பெற்றிருக்கின்றன. சைவ சித்தாந்த மகா சமாஜம் பதிப்பித்த திருப்புகழில் மேற்சொன்ன இரு செய்யுட்களேயன்றி "படுகொலையே மிகுந்து", "வரிவிழி பூசலாட..." என்ற இருபாடல்களையும் சேர்த்து நான்கும் திருமலை (ஸ்ரீசைலம்) என்ற ஆந்திர நாட்டிலுள்ள தலத்தைப் பற்றியன என்று குறிக்கப்பெற்றிருக்கின்றது.* தேவாரத்திற் கூறப்பட்ட திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்) என்ற தலத்தைப்பற்றி இந்நான்கு பாடல்கள் எழுந்தனவா அல்லது இக்கட்டுரைப் பொருளான திருமலையைப் பற்றி எழுந்தனவா என்பது ஆராயத்தக்கது.

*நான்கு பாடல்களிலும் 'திருமலை' என்றே கூறப்பட்டிருக்கிறது.

—சித்தாந்தம், 1940.

இராமேசுவரம் தேவாரப்பதிகக் கல்வெட்டு திறப்பு விழா

இராமேசுவரம் ஸ்ரீ பர்வதவர்த்தினி சமேத இராமநாதர் திருக்கோயிலில், திருஞான சம்பந்தர் திருநாவுக்கரசர் ஆகிய இவர்கள் மேல்படி தலத்தில் பாடியுள்ள தேவாரத் திருப்பதிகங்கள் பொறித்த சலவைக்கற்கள் சென்னை அறநிலையப் பாதுகாப்புத்துறை ஆணையாளர் உயர்திரு அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்களால் 16-6-59 அன்று திறக்கப் பெற்றன.

தேவாரப் பயிற்சி வகுப்புத்தொடக்க விழா

சென்னை மாநில முதல் அமைச்சர் திரு. கே. காமராஜ் அவர்கள் இராமேசுவரம் திருக்கோயிலுக்கு 20-6-59 இரவு விஜயம் செய்தார்கள். கோயில் நிர்வாகஸ்தர்கள் பூர்வ கும்பம் கொடுத்து சகல கோயில் மரியாதைகளுடனும் வரவேற்று சுவாமி தெரிசனம் செய்வித்தனர். அது சமயம் கனம் முதல் மந்திரி அவர்கள் மேற்படி திருக்கோயிலில் திருப்பனந்தாள் ஆதீனத்தாரால் தேவாரம் பாட ஏற்படுத்தியிருக்கும் ஓதுவாரைக்கொண்டு சிறுவர்களுக்கு தேவாரம் பாட பயிற்சி செய்துவைக்க தேவாரப் பயிற்சி வகுப்பை திறந்துவைத்து சிறுவர்கள் சிறுமிகளை பாடச் சொல்லிக் கேட்டு மகிழ்ச்சி எய்தினர்.

மச்சவடிவ நெடுமால்

(மச்சாவதாரமும் தத்துவமும்)

பி. ஸ்ரீ.

அறத்தைக் காப்பதற்காகவும் அதர்மத்தை ஒழிப்பதற்காகவும் திருமால் அவதாரம் செய்கிருர் என்பது நம்மவர் நம்பிக்கை. அவதாரங்கள் பல; முக்கியமானவை பத்து. மச்சம் (மீன்), ஆமை (கூர்மம்), வராகம், நரசிங்கம், வாமனன், பரசுராமன், ஸ்ரீராமன் என்ற தசரதராமன், பலராமன், கண்ணன், கல்கி என்ற பத்து அவதாரங்களையும் உரிய காலங்களில் செய்து திருமால் உலகத்தைச் செம்மைப் பெருநெறியில் செலுத்துகிருர் என்பது இந்து சமய நூல்களின் கொள்கை. இந்த அவதாரங்களில் முதல் ஒன்பதும் முன்பு நடந்தவை, இனி நடக்கப் போவது இறுதி அவதாரம் என்பர்.

அவதார தத்துவம்

இந்த அவதாரக் கிரமம் ஒரு வகையில் நவீன விஞ்ஞான பரிணும முறையை நினைவூட்டுகிறது என்று கருதுவோரும் உண்டு. பகவத் கீதையின் கொள்கையைத் தழுவி அவதார ரகசியத்தை விளக்க முயலும் கம்பன் சுந்தரகாண்டத்தில் அனுமன் வாயிலாக,

> அறம்தலை நிறுத்தி, வேதம்
> அருள்சுரந்(து) அறைந்த நீதித்
> திறம்தெரிந்(து) உலகம் பூணச்
> செந்நெறி செலுத்தி, தீயோர்
> இறந்துக நூறித் தக்கோர்
> இடர்துடைத்(து) ஏக ஈண்டுப்
> பிறந்தனன்

என்று கூறியிருப்பது கூர்ந்து நோக்கத் தக்கது.

அறமும் அல்லாததும் போராடப் போராட, வளர்ச்சிப் பெருநெறியில் உயிர்க்குலம் இயங்க முடியும் என்ற சூட்சும பரிணும நெறி ஒன்றைச் தட்டிக் காட்டுகிறது கம்பன் கூறும் அவதார தத்துவம். ஒளிநெறியாகிய அறமும், இருள் நெறியாகிய அதர்மமும் போராடுவது உலக இயற்கை. இந்தப் போராட்டத்தில் அறத்தின் இறுதி வெற்றிக்குத் துணைபுரிவது தெய்வசக்தி. இத்தெய்வ சக்தியே இராமனுகப்பிறந்தது என்பதுமேலே சொன்ன பாட்டின்திரண்ட பொருள்.

'அடி, பிடி, உடை, உதை' என்று வலிமையையே உரிமையாகக் கொண்டு முன்னேறப் பார்க்கும் தீவினையென்ற அசுரசக்தி ஒருபோதும் முடிவான வெற்றிபெற்று வாழ முடியாது. கொல்லுகிறவன் கொல்லப்படுவான். பகைத் தீயை மூட்டுபவன் அந்தத் தீயிலேயே வெந்து போவான். வஞ்சகன் வஞ்சிக்கப்படுவான். பிறர்க்கு வஞ்சகன் தனக்குத் தானே வஞ்சகன். இப்படி ஒரு நுணுக்கமான இயற்கை அறச்சட்டம் ஒன்று உண்டு என்பது வேதமுனிவர்கள் கண்டு காட்டும் ஒரு தனிப் பேருண்மை. இதைத்தான் கம்பன், 'வேதம் அருள் சுரந்து அறைந்த நீதித் திறம்' என்கிருன்.

அன்பை இதயமாக உடைய நீதித் திறத்தாலே தான் உலகம் இயங்குகிறது, உயிர்க்குலம் அறநெறியில் படர்ந்து வளர்கிறது என்பது அருமறைப் பொருள். இந்த நீதித் திறத்தைத் தெரிந்து கருவியாகவும் கவசமாகவும் பூண்டு கொண்டுதான் வாழ்க்கைப் போர்க்களத்தில் உள்ளபடியே முன்னேறிச் செந்நெறி என்ற மெய்ம்மைப் பெருவழியில் செல்லமுடியும் என்பது குறிப்பு.

இப்படி வாழ்க்கைப் பரிணுமத்தில் நாம் முன்னேறுவதற்கு இறையருள் துணை புரிகிறது—இறையருள் இறங்கி வந்து துணை புரிகி

றது என்பர். திருவருள் இறங்கி வருவதை அவதாரம் என்கிறார்கள்.

முதல் அவதாரம்

பரிணாம ஏணியை நினைவூட்டும் முறையில் அமைந்திருக்கும் இந்த அவதார ஏணியில் அடிப்படி மச்சாவதாரம் தான். இந்த அவதாரத்தின் நோக்கத்தையும் இந்த அவதாரத்தில் நிகழ்ந்ததையும் சுருக்கமாகக் கூறிவிடலாம்.

படைப்புக்கடவுளான பிரமன் கண் துயில்கிறான். சோமுகன் என்ற அசுரன் அது தான் சமயம் என்று மறைகளையெல்லாம் கவர்ந்து கொண்டு கடலுக்குள் மறைந்து போகிறான். துயில் உணர்ந்து எழுந்த பிரமன் வேதங்களைக் காணாமல் திகைத்துப் போகிறான். பிறகு இவனும் விண்ணவர்களும் திருமாலைப் பிரார்த்திக்கிறார்கள். இப்பெருமான் ஒரு மீனாக அவதரிக்கிறார். கடலினுள் புகுந்து அசுரனைத் தேடிப் பிடிக்கிறார். அவனைக் கொன்று அவன் கவர்ந்த அந்த மறைகளை மீட்டுக் கொணர்கிறார். அப்பால்அன்ன வடிவமாய் அந்த மறைகளைப் படைப்புக் கடவுளுக்கு உபதேசிக்கிறார். இதுதான் மச்சாவதாரக் கதை.

பொருள் என்ன ?

இனி, ஏற்கெனவே நாம் பொதுவாகத் தெரிந்து கொண்டிருக்கும் தத்துவத்திற்கு இணங்க, இக்கதையின் பொருள் என்னவென்று தெரிந்துகொள்ள முயல்வோம்.

வேதம் என்றால் வித்தை, மெய்யறிவு; அறத்தை அறிவிக்கும் அறிவு. இந்தத் தர்ம புத்தியைத் துணையாகக் கொண்டுதான் பிரமன் படைப்புத் தொழிலை நடத்தத் தொடங்கினான். ஆனால் நிழல் இருந்தால் வெயில் உண்டு; இன்பம் இருந்தால் துன்பம் உண்டு: அப்படியே மெய்யறிவு இருந்தால் பொய்யறிவும் உண்டு.

அசுர சக்தியென்ற பொய்யறிவு மெய்யறிவை மறைத்து விடுகிறது. மெய்யறிவின்றி ஒரு வகையிலும் படைப்புத் தொழில் நடப்பதற்கில்லை. பொய்யறிவை ஒழித்து மெய்யறிவைத் தேடிப் பிடித்துக் கொணர்வதற்கு இறையருள் வேண்டும்; அந்த இறையருள் தான் மச்சவடிவில் கடலுக்குள் இறங்கிய திருமால் என்று மச்சாவதாரக் கதை தெரிவிக்கிறது.

அசுர சக்தியாகிய இருள்நெறி வேதம் காட்டும் ஒளிநெறியின் எதிரி. தேவசக்தி இருள் நெறியை ஒழிக்கப் போராடும் தரும ஒளியின் சக்திதான். தருமத்திற்காகப் போராடுகிறவர்களுக்கு இறையருள் துணை செய்யும். படைப்புக் கடவுளும் தேவர்களும் வேண்டிக்கொள்ள, இறையருள் இறங்கிவந்து துணை புரிந்து அசுர இருளை ஒழித்து ஒளிநெறியாகிய அறத்தை நிலைநிறுத்தியது என்பது மச்சாவதாரத்தின் பொருள்.

பொருளும் உட்பொருளும்

இந்தப் பொருளை, மேலும் தெளிவுப் படுத்திக் கொள்வதற்கும், இதன் நுணுக்கமான சில அம்சங்களை உணர்ந்து கொள்வதற்கும், மச்ச புராணத்தின் முதலாவது மச்சாவதார அத்தியாயத்தைப் படித்துப் பார்ப்பது நலமாகும்.

திருமால் மீனாக வடிவெடுத்துக் கடலுக்குள் புகுந்து வளர்ந்த சில விவரங்களை இந்த அத்தியாயம் சொல்லும் கதையில் காண்கிறோம். 'கருங்கடல் போலும் மாயன்' சிறியதொரு மச்ச உடலுடன் வந்து அவதரித்துக் கடல் புகுந்து முன்னாளில் உயிர்கள் யாவையும் காப்பாற்றினான் என்று கூறத்தொடங்குகிறது இப்புராணம்.

சூரியவம்சத்துச் சக்கரவர்த்தியான வைவச்சுதமனு (வைவஸ்வதமனு)வை இந்த அவதாரத்துடன் தொடர்பு படுத்துகிறது இப்புராணக் கதை. புவிச்சுமையைப் புயத்தில் ஏந்துகிறான் என்று சொல்லும்படி ஆட்சி செலுத்திய பேரரசன் தாயினும் அன்பாய் மன்னுயிருக்கு அருள் சுரந்து ஆட்சி புரிந்தான். இந்த அரசனை 'வன்றிறல் வைவச்சுதமனு' என்கிறது புராணம். 'வன்றிறல்'என்ற பெருந்திறமை அசுரர்களுக்கும் உரியதுதான். ஆனால் சோமுகாசுரன்போல் இந்த அரசன் தன் கடுந்திறமையைக் கொடுமையான வழிகளில் உபயோகித்து நாசமடையாது, அருளாட்சி புரிந்து மச்சவடிவமாய் வந்த திருமாலின் அருளுக்கு இலக்கானான் என்பது

மச்சபுராணத்தில் முதலாவது மச்சாவதார அத்தியாயம் கூறும் கதை.

இந்தக் கதையையும் சோமுகாசுர வதைக் கதையுடன் பிணைத்துப் பார்க்கும் போது மச்சாவதாரத்தின் பொருளும் உட்பொருளும் ஒருவாறு தெளிவுபடும் என்று கருதுகிறேன்.

இராஜரிஷி பேறுபெற்ற கதை

தன் இளமையையும் வலிமையையும் இராஜபோகத்தைக் காட்டிலும் இராஜ்யபாரத்திற்கே உரிமையாக்கி அரசுபுரிந்தவன் முதுமை வந்ததும் மைந்தனுக்கு முடிசூட்டிவிட்டு, தேவியோடும் தவம்புரியப் பொதிய மலையை அடைந்தான். படைப்புக் கடவுளை நோக்கித் தவம்புரிந்தான். விண்ணவர்களும் சித்தர் முனிவர்களும் புடைசூழ அன்னவாகனத்தில் பிரமன் காட்சி வழங்கினான். 'அரசே உனக்கு என்ன வரம்வேண்டும்?' என்று கேட்டான் படைப்புக் கடவுள்.

தாயன்புடன் தரணிகாத்த வேந்தன் தனக்கென்று ஒரு வரமும் கேட்கவில்லை. தேவபோகத்தையும் வேண்டவில்லை; மோட்சம் வேண்டுமென்றும் கேட்கவில்லை. 'ஐம் பெரும் பூதங்களும் அழிந்து போகிற மகா பிரளயத்தில் உயிர்களைப் பாதுகாக்கக்கூடிய ஆற்றல் எனக்கு அருளவேண்டும்; இந்த வரத்தை இன்று இப்போதே தரவேண்டும்' என்று பிரார்த்தித்துப் பெற்றுக்கொண்டான்.

இராஜரிஷியான வைவச்சுதமனு இப்படிப் பெரியதொரு ஜீவகாருண்ய வரத்தைப்பெற்றுக்கொண்டு தன் பர்ணசாலைக்குப் போய்த் தவ வாழ்க்கையைத் தொடர்ந்து நடத்திக் கொண்டிருந்தான். ஒருநாள் தென் புலத்தாருக்கு உரிய திவசத்தை முன்னிட்டு ஒரு நீர் நிலையின் கரையை அணுகித் தர்ப்பணம் செய்யக் கையில் நீரை எடுத்தான். அதில் ஒரு சிறு மீன் துள்ளியெழக் கண்டான். உடனே இரக்கம் கொண்டு அம்மீனோடும் கைப்புனலை அந்தக் குளத்தில் விட்டுவிட்டான்.

அந்தச் சிறு மீனே நீரில் மறைந்து போகாமல் அப்படியே இருப்பது கண்டு அதிசயித்தான். இரக்கம் மேலும் பெருகியது.

இச்சையுறும் தயாவினொடும்
எடுத்ததனைக் கமண்டலத்துள்
இனிதின் விட்டான்.

"எனப்பா என்னை இப்படி விட்டு விடுகிறாய்? இங்கே பெரிய மீன்கள் என்னை என்ன செய்துவிடுமோ என்று அஞ்சுகிறேன்" என்று அந்த மீன் பேசாமல் பேசுவது போலத் தோன்றியது அரசனுக்கு. உடனே அந்த மீனை எடுத்துத் தன் கமண்டல நீரில் விட்டான். பிறகு இராஜரிஷி கமண்டலத்துடன் ஆசிரமத்திற்குப் போனான்.

அறுபது நாழிகைக்குள் மீன் பதினாறு அங்குலமாய் நீண்டுவிட்டது. 'அரசே, எனக்கு இங்கே இடம் போதாது' என்று சொல்லிற்று. ஒரு நீர்த்தாழியில் மீனை எடுத்துவிட்டான். மூன்று முழமாய்த் தடித்து நீண்டது அது. 'இங்கும் இடம் போதாது; அருள்வாய்' என்றது. அருளாளன் அருளின் மகிமையால் அந்த மீன் பாஷையைக் கற்றுக்கொண்டுவிட்டான்.

'நீ வாழ்க!' என்று சொல்லி ஒரு பெரிய கிணற்றில் மீனை விட்டான் அரசன். மேலும் வளர்ந்தது மீன்: 'அகலம் போதாது, மனுவே" என்றது. பளிச்சென்று அதையெடுத்து ஒரு பெரிய தடாகத்தில் கொண்டுபோய்விட்டான். ஒரு யோசனை தூரம் நீண்டு கிடந்தது; 'இங்கும் இடம் போதாதே' என்றது மீன்.

மன்னன் பெரிதும் அதிசயித்து மீனைக் கங்கையாற்றில் விட்டான். அங்கும் மிக வளர்ந்தது மீன். அரசனைப் போற்றி, 'இங்கும் எனக்கு இடம் போதாது, இராஜரிஷியே!' என்றது.

அப்பால் அரசன் அந்த மீனைக் கடலில்விட்டான். அங்கே இரண்டு இலட்சம் யோசனை அளவிற்கு வளர்ந்துவிட்டது மீன். 'என்ன புதுமை இது!' என்று வேந்தன் மனத்தில் பயபக்தி கொண்டான். 'இதுவோ மீன்? வானவர் தலைவனோ? அல்லது தானவர் தலைவன்தான் இந்த வடிவில் வந்து பயமுறுத்தப் பார்க்கிறானோ' என்று எண்ணமிட்டான் அரசன். ஆனால் இருள் நெறியில் செல்லாமல் ஒளி நெறியிலேயே உவந்து சென்றுகொண்டிருந்தவனுக்கு, 'அது அசுர சக்தியன்று, தெய்வசக்திதான்' என்பது மின் வெட்டியது போல் புலனாகிவிட்டது.

'இருட்பகை போக்கும் நம் குல முதல்வனை சூரியனோ?' என்று ஐயுற்றான் ஒரு கணம். 'படைப்புக் கடவுள்தான் வரம்

கொடுத்த பின் சோதிக்க வந்திருக்கிறானோ?' எனத் தனி நின்று ஆலோசித்தான். அறிவால் பன்முறை எண்ணி யெண்ணிப் பார்த்தான். கடைசியாகத் தன் இதயத்தில் வீசிய அருள்-ஒளியில் 'திருமாலே இத் திருக்கோலம்!' எனத் தெளிந்தான்.

தெளிந்ததும், உடல் புளகித்து அருளையே தவமாகக் கொண்டிருந்த அந்த இராஜரிஷி அந்த அதிசய மீனுக்கு வணக்கம் செலுத்தினான். அலைகடலுள் நீண்டு கிடந்த மச்ச வடிவத் திருமால் மனுமுகத்தை வியந்து நோக்கினர். 'மறை காட்டும் அறநெறி பிறழாது உலகளித்தாய் நீ; ஆகையினால் நம்மை உணர்ந்தாய்', என்றார்.

பிறகு அரசனுள்ளத்தை ஊடுருவி நோக்கி, 'மகா பிரளயத்திலே, புவியனைத்தும் வெள்ளம் மூடிவிடும். அந்த இறுதிக் காலத்திலே தெய்வத் தன்மை வாய்ந்த ஒரு நாவாய் உன்னிடம் வந்து சேரும். அதில் பல்வகைப்பட்ட உயிர்த் தொகைகளை நீ பரிவாய் ஏற்றிக் கொள்ளலாம். அந்த நெடும் பிரளய வெள்ளத்திலே எட்டுத் திசையும் மயங்க முட்டி மட்டற்று வீசத்தொடங்கும் ஒரு பெரும் புயல்காற்று. அது தாக்கி அழித்து விடாதபடி நாவாயை நம் கொம்பில் இசைத்துக் கட்டிவிடுவாய்', என்றார் மச்சரூபியாகிய மகா விஷ்ணு.

கடைசியாக வைச்சுதமனுவை நோக்கித் திருமால் 'பிரளயம் முடிந்து கிருதயுகம் என்ற பொன்யுகம் தொடங்கியதும் நீயே புவியெல்லாம் தொழும் புரந்தரனாகி, முனிவர்கள் தொழுதேத்தும் முனியுமாகி, உயிர்களுக்கு இனிதருளும் செம்மலாகித் திகழ்வாய்!' என்று அருள் புரிந்தார்.

அருளாளன் கண்ட தத்துவம்

அச்சமயம் அரசன் திருமாலைத் தோத்திரம் செய்ததாக இரண்டு பாடல்கள் வடமலையப்ப பிள்ளையன் தமிழில் இயற்றிய மச்ச புராணத்தில் காணப்படுகின்றன. இப்பாடல்களில் இந்த அவதாரத்தின் உட்பொருளைக் கண்டுகொள்ளலாமென்று தோன்றுகிறது.

இந்த இரண்டு பாடல்களில் முதலாவது பாட்டு 'பத்து உருக்கோள் விமலா! போற்றி' என்று முடிகிறது. பாற்கடலுள் அரவணை மீது அறிதுயில் புரியும் திருமால் தம் பேரருளால் அவதரிக்கிறார் என்ற கருத்தையும் இப்பாட்டில் காண்கிறோம். தன் இச்சையே சொரூபமாய்க் கோதிலாத இறையருள் அவதரிக்கிறது என்ற குறிப்பையும் இப்பாட்டில் காண்கிறோம். எந்தச் சொரூபமும் இந்த அருளுக்குப் புறம்பானதன்று, இழிவானதன்று என்ற உட்குறிப்பையும் இப்பாட்டில் காண்கிறோம்.

இனி, நாம் இப்பாட்டு முழுமையும் பார்க்கலாம்:

ஆதியாய் நடுவாகி
அந்தமாய், அருவாகி,
அகில ஞானச்
சோதியாய், அகண்டபரி
பூரணமாய், அகிலாண்டத்
தொகுதி யாகி,
கோதிலாச் சுயஇச்சாச்
சொருபமாய், பாற்கடலுள்
குலவும் பாந்தள்
மீதிலே அறிதுயில்கூர்
வித்தகனே! பத்(து) உருக்கொள்
விமலா! போற்றி.

அகண்ட பரிபூரணமாகிய ஞானஜோதி அருளால் அவதரித்தபோது முதல் முதல் மீனாக அவதரித்ததாம்—அந்த அகில ஞானத்திற்கோ, அகண்ட பரிபூரணத்திற்கோ சிறிதும் குறைவில்லாமலே. கடவுளின் வியாபகமே அகிலாண்டத் தொகுதியாக இருப்பதால் எந்த உருவமும் கடவுளுக்குச் சிறிதன்று பெரிதும் அன்று; இழிவன்று, மேன்மையுமன்று. இந்தத் தத்துவத்தை அறிவால் அறிவது போதாது; அறிவால் உள்ளபடி அறிந்து கொள்ளவும் முடியாது. அருளால் பாராது அறிவால் பார்க்க முயன்றால் இருளாகத்தான் தெரியும்; ஒளிநெறி தெரியாது. இந்த உண்மையை நன்குணர்ந்து ஒழுகிய வைவச்சுதமனு தான் கண்ட மீன்வடிவிலும் அகண்ட பரிபூரணத்தைக் கண்டு பேறு பெற்றான்.

அடுத்த பாட்டிலே 'ஞாலம் அனைத்தையும் அளந்து உண்டு உமிழ்ந்தவனே!' என்கிறான். 'ஆதிமூலமே!' என்று ஓலமிட்ட

யானைக்கும் அருள் செய்த முதல்வனை அந்த மீன் வடிவிலேயே கண்டு போற்றுகிறான்.

கோலமெனத் திருக்கோலம்
கொள்வதன்றி, இக்கோலம்
கொண்டாய்! போற்றி

[கோலம் என-பன்றி என.]

என்று போற்றுகிறான். இந்த முதல் அவதாரத்திலேயே இம்மனுவேந்தன் பின்னே நிகழப்போகும் வராகாவதாரம் வாமனவதாரம் முதலியவற்றையும் தீர்க்க திருஷ்டியால் கண்டு கொண்டது போலப் பேசுகிறான்.

அருளின் பார்வை நீளமானது. அறிவுக்கு இப்படி நீளமாய் நெடுநோக்கு நோக்கத் தெரியாது. அருளாளரே தீர்க்க தரிசிகளாகவும் திகழக் காண்கிறோம். எவ்வளவு தீர்க்க திருஷ்டியுடன் வேதமுனிவர்களும் பிற்சான்றோரும் உண்மை நெறியை, அருள் நெறியை, அறநெறியைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்!

நீளப்பார்க்கும் அருள் அதி சூட்சுமமாகவும் பார்த்து விடுகிறது. அசுரப் பெருமையைப் புறக்கணித்துச் 'சிறுமை'யிலும் அருமையாகப் பெருமை காண்கிறது. எத்தகைய பெரு வலிமையாலும் உரிமை கொள்ளாது, பெரும்பணிவுடனும் தாயன்புடனும் தாழ்ந்து செய்யும் அருட்பணியையே உரிமைப் பெரும் பேறாக மதிக்கிறது.

படைப்புக் கடவுளிடத்திலாவது இந்த மனுவேந்தன் பெரும் பிரளய விபத்திலே உயிர்த் தொகைகளைத் தான் காப்பாற்றும் பேறு பெறவேண்டும் என்று வரம் கேட்டான். அப்பால் அடைந்த அருளனுபவத்தின் விளைவாக, மச்சவடிவ நெடுமாலிடம் அத்தகைய வரம்கூட வேண்டவில்லை.

'சீலமுறச் சிறியேனுக்(கு)
இன்னருள் கூர்ந்(து) உன்னருளே
செய்தி' என்றான்.

'கடவுளின் சித்தம்—திருவருள்-எப்படியோ அப்படியே அது இனிது நிறைவேறுவதாக!' என்பதுதான் அருள்வேந்தனின் இறுதிப் பிரார்த்தனை. நமக்கு எது வேண்டும் என்பதை நம்மைக் காட்டிலும் எல்லாமாகிய இறையருள் தானே எளிதில் உணர்ந்து கொள்ள முடியும்? அருளாளன் கண்ட, மச்சாவதாரம் காட்டுகிற, தத்துவ சிகரம் இது எனலாம்.

அவதாரங்களில் மச்சாவதாரம்

தேவர்களும் அசுரர்களும் பாற்கடலைக் கடைந்தபொழுது, மத்தாக நாட்டியிருந்த மந்தரமலை கடலுக்குள் அழுந்திவிடாதபடி ஆமை வடிவில் தாங்கிய கருணை கூர்மாவதாரத்திற்கு உரியது. இரணியாட்சனைக்கொன்று பூமியைக் காப்பாற்றிய இறையருள் வராகாவதாரத்திற்கு உரியது. தீமைக்கும் கொடுமைக்கும் வடிவங்களாக இருந்த இரணியன் இராவணன் முதலான அரசர் அரக்கர் துஷ்ட அரசர் முதலானவர்களை ஒடுக்கி உலகத்தை உய்விக்கும் கருணை நரசிங்கம் இராமன் கண்ணன் முதலான அவதாரங்களுக்கு உரியதாகும். உலகத்தை அளந்து 'வாமனன் மண் இது!' என்று சித்தாந்தம் செய்த கருணை வாமனவதாரத்திற்கு உரியது.

இப்படியெல்லாம் கருணைபுரிந்து தியாகம் செய்து, வேதம் அருள் சுரந்து காட்டும் அறநெறியில் உலகத்தைச் செலுத்திவரும் இத்தகைய அவதாரங்களிலே, மச்சாவதாரம் ஆதியாகவும் அடிப்படையாகவும் உள்ள அவதாரமாகும். இந்த அவதாரத்திலே ஒளி காட்டி நெறி காட்டும் வேதத்தையே கவர்ந்து கொண்டு போன அசுரன் மாய்க்கப்படுவதையும், வேதம் மறுபடியும் உபதேசிக்கப்படுவதையும் காண்கிறோம்.

திருமாலின் இந்த மச்சவடிவம் கொடுமை செய்த அசுரனை வதம் செய்வதற்கு முன் அருள் வேந்தனுக்குச் சிறப்பாக அருள் புரிவதையும் காண்கிறோம். நல்லோரைப் பாது காப்பதும் அல்லோரை அழிப்பதும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாகவே கருதத் தக்கன!

'நமது இன்பமோ, செருக்கோ மிகவும் அற்பமான ஒரு பிராணியின் துன்பத்துடன் ஒருபோதும் கலந்துவிட இடங்கொடுக்கலாகாது' என்று ஆங்கிலக் கவி **வர்ட்ஸ்வொர்த்** பாடியிருக்கிறார். அருள்வேந்தனின் அருளோ சிறு மீனுக்கும் இன்பம் நாடியது; உயிர்க் குலத்திற்குத் தொண்டாற்றுவதையே தவமெனக் கருதியது அருள் நெறியிலே, தியாக நெறியிலே அரும் பெரும் பேறுபெற்றது.

இத்தகைய தனிப்பெரும் பாடத்தை அருள் வேந்தன் கற்கவும், அருள் நெறியையும் அருள் நூலையும் ஒரு சேர ஒழிக்க முயன்ற அசுர இருள் அழியவும் உதவியது மச்சாவதாரம்.

ஆழ்வார்கள் பாடிய திருக்கோயில்கள்

(மலைநாடு)

(மஹாவித்வான் காஞ்சீபுரம் P. B. அண்ணங்கராசார்ய சுவாமிகள்)

—திருநாவாய்—

திருவித்துவக்கோட்டுப் பதியைச் சேவித்ததும் திருநாவாய்ப் பதியைச் சேவிக்க நேருமாதலால் அப்பதியை யநுபவிப்போமாக. இப்பதியை நம்மாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் மங்களாசாஸனம் செய்துள்ளார்கள். நம்மாழ்வாருடைய பாடலம் ஒரு பதிகம். திருமங்கையாழ்வாருடைய பாடல் ஒரு பாட்டு. ஆகவே அந்த வொரு பாட்டை முன்னம் அநுபவிப்போம்.

[பெரிய திருமொழி 6-3-3.]

“ தூவாய புள்ளூர்ந்து வந்துதுறை வேழம்
மூவாமை நல்கி முதலை துணித்தானைத்
தேவாதி தேவனைச் செங்கமலக் கண்ணனை
நாவாயுளானை நறையூரில் கண்டேனே.”

சோழ நாட்டில் நாச்சியார் கோவிலென்று வழங்கப்பெறும் திருநறையூர்ப் பதியைப் பற்றின பதிகத்திலுள்ளது இப் பாசுரம். ஒரு திருப்பதியில் எழுந்தருளியிருக்கு மெம்பெருமானை மற்றொரு திருப்பதியில் சேவிப்பதாகக் கூறுவது ஆழ்வார்கள் பாசுரங்களில் பெரும்பான்மையாகக் காணப்படும். ‘திருநீர் மலையில் கண்ட பெருமானைத் திருக்கண்ணமங்கையில் சென்று காண்போம்; திருவேங்கட மலையில் கண்ட பெருமானைத் திருத்தண்காவில் சென்று காண்போம்’ என்றிங்ஙனே பேசியிருக்கும் பாசுரங்கள் பலப்பல. திருப்பதிகள் வேறுபட்டாலும் திருமூர்த்திகளில் இறையும் வேறுபாடு இலது என்கிற தத்துவத்தைக் காட்டுதலே இத்தகைய சொற்போக்கின் மருமமாகும். “நாவாயுளானை நறையூரில் கண்டேனே” என்றதனால், திருநாவாய்ப் பெருமானுக்கும் திருநறைவூர்ப் பெருமானுக்குமுள்ள ஒற்றுமை நயம் காட்டப்பட்டதாம்.

இங்குத் திருநாவாய்ப் பெருமானிடத்தில் அநுசந்திக்கப்படும் சரிதை கஜேந்திர மோட்சம் என்று உலகப் பிரசித்தமான கதையொன்று. இக்கதையின் ஸாரம் வருமாறு; இந்திரத்யும்னனென்னும் ஓரரசன் மஹாவிஷ்ணு பக்தனாய் ஒருநாள் வழக்கப்படி விஷ்ணு பூஜை செய்துகொண்டிருக்கையில் அகத்திய மாமுனிவன் அவனிடம் அதிதி பூஜை பெறுதற்கு எழுந்தருள, அப்பொழுது அவ்வரசன் தன் கருத்து முழுவதையும் திருமாலைப் பூசிப்பதில் செலுத்தியிருந்ததனால் அம்முனிவனது வருகையை அறியாதவனாய் அவனுக்கு உபசாரமொன்றும் செய்யாதிருக்க, அம்முனிவன் அரசன் செருக்கினால் நம்மை அலக்ஷியஞ்செய்தானென்று மாறாகக் கருதிச் சீற்றங்கொண்டு ‘நீ யானை போலச் செருக்குற்றிருந்ததனால் யானையாகக் கடவை’ என்று சபித்துப் போயினன். அங்ஙனமே அவ்வரசன் யானையாகத் தோன்றினனாயினும் முன்செய்த விஷ்ணு பக்தியின் மகிமையினால் அப்பிறப்பிலும் விஷ்ணு பக்தியையே மேம்படக் கொண்டு காட்டில் திரிபவனாய் நாடோறும் ஆயிரந் தாமரை மலர்களைக் கொண்டு திருமாலை அர்ச்சித்துப் பூஜித்து வருபவனாயினன். ஒரு நாள் பெரியதொரு தாமரைத் தடாகத்தில் அர்ச்சனைக்காகப் பூப்பறிக்கப் போய் இறங்கிற்று. முன்பொருகால் தேவலனென்னும் முனிவன் ஒரு நீர்நிலையில் நின்று தவஞ்செய்து கொண்டிருந்தபோது அவனது காலைப் பற்றியிழுத்து அதனாற் கோபங்கொண்ட அவனது சாபத்தினால் பெரிய முதலையாய்க் கிடந்த ஹூஹூ வென்னுங்கந்தருவன் அவ்யானையின் காலைக் கௌவிக் கொள்ள, அதனை விடுவித்துக்கொள்ள முடியாமல் கஜேந்திராழ்வான் ‘ஆதிமூலமே!’ என்று கூவியழைக்க, உடனே திருமால் கருளன்மீதேறி அப்பொய்கைக்

கரையில் அரைகுலேயத் தலைகுலைய விரைந்தெழுந்தருளித் தனது திருவாழிப் படையைப் பிரயோகித்து முதலையைத் துணித்து யானையை அதன்வாயினின்று விடுவித்து இறுதியின் அதற்கு முத்தியை அருளினன். அப்பெருமான் பஞ்சேந்திரியங்களாகிற பல முதலைகளின் வாயிலே அகப்பட்டுத் துடிக்கின்ற ஸம்ஸாரிகளைக் காத்தருள விரும்பித் திருநாவாயில் திகழ்கின்றுனென்று அநுசந்தித்தாராயிற்று.

மேலே விவரித்த கஜேந்திராழ்வானுடைய சரிதையில் சில ஆராய்ச்சிகளைச் செய்வோம். ஒரு விலங்குக்கு மற்றொரு விலங்கினுல் நலிவு நிகழ்வது கடல் சூழ்ந்த மண்ணுலகில் தினந்தோறும் கணந்தோறும் பல்லாயிரமிடங்களில் ஸம்பாவிதமே யாகும். யானையை முதலை நலிவதும், பசுவைப் புலி நலிவதும், கருடன் பாம்பை நலிவதும் போன்ற பீடைகள் பல்லாயிரக் கணக்கில் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. அவ்வவ்விடங்களில் உதவி செய்ய எம்பெருமான் திருநாட்டினின்று பதறியோடி வருவதாகக் காண்பதும் கேட்பதுமில்லை. எங்கும் நடைபெறுகின்ற காத்தல் தொழில் மறைமுகமாக இருந்து கொண்டே காத்தருள்வதாக நூற்கொள்கை. கஜேந்திராழ்வானுடைய பக்திப் பெருங்காதல் ஒப்புயர்வற்றதாதலால் அவன்பால் விசேஷ கடாக்ஷம் செய்தருள எம்பெருமானுக்குத் திருவுள்ளமுண்டானுல் தான் இருக்குமிடத்திலிருந்து கொண்டே திருவாழிப் படையை ஏவினுல் அடுத்த நிமிஷத்தில் காரியம் நிறைவேறுமென்பதில் தட்டில்லை. திருவாழியாழ்வானைப் பற்றி நம்மாழ்வார் பணிக்குமிடத்து "கருதுமிடம் பொருது-கைந்நின்ற சக்கரத்தன்" என்றுள்ளது. இதனுல் என்னதெரிந்து கொள்ளுகிறோம்; இன்னவிடத்தில் இன்னது செய்யவேணுமென்று திருவாழிக்குத் திருமால் நியமிப்பதும் வேண்டா; இன்னவிடத்தில் இன்னது ஆகவேணுமென்று திருவுள்ளம் பற்றினவளவிலேயே அடுத்த நொடிப்பொழுதில் காரியம் நிறைவேறப் பெறும் என்று தெரிந்து கொள்ளுகிறோம். கஜேந்திராழ்வானுடைய விரோதியையும் இந்தக் கணக்கிலே தொலைத்திருக்கலாம். மடுவின் கரையிலே நேரில் ஒடிவந்த பகவான் தானும் தனது திருக்கரத்தினுல் முதலையை யடித்து முடித்ததாக வரலாறு இல்லையே. "குட்டத்துக் கோள் முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான்" என்றும், "ஆனையின் துயரம் தீரப் புள்ளூர்ந்து சென்று நின்று ஆழி தொட்டானை" என்றும் சொல்லுகிறபடியே திருவாழியாழ்வானை ஏவித்தானே காரியம் நடத்தியிருப்பதாகத் தெரிகின்றது. அந்தத் திருவாழியாழ்வான், 'பொய்கைக்கரையில் திருமால் வந்து ஏவினுல் தான் காரியஞ் செய்வேன்' என்னுமவனல்லனே. திருநாட்டிலிருந்து கொண்டே ஏவினுலும் நினைப்பிட்டாலும் காரியஞ் செய்யத் தட்டில்லையே.

அன்றியும், திருமால் ஸகலப் பிரபஞ்சங்களுக்குமாகக் கூடிய படைப் பளிப்புக் கெடுப்புகளைத் தனது ஸங்கல்ப மொன்றினுலேயே நிறைவேற்றி வருவதாக உபநிடதங்கள் ஓதுகின்றனவே; அந்த ஸங்கல்பம் எங்குப் போயிற்று? அதைக் கொண்டே எளிதாகக் களிற்றைக் காத்தருளியிருக்கலாம். திருமால் நேராக வரவேண்டிய அவசியம் இல்லாதிருக்க வந்தது ஏன்? வந்ததாக எழுதியிருக்கும் புராணம் நம்பத்தக்கதாக இல்லையே! என்று சிலர் சங்கிப்பதுண்டு. இந்தச் சங்கையைத் திருவாய் மொழியில் நம்மாழ்வார் தாமே செய்து கொண்டு ஆச்சரியமான ஸமாதானம் வெளியிட்டிருப்பதை இனி விவரிப்போம். திருவாய் மொழி (3-1-9) "மழுங்காத வைந்நுதிய சக்கரநல் வலத்தையாய், தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே, மழுங்காத ஞானமே படையாக மலருலகில், தொழும்பாயார்க்கு அளித்தால் உன் சுடர்ச்சோதி மறையாதே" என்கிற செய்யுளில் "தொழுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே" என்கிற இரண்டாமடியொன்று தவிர மற்றதெல்லாம் பூர்வ பக்ஷத்தை வற்புறுத்துவன. இரண்டாமடி மட்டும் ஸித்தாந்தத்தைக் காட்டிக்கொடுப்பதாகும்.

பகவத் கீதையில் நான்காவது அத்தியாயம் அவதாராத்யாய மென்றே போற்றப் பெறும்; திருமால்தானே தனது திருவவதாரத்தைப்பற்றி அதிற் கூறுதலால். அதில் "பரித்ராணாய ஸாதூநாம் விநாசாயச துஷ்க்ருதாம், தர்ம ஸம்ஸ்தாப நார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே" என்னும் சுலோகத்தில் ஸாதுக்களைக் காத்தல் துஷ்டர்களைத் தொலைத்தல் அறநெறியைத் தாபித்தல் என மூவகைப்பட்ட

காரியங்களுக்காகத் திருமால் அப்போதைக் கப்போது திருவவதாரம் செய்வதாகச் சொல்லியுள்ளது. இக்காரியங்களை நிறை வேற்ற எம்பெருமான் நேராக வந்து தானாக வேணுமோ என்கிற சங்கையை மேலே காட்டிய கீதையின் சுலோகத்தை விவரிக்கும் முகத்தால் ஸ்ரீராமாநுஜர் ஒருவரே போக்கியருளினர். அவர் தமக்கு மேலெடுத்துக் காட்டிய திருவாய்மொழிப் பாசுரமே கைகொடுத்தது. ஸாதுக்களை ரக்ஷிப்பது ஸங்கல்பத்தினால் ஆக மாட்டாததொன்று என்பது இங்குக் குறிக்கோள். "பரித்ராணாய ஸாதூநாம்" என்ற விடத்தில் ஸாதுக்களாவார் யாவர்? என விசாரித்து முடிவு தரவேண்டியது அவசியமாயிற்று. திருமாலைக் கட்கூடாகக் காணப்பெற வேணுமென்றும் அவனைத் தழுவி முழுசிப் பரிமாறவேணுமென்றும் அவன்றன் வாய் திறந்தொன்று பணிக்கக் கேட்கப் பெறவேணுமென்றும் இங்ஙனே பலவகைப்பட்ட குதூஹலங்களைக் கொண்டவர்களே ஸாதுக்களாவர். அவர்களின் விருப்பத்தை எங்ஙனே ஸங்கல்பத்தினால் நிறைவேற்ற முடியும்? நேராக வெழுந்தருளி ஸேவைஸாதித்தேயாக வேண்டும்.

இவ்விஷயம் ஸ்ரீ கஜேந்திராழ்வானது விண்ணப்பத்தினால் நன்கு விளங்கா நின்றது. முதலையைத் துணித்துத் தன்னெதிரே வந்து நின்று காட்சி தந்த திருமாலை நோக்கிக் களிறு கூறின வார்த்தை இது;— "நாஹம் களே பரஸ்பராஸ்ய த்ராணார்த்தம் மதுஸூதந, கரஸ்த கமலாந்யேவ பாதயோராப்பிதும் தவ" என்பது. என்றேனுமொருநாள் அழிந்தே போகக்கூடியதான இவ்வுடலைப் பாதுகாத்துக் கொள்வதற்காக நான் கரைந்தேனில்லை; திருமாலே! உன்னை நேரில் ஸேவித்து உன்றன் பொன்னடிகளில் இம் மலர்களைப் பணிமாறுவதற்காகவே கரைந்தேன். உன்னை நேரில் வருமாறு அழைத்திலேனாகிலும் நீ நேரில் எழுந்தருள வேணுமென்பதே எனது அவா; அதனை நீ தெரிந்து கொண்டு நேராக வெழுந்தருளினது எனது பாக்கியம் என்றான் கஜேந்திராழ்வான். இதனால் எம்பெருமான் பக்தர்களின் கருத்தறிந்து காரியஞ் செய்பவனென்பதும், அவதரிக்க அவசியமுள்ளபோது அவதரிப்பனென்பதும் பெறலாயிற்று. இத்தகைய அருட்கடலான பெருமான் திருநாவாயில் அமர்ந்துள்ளான்-என்றாராயிற்று.

✻✻✻

கடையம், ஸ்ரீ கைலாசநாதசுவாமி கோயிலில் 28-5-59-ல் பன்னிரு திருமுறைக்கோயில் விழாவிற்கும் நூல் நிலயத் திறப்புவிழாவிற்கும் இலஞ்சி திரு. ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை, எம். ஏ., அவர்கள் தலைமை வகித்தார்கள். திருமுறைக் கோயிலை யானையின்மேல் வைத்து, தேவாரப் பாடல்களுடன் இரத வீதிகளைச் சுற்றிவந்து ஸ்ரீ நடராசர் சந்நிதியில் திருமுறைக்கோயில் பிரதிஷ்டை செய்யப்பட்டது. திருநெல்வேலி மாவட்ட அறநிலயப் பாதுகாப்புத்துறை உதவி ஆணையர் திரு. டி. எச். விவேகாநந்தம் பிள்ளை, பி. ஏ., எல். டி., அவர்கள் பன்னிரு திருமுறைக்கோயிலைத் திறந்துவைத்து, திருமுறைகளின் சிறப்பைப்பற்றிச் சொற்பொழிவு ஆற்றினார்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகம் தமிழ்ப்பேராசிரியர் திரு ஏ. இராமசாமி பிள்ளை, எம். ஏ., எல். டி., அவர்களும், மற்றவர்களும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினார்கள்.

⬥ ⬥ ⬥

மூவலூரில், ஸ்ரீ மார்க்கசகாய சுவாமி கோயிலில் அஷ்டபந்தன மகாகும்பாபிஷேகம் 29-5-59-ல் சிறப்பாக நடைபெற்றது. அறநிலைய ஆணையர் திரு. அ. உத்தண்டராமன், ஐ. ஏ. எஸ்., அவர்கள் திருப்பணிக் கும்பாபிஷேகக் கல்வெட்டைத் திறந்துவைத்தும், கும்பாபிஷேக விசேஷ பிரசுர மலரை வினியோகித்தும், தகுதியும் திறமையும் மிக்க கலைஞர்கட்கும் பணியாளர்கட்கும் பரிசுகள் வழங்கியும் சிறப்புரையாற்றினார்சள். இத்திருவிழாவை நன்முறையில் நடாத்த அக்கோயில் நிர்வாக அதிகாரி திரு. கே. ஜி. இராசன் ஏற்பாடு செய்தார்.

⬥ ⬥ ⬥

பூவாளூர் ஸ்ரீ குங்குமாம்பிகா சமேத திருமூலநாதசுவாமி கோயிலில் பிரமோற்சவம் 13-5-59 முதல் 24-5-59 முடிய நடைபெற்றது.

திருமுறைப் பெருமை*

(கோவை சிவக்கவிமணி)

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கன்மிதப்பி லணைந்தபிரா னடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி

தில்லைவா ழந்தணரே முதலாகச் சீர்படைத்த
தொல்லையதாந் திருத்தொண்டத் தொகையடியார் பதம்போற்றி
ஒல்லையவர் புராணகதை யுலகறிய விரித்துரைத்த
செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழா ரடிபோற்றி

திருமுறைகள்என்றால்என்ன?—சைவ மரபில் தெய்வத் தன்மை வாய்ந்த அருள் நூல்கள் பன்னிரண்டு என்று பெரியோரால் தொகுக்கப்பட்டுள்ளன. அவைகள் தாம் **திருமுறை** எனப்படும். வேறு எந்த நூல்களையும் திருமுறை என்று வழங்கலாகாது. எந்தப் பொருளை எந்தப் பெயரால் உயர்ந்தோர் வழங்கினரோ அதனை அப்பெயரால் வழங்குதலே மரபு என்பர். இது தொல்காப்பியத்தானு மறியப்படும். "வழக்கெனப் படுவது உயர்ந்தோர் மேற்றே, நிகழ்ச்சி யவர்கட் டாகலான", "எப்பொரு ளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர், செப்பின ரப்படிச் செப்புதல் மரபே" என்பன சூத்திரங்கள். பின்னாளில் சிலர் புதுவதாகப் புனைந்த நூல்களையும் திருமுறைகள் என வழங்கலாயினர். அவையெல்லாம் பிழை வழக்கு; உயர்ந்தோராற் கொள்ளப்படா. **"தேவாரம்"** என்பன திருஞானசம்பந்த நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் இம்மூவர் பாடிய திருவாக்குக்களேயாம். மாணிக்கவாசகர் அருளியது **திருவாசகம்** எனப்படும். திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மர் பாடியவை **திருவிசைப்பா** என்ற பெயரால் வழங்கப்படும். இவை எல்லாம் தேவராகிய சிவபெருமானுக்கு ஆரமானவை. தேவின் வாரம் பூண்டவை. எல்லாம் நல்ல வாசகங்கள். தேவனது இசையைப் பாடுபவைகள் தாம். இவ்வாறுள்ள பெயர்க் காரணப் பொருள்பற்றித் தேவாரத்தைத் திருவாசகம் என்றாவது திருவிசைப்பாவைத் தேவார மென்றாவது ஒன்றை மற்றொரு பெயரால் வழங்கலாகுமோ?

அவ்வாறு வழங்கினால் அறிந்தோரால் நகைத்து ஒதுக்கப்படும். அதுபோலவே தான் **திருமுறை** என்ற பெயர் வழக்கும் ஆம்.

திருமுறை எவை?—திருஞானசம்பந்த நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்ற மூவர் அருளிய **தேவாரங்களும்**, மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய **திருவாசகமும்**, திருச்சிற்றம்பலக் **கோவையாரும்**, திருமாளிகைத் தேவர் முதலிய ஒன்பது நாயன்மார்கள் அருளிய **திருவிசைப்பா, திருப்பல்லாண்டு** என்ற இவையும், திருமூல தேவ நாயனார் அருளிய **திருமந்திரமும்**, திருவாலவாயுடையார் முதல் நம்பியாண்டார் நம்பிகள் வரை பன்னிருவர் அருளிய நூற்களின் கோவையாகிய **பதினொராந் திருமுறையும்**, தெய்வச் சேக்கிழார் பெருமான் அருளிய திருத்தொண்டர் புராணம் என்னும் **பெரிய புராணமும்** என்ற இவைகளே ஆம்.

திருமுறைகள் பன்னிரண்டு:—மேலே கூறிய திருமுறைகளைப் பன்னிரண்டாகப் பெரியோர் வகுத்துள்ளார்கள். திருஞானசம்பந்த நாயனார் தேவாரங்களைப் பண் அடைவு படுத்தி மூன்றாக வகுத்து **முதலாவது இரண்டாவது மூன்றாவது** திருமுறைகளாகவும், திருநாவுக்கரசு நாயனார் தேவாரங்களையும் அவ்வாறே பண் அடைவு படுத்தி மூன்றாக வகுத்து **நான்காவது ஐந்தாவது ஆறாவது** திருமுறைகளாகவும், சுந்தரமூர்த்தி நாயனார் அருளிய தேவாரங்களை **ஏழாவது** திருமுறையாகவும் வகுத்துள்ளார்கள். மாணிக்கவாசகர் அருளிய திருவாசகம் திருக்கோவையார் என்ற இரண்டும் சேர்ந்து **எட்டாவது** திருமுறையாகும். திருமாளிகைத்தேவர் முதலிய ஒன்பதின்மர் அருளியவை **ஒன்பதாந்** திரு

---

* கோவை சிவக்கவிமணி திரு. C. K. சுப்பிரமணிய முதலியார் (இப்போது ஸ்ரீமத் சம்பந்த சரணலயத் தம்பிரான்) அவர்கள் 5-11-41-ல் வீரவநல்லூர்க் கோயிலில் நிகழ்த்திய சொற்பொழிவின் சுருக்கம்.

முறையாக வகுக்கப்பட்டன. திருமூலதேவ நாயனர் அருளிய திருமந்திரம் **பத்தாவது** திருமுறை எனப்படும். திருவாலவாயுடையார் முதல் நம்பியாண்டார் நம்பிகள் வரை பன்னிருவருடைய நூல்கள் **பதினேராந் திருமுறை** எனக்கோவை செய்யப்பட்டன. சேக்கிழார் நாயனர் அருளிய பெரிய புராணத்தைப் **பன்னிரண்டாவது** திருமுறையாக வகுத்தனர். இவற்றுள் பதினெரு திருமுறைகளைக் கோவை செய்து வகுத்தவர் நம்பியாண்டார் நம்பிகள். அவ்வாறு வகுப்பித்தவர் அபயகுலசேகர இராசராசசோழ தேவர். அவற்ருேடு பெரிய புராணத்தைப் பாடுவித்துச் சேர்த்துத் திருமுறைகள் பன்னிரண்டென்று தொகுத்துச் செப்பேடு செய்து சிதம்பரத்தில் நடராசர் சந்நிதியில் அரங்கேறச் செய்தவர் அநபாயசோழ சக்கரவர்த்திகள்.

திருமுறைகளின் ஆசிரியர்கள் மேலே கூறிய படி இருபத்தெழுவராவர். திருவிசைப்பாப் பாடிய நாயன்மார்களாவார்:—(1) திருமாளிகைத்தேவர், (2) சேந்தனர், (3) கருவூர்த்தேவர், (4) பூந்துருத்தி நம்பிகாடநம்பி, (5) கண்டராதித்தர், (6) வேணாட்டடிகள், (7) திருவாலியமுதனர், (8) புருடோத்தமநம்பி, (9) சேதிராயர் என்ற ஒன்பதின்மர்கள். பதினொராந் திருமுறையிற் கோவை செய்த நூல்களின் ஆசிரியர்கள்:—(1) திருஆலவாயுடையார், (2) காரைக்காலம்மையார், (3) ஐயடிகள் காடவர்கோன் நாயனர், (4) கழறிற்றறிவார் நாயனர், (5) நக்கீரதேவர், (6) கல்லாடதேவர், (7) கபிலதேவர், (8) பரணதேவர், (9) இளம்பெருமானடிகள், (10) அதிராவடிகள், (11) பட்டினத்து அடிகள், (12) நம்பியாண்டார் நம்பிகள் என்ற பன்னிருவராவர்.

திருமுறைகளின் பாடற்றொகை:—இப்போது கிடைத்துள்ளவை பதினெண்ணாயிரத்து இருநூற்றறுபத்தேழு (18267) திருப்பாட்டுக்கள்.

திருமுறையாசிரியர்களின் பெருமை:—திருமுறையியற்றி யருளிய ஆசிரியர்களுள்ளே பரமகருணாநிதியும் முழுமுதற் கடவுளும் தலைச்சங்கப் புலவருமாகிய திருவாலவா யுடையாரும் ஒருவராய் விளங்குகின்றார். உண்மை நாயன்மார்கள் அறுபத்துமூவருள் காரைக்காலம்மையார், ஐயடிகள் காடவர்கோன், கழறிற்றறிவார் நாயனர் என்னும் சேரமான் பெருமாள் நாயனர், திருமூலதேவ நாயனர் என்ற நால்வர்கள் இவர்களுள் விளங்குகின்றார்கள். சங்கப்பெரும்புலவரும் ஆலவாயவிர்சடைக் கடவுளிடம் நேரில் வாதிட்டுக் கோபமும் பிரசாதமும் பெற்றவரும் முருகப் பெருமான்பால் மேம்பட்ட மெய்யன்புடையாருமாகிய நக்கீரதேவர் இவர்களுள் ஒருவர். முற்றத்துறந்த முனிபுங்கவரும் தவராச சிங்கமுமாகிய பட்டினத்துஅடிகள் இவருள் விளங்குகின்றனர். திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையா ரருள்பெற்றவரும் அவரருளால் தேவாரத் திருமுறைகளை வெளிப்படுத்திய பெருந்தகையாளரும், பெரிய புராணத்தினுக் காதாரவாக விளங்கும் வகை நூலாகிய திருத்தொண்டர் கலித்துறையந்தாதியினை அருளியவரும், சேக்கிழார் பெருமானல் “நங்க ளுதனும் நம்பியாண்டார்நம்பி” என்று துதிக்கப் பட்டவரும் ஆகிய நம்பி யாண்டார் நம்பிகளும், தில்லை நடராசர் “உலகெலாம்” என்று அடியெடுத்துக் கொடுத்தருள அருட்பெரும் பனுவலாகிய பெரிய புராணம் பாடியருளிய தெய்வச் சேக்கிழார் நாயனரும் இவ்வரிசையினை அலங்கரித்து நிற்கின்றார்கள் என்றால் இந்தத் திருமுறை ஆசிரியர்களின் பெருமையினை என்னென்று சொல்வோம்? திருவிசைப்பா ஆசிரியர்களாகிய ஒன்பதின்மர்களில் வைணவர்களாயிருந்து சைவத்திற் பெரியோராய் விளங்கிய திருமாளிகைத்தேவர், புருடோத்தமநம்பி, சேதிராயர் முதலியோர்கள் சைவச் சிறப்பைத் தம் சரிதங்களால் விளக்கி நிற்கின்றார்கள். தேவாரம் அருளிய மூவர் முதலிகளுடைய பெருமையும் மேலே கண்ட நான்கு நாயன்மார்களுடைய பெருமையும் பெரிய புராணம் நமக்கு நன்கு அறிவிக்கின்றது. கருவூர்த்தேவர் சேந்தனர்திருவிசைப்பாக்களே அவர்களது சரிதப்பெருமையைக் காட்டி நிற்கின்றன. சேக்கிழார் பெருமானுடைய பெருமையைப்பற்றித் தில்லை வாழந்தணர்களுள் ஒருவராய், நடராசப்பெருமானுரே எழுதிவிடுத்த கைச்சீட்டைப் பெற்ற பெருமையராய்ச், சைவ சந்தான குரவராய் விளங்கும் உமாபதி சிவாசாரியார் புராணஞ் செய்துள்ளார் என்றால் நாம் வேறென் சொல்லக்கிடக்கின்றது? திருமுறை ஆசிரியர்களுள் சேரமான் பெருமாள் நாயனரும், ஐயடிகள் நாயனரும், கண்டராதித்தரும் முடியுடைப் பெருவேந்தர்கள். மாணிக்கவாசகரும், சேக்

கிழார் சுவாமிகளும் அமைச்சர் பெருமக்க ளாய் விளங்கினர். சுந்தரமூர்த்தி நாயனுரும் நம்பியாண்டார் நம்பிகளும் முப்போதுந் திரு மேனிதீண்டும் பேறுபெற்ற மரபினை விளக்கி யவர்கள். திருமூலதேவர் யோகீந்திரர்; மூவா யிரம் ஆண்டுகள் திருவாவடுதுறையில் அரசின் கீழ் யோகத்தமர்ந்திருந்து ஆண்டுக் கொன் ருக மூவாயிரந் திருமந்திரங்கள் அருளினர். மாணிக்கவாசகர் திருப்பெருந் துறையிலே இறைவனே குருவாக வந்து உபதேசிக்கப் பெற்ற பெருமையுடையார். இவ்வாறு திரு முறை ஆசிரியர்களின் பெருமை சொல்லொ ணுததும் அளக்க முடியாததும் ஆம்.

திருமுறைகளின் பெருமை :—இவை முற் றறிவினராகிய சிவபெருமானுடைய திருவாக் காகும். அவரே எந்தம் பெருமக்களை அதிட் டித்தும், உள்ளிருந்து உணர்த்தியும், முத லெடுத்துக் கொடுத்தும் வெளிப்படுத்திய அருள்வாக்குக்களாம். திருவலாவாய்ப் பெரு மான் தாமே அருளிய திருவாக்காகிய திரு முகப் பாசுரமாகிய "மதிமலி புரிசை" என்ற திருப்பாட்டுப் பதினெராந் திருமுறையின் முகப்பில் நின்று குன்றிலிட்ட பெருவிளக் குப்போல் விளங்குகின்றது. திருமுறைகளின் ஏனைய பாட்டுக்கள் எல்லாம் சிவனுணர்த் திய வழியே, அவனுணர்வே தம்முணர்வாகக் கொண்ட நிலையில் பெரியோர்கள் அருளி யவை. "எனதுரை தனதுரையாக" என்று இவற்றின் தன்மையை விளக்குகின்ருர் ஆளுடைய பிள்ளையார். இவர்களது மனம் வாக்கு முதலிய கருவி கரணங்கள் எல்லாம் உயிரறிவு என்பது சிறிதுமின்றிச் சிவனறிவு மயமாகவே விளைந்தன. ஆதலால் இத்திரு வாக்குக்கள் சிவனுடைய வாக்கு என்ன செய் யுமோ அவற்றை யெல்லாம் செய்ய வல்லன வாயின. திருவாதவூரடிகள் "அறிவாற் சிவனே யாயினர்" என்றுரைப்பர் பேரா சிரியர்.

'தம்மை மறந்து நின்னை நினைப்பவர்' செம்மை மனத்தில் நடமாடும் இறைவனே! என்றழைக்கின்ருர் பட்டினத்துஅடிகள். அவ்வாறு தம்மை மறந்து சிவனேடொன்றிய மனத்தினுள்ளிருந்து வெளிப்போந்தன இத் திருமுறைகள். ஆதலால் இவை செய்தற்கரி யனவாகிய பல அற்புதங்களையும் செய்து மக் களுக்கு திருவருளின் பெருமையினை விளக்கி அருளைத் தேடித்தந்தன. வெள்ளத்தில் ஓடஞ் செலுத்துதல், விடந்தீர்த்தல், உலவாக் கிழி பெறுதல், எலும்பைப் பெண்ணுக்குதல், கடலிற் கல் மிதப்பித்தல், நீற்றறையில் வேவாதிருத்தல், முதலைவாய்ப் பிள்ளை அழைத்தல், ஊமைப் பெண்ணைப் பேசுவித் தல் முதலிய பல அற்புதச் செய்கைகளைச் செய்ய வல்லன ஆயின. இவற்றின் தன்மை களையும் பெருமைகளையும் ஞான சாத்திர மாகிய திருக்களிற்றுப் படியார் எடுத்துப் போற்றிப் பாராட்டுகின்ற தென்ருல் நாமோ அவற்றைப் பேச வல்லோம்? திருமுறைப் பாட்டுக்கள் யாவும் சிவனருள் வாக்குக்களே. ஆதலின் அவை சிவபெருமானது அருளை மக் களுக்கு அன்றும் தேடித் தந்தன; இன்றும் தரவல்லன. இவையே அருட்பாக்கள் எனப் படும். ஏனைய எந்தப் பாடலுக்கும் அப் பெயர் பொருந்தாது. இவற்றுள் சிவசத்தி யாகிய உயிர் விளங்கிக்கொண்டிருக்கிறது. அது எஞ்ஞான்றும் அழியாத - அவியாத — சத்திவாய்ந்தது. இப்பாட்டுக்களைப் பயின்று அதனுல் பிணி நீங்கப்பெற்ருேர் — கண் பெற்ருேர் - மகப்பெற்ருேர் - பொன் பெற் ருேர் என்றிவ்வாறு இம்மைப் பயன்களைப் பெற்றனர் பலர். அறிவு, பத்தி, ஞானம், வைராக்கியம் முதலியவற்றைக் கைவரப் பெற்று மறுமைக்கு உதவும் நலம் செய்து கொண்டோரும் மிகப் பலர். இவை கண் கூடாகக் காணவுள்ளன. ஆதலின் யாவரும் இவற்றிற் பயின்று பயன் பெறக்கடவர்.

நமது கடமை :—எல்லாருடைய வீடுகளி லும் இந்தப் பன்னிரு திருமுறைகளும் இருத் தல் வேண்டும். இவை இல்லாத வீடுகள் சைவர் வீடு எனப்படா. இவற்றிற் பயிலா தவர் சைவர்கள் எனப்படுதல் போலியே யாகும். இவை முற்றும் இலகுவில் நல்ல பதிப்பாக ஏழு ரூபாய் அளவில் கிடைக்கக் கூடிய பேருதவியைச் சென்னைச் சைவ சித் தாந்த மகா சமாசத்தார் செய்துள்ளார்கள். ஒவ்வொருவர் வீடுகளிலும் தனியாகவும் தூய் மையாகவும் இவற்றுக்கென்று சிறு இடமே னும் அமைக்கப்படுதல் வேண்டும். அதனுள் இவற்றை உயர்ந்த தனியாசனத்தில் வைத் துச் சிவனெனவே கண்டு ஒவ்வொரு நாளும் இயன்ற அளவு அகத்தூய்மையும், புறத் தூய்மையும், அன்புங் கொண்டு பூசித்துப் பின்னர் சில பாட்டுக்களேனும் நியமமாகப் பாராயணஞ் செய்து வந்தால் எல்லாத் திமை

களும் நீங்கி எல்லா நன்மைகளும் உண்டா கும் என்பதில் ஐயமில்லை. இது அடியேன் அனுபவத்திற் கண்ட உண்மை.


“இம்மை யேதருஞ் சோறுங்கூறையு
மேத்த லாமிடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோக மாள்வதற்
கியாது மையுற வில்லையே.”

என்பது ஆளுடைய நம்பிகள் மெய்த்திரு வாக்கு. இவ்வாறு வழிபட்டு உலகம் எல் லாம் அன்பு நிறைந்து அருள்பெற்று உய்வதாக!

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


குறிப்பு: இப்போது தமிழ் நாட்டிலுள்ள பல கோயில்களில் திருமுறைக்கோயில்கள் பிர திஷ்டை செய்யப்பெற்று வருகின்றன.

திரு இராமனதீச்சரம்



தழைமயி லேறவன் தாதையோதான்
மழைபொழி சடையவன் மன்னுகாதில்
குழையது இலங்கிய கோலமார்பின்
இழையவன் இராமன தீச்சரமே.

—திருஞானசம்பந்தர்.



திருக்கோணிபுரம் தோற்றம்

ஒருமைபெண்மையுடை யன்சடையன்விடை
யூரும்இவனென்ன
அருமையாகவுரை செய்யஅமர்ந்தென
துள்ளங்கவர்கள்வன்
கருமைபெற்றகடல் கொள்ளமிதந்ததோர்
காலம்இதுவென்னப்
பெருமைபெற்றபிர மாபுரம்மேவிய
பெம்மானிவனன்றே.

—திருஞானசம்பந்தர்

நிலையும் பெருமையும் நீதியுஞ்
சால அழகுடைத்தாய்
அலையும் பெருவெள்ளத் தன்று
மிதந்தஇத் தோணிபுரம்
சிலையில் திரிபுரம் மூன்றெரித்
தார்தங் கழுமலவர்
அலருங் கழலடி நாள்தொறும்
நந்தமை ஆள்வனவே

—திருநாவுக்கரசர்

மற்றொரு துணையினி மறுமைக்குங் காணேன்
வருந்துதலுற் றேன்மற வாவரம் பெற்றேன்
சுற்றிய சுற்றமுந் துணையென்று கருதேன்
துணையென்று நான்தொழப்பட்டவொண்சுடரை
முத்தியும் ஞானமும் வானவ ரறியா
முறைமுறை பலபல நெறிகளுங் காட்டிக்
கற்பனை கற்பித்த கடவுளை யடியேன்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே

—சுந்தரர்

சோழநாட்டிலுள்ள பாடல் பெற்ற சிவத்தலங்களை காவிரியாற்றுக்கு வடபால் உள்ளவை, தென்பால் இருப்பவை என்று ஆன்றோர் பிரித்திருக்கின்றனர். வடபால் அமைந்தவை 93; தென்பால் இருப்பவை 127. பொன்னிமா நதிக்கு வடபால் உள்ள தலங்களில் சீகாழி என்பது ஒன்று. இது தஞ்சாவூர் மாவட்டத்தின் சீகாழி என்ற கோட்டத்தின் தலைநகர். தென் இருப்புப்பாதையில் ஒரு புகைவண்டி நிலையமாகவும் இருக்கிறது.

சீகாழி என்பது இப்போது வழங்கும் பெயர். திருமுறைகளிலும், திருப்புகழிலும் பெரும்பாலும் காழி என்றே குறிக்கப்பட்டிருக்கிறது. இத்திருப்பதிக்கு பன்னிரண்டு திருநாமங்கள் உண்டு. சேக்கிழார்பெருமான்,

பிரமபுரம் வேணுபுரம்
புகலிபெரு வெங்குருநீர்ப்
பொருவில் திருத்தோணி
புரம்பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர்
வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம்
பன்னிரண்டு திருப்பெயர்த்தால்

என்று இப்பெயர்களைக் கூறியுள்ளார். பிரமனும், வியாழ பகவானும் வழிபட்டமையின் பிரமபுரம், வெங்குரு எனவும், அசுரர்களுக்குப் பயந்து தேவர்கள் இங்கு புகலிடமாகக் கொண்டதால் புகலி எனவும், இறைவன் மூங்கில் வடிவமாக சூரபன்மனுக்கு அருள் செய்தமையால் வேணுபுரம் என்றும், எல்லா உலகமும் அழிந்த ஊழிக் காலத்தில் சிவபெருமான் சுத்த மாயையைத் தோணியாகக் கொண்டு உமையம்மையுடன் இங்கு தங்கியிருந்ததால் தோணிபுரம் என்றும், தரையைப் பிளந்து சென்று இரணியாட்சனைக் கொன்ற வராக மூர்த்தி பூசித்ததால் பூந்தராய் என்றும், தலைக் கூறுகிய இராகு வழிபட்டதால் சிரபுரம் எனவும், புறு உருவில் சோதிக்க வந்த அக்கினியால் சிபிச்சக்கரவர்த்தி நற்கதி யடைந்தமையின் புறவம் எனவும், சண்பைப் புல்லால் மாய்ந்த தங்குலத்தவரால் வந்த பழி நீங்கக் கண்ணன் வழிபட்டதால் சண்பை எனவும், காளிங்கன் என்னும் பாம்பும், காளியும் வழிபட்டதால் சீகாழி (ஸ்ரீ காளிபுரம்) எனவும், மச்சகந்தியைக் கூடிய கொச்சையாம் பழிச்சொல் நீங்க, பராசரர் இங்கு வழிபட்டதால் கொச்சைவயம் என்றும், மும்மலங்களும் ஒழிய உரோமசமுனிவர் இறைவனைப் பூசித்தமையால் கழுமலம் எனவும் பன்னிரண்டு பெயர்கள் உண்டாயிற்றென்று தலபுராணம் கூறுகின்றது,

இப்பெயர்களேயன்றி சங்கநிதிபுரம், பதுமநிதிபுரம், சிவாசாரியபுரம், பராசர க்ஷேத்திரம், புனர்ஜன்மபுரம், கிரிபுரம், உமாபதிபுரம், சிவன் முத்திபுரம், நீலகண்ட வெற்பு, மாலை மாற்றுப்பதி, எழுகூற்றிருக்கைப்பதி, இலிங்காடவி, குய்யகாசி, மூலாதார க்ஷேத்திரம் என்ற பெயர்களும் உள்ளன.

திருக்கோயில் நகர் நடுவே நான்கு கோபுரங்களுடன் அழகுற அமைந்திருக்கிறது. பிரமபுரீசுவரர், திருமலைநாயகி, திருஞானசம்பந்தர் இவர்களுக்கு கோயிலினுள்ளே தனித்தனி ஆலயங்கள் உள்ளன. இவைகள் கிழக்கு பார்த்த சந்நிதிகள். சுவாமி கோயில் மகா மண்டபத்தில் சம்பந்தர் உற்சவ மூர்த்தியாக எருந்தருளியுள்ளார். தெற்கு உட்பிரகாரத்தில் முத்துசட்டைநாதரும், திருமாளிகைப் பத்தியில் அறுபத்து மூவரும் கோயில் கொண்டிருக்கின்றனர். மேல், வட பிரகாரங்களில் மேலே மலைக்குப் போகப் படிக்கட்டுகள் இருக்கின்றன. சுவாமி கோயிலை யொட்டி கட்டு மலையில் இருபது புள்ளினம் ஏந்தும் ஐதிகத்தில் தோணியப்பர் எழுந்தருளி யிருக்கின்றார். இதன் தென்புறத்தில் சட்டைநாதர் எழுந்தருளியிருக்கின்றார். இவ்விரு மூர்த்தங்களும் சுதையாலானவை. இவ்விடத்தைத் திருத்தோணிமலை என்பர். சுவாமி கோயிலின் வெளிப்பிரகாரம் வடமேற்கு மூலையில் ஞானசம்பந்தப்பெருமான் இலிங்க வடிவில் கோயில் கொண்டுள்ளார், இதற்கு அணித்தாக திருமலைநாயகி (ஸ்திர சுந்தரி) ஆலயம் உள்ளது.


சிவபெருமான் உயிர்களுக்குக் கருணை காட்டுவது மூவகை மூர்த்தங்களால். அவை குரு, இலிங்க, ஜங்கமம் என்பன. குருமூர்த்தத்தில் மக்கட்கு உபதேசித்தும், இலிங்க மூர்த்தத்தில் பலதலங்களில் எழுந்தருளியும், சங்கம மூர்த்தத்தில் அன்பர்களுக்கு வேண்டுவன அளித்தும் அருள் பாலிக்கிறார். சீகாழிப் பதியில் ஒருங்கே இம்மூன்று மூர்த்தங்களாகவும் எழுந்தருளியிருப்பது மிகவும் சிறப்பு வாய்ந்தது. பெரியநாயகி சமேத தோணியப்பரே குருமூர்த்தம். பிரமதீர்த்தக் கரையில் சம்பந்தருக்கு ஞானோபதேசம் செய்த குரு இவரேயாவர், திருக்கோயிலில் பிரம புரீசுவரர் மூலவராக இருப்பது இலிங்க மூர்த்தம். மலையுச்சியிலுள்ள சட்டைநாதர் சங்கம மூர்த்தம். நரசிங்கத்தைப் பிளந்து அதன் எலும்பைக் கதையாகவும், தோலைச் சட்டையாகவும் கொண்டார். இதை,

துங்கமாமணித் தூணில்வந் திரணியன்
தோள்வலி தனைவாங்கும்
சிங்கவேற்றுரி யரைக்கசைத் துலகெலாந்
தேர்ந்தளந் தவன்மேனி
அங்கம்யாவுமோர் கதையதாய்க் கொண்டதன்
அங்கியாப் புனைகாழிச்
சங்கவார்குழைச் சட்டைநா யகன்றுணைத்
தாமரைச் சரண்போற்றி


என்ற பாடல் விளக்குகிறது. சட்டைநாதர் சிவமூர்த்தங்களுள் ஒன்ருன வைரவமூர்த்தம்.

இத்தலத்தில் இருபத்திரண்டு தீர்த்தங்கள் உள்ளன. பிரமதீர்த்தம் மிகச்சிறப்புடையது. இதன் கரையிலேதான் ஞான சம்பந்தப் பிள்ளையார் அம்பிகையால் ஞானப் பால் ஊட்டப்பெற்றது. இன்னும் காளி தீர்த்தம், பராசர தீர்த்தம், புறவநதி, கழுமல நதி, விநாயகநதி, சூலதீர்த்தம், ஆனந்த தீர்த்தம், வைணவ தீர்த்தம், இராகு தீர்த்தம், ஆழிதீர்த்தம், சங்க தீர்த்தம், சுக்கிர தீர்த்தம், அகத்திய தீர்த்தம், கௌதம தீர்த்தம், வன்னி தீர்த்தம், குமார தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம், கேது தீர்த்தம், அண்ட தீர்த்தம், பதினெண் புராண தீர்த்தம் என்பவைகளும் உள்ளன. பாரிஜாதம் இத்தலவிருட்சம். கொன்றையைப் போல் பூத்து, மாதுளையைப் போல் காய்த்து, மாவைப்போல் பழுத்து முறையே மந்திரம், மணி, மருந்தின் தன்மைகளைப் பெற்று, தன்னை யடைந்தோர்க்கு மலப்பிணி, உயிர்ப் பிணி, உடற்பிணி இவைகளை நீக்கும் பான்மையது என்பது புராணக் கூற்று.

சீகாழிப்பதி பல வகையாலும் மேன்மை பெற்று விளங்குவது. திருஞான சம்பந்தர் திருவவதாரம் செய்து மூன்றும் வயதில் சிவ ஞானம் பெற்ற சிறப்புடையது. திருநாவுக்கரசர் அவரை இங்கு வந்து சந்தித்தது. திரு நீலகண்ட யாழ்ப்பாணர் தேவாரப்பதிகங்களை சம்பந்தருடன் இருந்து யாழில் அமைத்துப் பாடியது. கணநாத நாயனுர் வதிந்திருந்து இறைவனை வழிபட்டது. சுந்தரர், சம்பந்தர் பிறந்த பதியாயினமையில் காலால் மிதிக்கவும் அஞ்சி எல்லைப்புறத்தே நின்றே வணங்கிச் சென்றது. சேரமான்பெருமாள்



சீகாழி திருத்தோணிபுரம்



முத்துச்சட்டைநாதர் ஆலயம்

தம்மை ஆட்கொண்டதைப் பல பாடல்களில் குறிக்கிறார்.

போதையார் பொற்கிண்ணத்
தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத்
தானெனை யாண்டவன்
காதையார் குழையினன்
கழுமல வளநகர்ப்
பேதையா ளவளோடும்
பெருந்தகை யிருந்ததே

என்றும், 'வேறெமையாள விரும்பிய விகிர்தர் வெங்குரு மேவியுள் வீற்றிருந்தாரே' என்றும், 'ஆதியெமையாளுடைய அரிவையொடு பிரிவிலியமர்ந்தபதி' என்றும் கூறியிருப்பதால் அறியலாம். இவர் அருளிய பதிகங்களில் இயற்கைக் காட்சி வர்ணனையைப் பல பாடல்களில் கண்டு மகிழலாம். அகத்துறைகளமைந்த பாசுரங்களும் இருக்கின்றன. கழுமலம் என்ற பெயரில் 7 பதிகங்களுங், காழி என்ற பெயரமைத்து 13 பதிகங்களும், கொச்சை வயம் என்று 3 பதிகங்களும், சண்பைநகர் என்ற பெயரோடு 2 பதிகங்களும், சிரபுரம் என்ற பெயரில் 3 பதிகங்களும், தோணிபுரம் என்ற பெயருடன் 3 பதிகங்களும், பிரமபுரம் என்ற பெயர் வைத்து 15 பதிகங்களும், புகலி என்று 9 பதிகங்களும், புறவம் என்ற பெயருள்ள 3 பதிகங்களும், பூந்தராய் என்று 4 பதிகங்களும், வெங்குரு என 2 பதிகங்களும், வேணுபுரம் என்ற பெயரில் 3 பதிகங்களும் ஆக 67 திருப்பதிகங்களை ஓதியுள்ளனர் ஞானசம்பந்தப் பெருந்தகையார்.

நாயனார் வந்து வழிபட்டது. இன்னும் பலர் வழிபட்டுப் பேறு பெற்றது.

இத்திருப்பதியைப்பற்றிய நூல்கள் எண்ணிறந்தன. திருஞானசம்பந்தர் இத்தலத்திற்கு 67 பதிகங்களைப் பாடி யுள்ளனர். பாடல் பெற்ற பதிகளில் அதிகமான பதிகத் தொகை (71) இத்தலத்துக்கேயுண்டு. சம்பந்தர் மூன்று வயதளவில் பிரம தீர்த்தக்கரையில் பார்வதி தேவியாரால் ஞானப்பால் ஊட்டப் பெற்று, இறைவன்தேவி இவர்கள் இடபவாகனருடராய் அளித்த காட்சியை அப்போதே குழந்தைக்கண்ணால் பார்த்தபடி முதல் பதிகத்தை ஓதுகிறார். 'தோடுடைய செவியன்' என்று தொடங்குகிறது. 'தோடு' என்பதால் அம்மையையும் 'செவியன்' என்பதால் இறைவனையும் குறிப்பிட்டிருப்பது கண்டு இன்புற வேண்டியது. இறைவன்

அப்பர்பெருமான் திருநாரையூரை வணங்கிவிட்டு சீகாழிக்கு வந்தார். ஞானசம்பந்தரைக் கண்டு வணங்கி அருட்கடலும் அன்புக்கடலுமாகக் கலந்து திருத்தோணியப்பரை வழிபட்டார். இத்தலத்திற்கு மூன்று பதிகங்களை அருளியுள்ளார். கழுமலம் என்ற பெயரமைத்து இரண்டு பதிகங்களும், தோணிபுரம் என்ற பெயரில் ஒரு பதிகமும் பாடியுள்ளார். 'கடையார் கொடி

நெடுமாடங்களோங்கும் கழுமலம்' என்று குறிக்கிறார். இறைவன் கழலடிகள் நம்மை ஆள்வன என்பதையும், அதனால் அவைகளை நாம் சிந்தித்து வந்திக்க வேண்டுமென்பதையும் வற்புறுத்துகிறார்.

சுந்தரமூர்த்திகள் தில்லையிலிருந்து சீகாழிக்கு வந்தவர், ஞானசம்பந்தர் அவதரித்த தலமாதலின் மிதிக்க அஞ்சிப்புறநகரில் இருந்தபடியே ஒரு பதிகம்பாடிச் சென்றனர். 'சாதலும் பிறத்தலும் தவிர்த்து' என்று தொடங்கிய பதிகத்தில் ஒவ்வொருபாட்டின் இறுதியிலும் 'கழுமல வளநகர் கண்டுகொண்டேனே' என்று கூறி யிருக்கிறது. 'கடல் கொளமிதந்த கழுமலவளநகர்' என்று கூறி யிருப்பது நோக்கத்தக்கது.

மாணிக்கவாசக சுவாமிகள் இத்தலத்தேதான் 'உம்பர்கட்கரசே' என்று தொடங்கும் பிடித்தபத்தைப் பாடியருளினர் என்பர். 'கழுமலமதனில் காட்சி கொடுத்தும்' என்று கீர்த்தித் திருவகவலில் குறிப்பிட்டிருக்கிறார்.

பூந்துருத்திநம்பிகாடநம்பி திருவிசைப்பாவில் 'எம்பந்த வல்வினை நோய் தீர்த்திட்டெமையாளும் சம்பந்தன் காழியர்கோன் தன்னையும் ஆட்கொண்டருளி' என்று கூறி யிருக்கிறார்.

பட்டணத்துப் பிள்ளையார் திருக்கழுமல மும்மணிக்கோவை யென்ற அரிய பிரபந்தம் ஒன்றைப் பாடியுள்ளார். அதில் ஒரு பாடல் வருமாறு:

> **மானும் மழுவுந் திருமிடற்றில்**
> **வாழும் இருள்**
> **தானும் பிறையுந்**
> **தரித்திருக்கும்—வானவர்க்கு**
> **வெள்ளத்தே தோன்றிக்**
> **கழுமலத்தே விற்றிருந்தென்**
> **உள்ளத்தே நின்ற ஒளி**

இன்னும் இறைவன் சம்பந்தருக்குக் காட்சி நல்கியதை அழகுபடக் கூறி யிருக்கிறார்.

கணநாத நாயனர் இத்தலத்தில் பிறந்த அந்தணப் பெரியார். திருத்தோணியப்பருக்கு நாளும் அன்போடு பணி செய்து வந்தனர். விரும்பி வந்தணையும் அன்பர்களைக் கைத் திருத்தொண்டினில் அவ்வத் துறையில் பயிற்றுவித்தார். தொண்டர்களை ஆக்கும் பெருந்தொண்டில் ஈடுபட்ட இவர் திருக்கயிலாயத்தில் கணங்களுக்கு நாதராகும் பேறு பெற்றார். இவருக்கு இரண்டு கோயில்கள் இங்கு இருக்கின்றன.

நம்பியாண்டார் நம்பிகள் ஞானசம்பந்தர் மீது திருவந்தாதி, திருச்சண்பை விருத்தம், திருமும்மணிக்கோவை, திருவுலாமாலை, திருக்கலம்பகம், திருத்தொகை முதலிய நூல்களைப் பாடி யுள்ளனர். இவை பதினொராந் திருமுறையில் இடம் பெற்றுள்ளன. ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதியில்,

> **பொன்னார் மதில்சூழ் புகலிக்கரசை**
> **அருகர் தங்கள்**
> **தென்னாட் டரண் அட்ட சிங்கத்**
> **. தினைஎஞ் சிவன்இவனென்**
> **றந்நாள் குழலைத் திருவாய்**
> **மொழிகள் அருளிச்செய்த**
> **என்னனை யைப்பணி வார்க்கில்லை**
> **காண்கய மாலயமே**

என்றும், திருமும்மணிக்கோவையில்

> பிறவிஎனும் பொல்லாப்
> பெருங்கடலை நீந்தத்
> துறவியெனுந் தோற்றோணி
> கண்டீர்-நிறையுலகில்
> பொன்மாலை மார்பன்
> புனற்காழிச் சம்பந்தன்
> தன்மாலை ஞானத் தமிழ்

என்றும், இன்னோரன்ன பல பாடல்கள் சுவைத்தின் புறற்பாலன.

சேக்கிழாரடிகள் பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தர் புராணத்தில் சிறப்பாகவும், மற்றும் பல இடங்களிலும் சீகாழியைப் பற்றிப் பலவாறு புகழ்ந்து கூறியுள்ளார்.

> சென்னிவளர் மதியணிந்த
> சிலம்பணிசே வடியார்தம்
> மன்னியசை வத்துறையின்
> வழிவந்த குடிவளவர்

பொன்னிவளந் தருநாடு
பொலிவெய்த நிலவியதால்
கன்னிமதில் மருங்குமுகில்
நெருங்குகழு மலமூதூர்

என்று சீகாழிப் பதியைப் பற்றி எழில்பட உரைக்கிறார்.

அருணகிரிநாதர் இத் தலத்தைப் பற்றி 29 திருப்புகழ்ப் பாடல்களை அருளியுள்ளார். காழி என்ற பெயருடன் 12 பாடல்களும், கழுமலம் என்ற பெயர் வைத்து 2 பாடல்களும், கொச்சை என்ற பெயர் வரும் 3 பாடல்களும், சண்பை என்ற பெயரால் 4 பாடல்களும், பிரபுரம் என்ற பெயர் அமைத்து 4 பாடல்களும், புகலி என்ற பெயரில் 4 பாடல்களும், பூந்தராய் என்ற பெயருடன் 1 பாடலும் ஆக 29 பாடல்களில் சிறப்பித்திருக்கிறார். 'மழைமுகில் தவழ்தரு மண்டுகோபுர மதிள்வயல் புடையுற விஞ்சு காழி' என்றும், 'சங்கு நன்குமிழ் தரளமு மெழில்பெறு துங்க வொண்பணி மணிகளும் வெயில்விடு சண்பையம்பதி' என்றும் புகல்கிறார். ஓர் பாடலில் 'தமிழ்க்காழி' என்றே குறித்திருக்கிறார்.

மச்சுச் செட்டியார், காழிக் கங்கை மெய்கண்டார், சீகாழிச் சிற்றம்பல நாடிகள், கண்ணுடைய வள்ளல், திருத்தோணியப்பர், சீகாழி மறைஞான சம்பந்தர், அருணந்திசிவாசாரியர், சண்பை ஞானப்பிரகாசர், சிவஞான தேசிகர், மாசிலாமணி தேசிகர், சிதம்பர நாதமுனிவர், அருணாசலக் கவிராயர் முதலியவர்கள் இத்தலத்தில் பிறந்தும், வதிந்தும், நூல்களை இயற்றியும், வழிபட்டும் பேறு பெற்றனர். கண்ணுடைய வள்ளல் 'ஒழிவிலொடுக்கம்' என்ற நூலைச் செய்தவர். இராமாயணக் கீர்த்தனம்பாடிப் புகழ்பெற்ற அருணாசலக் கவிராயர் 'காழிப்பள்ளு', 'காழியந்தாதி', 'காழிப் புராணம்' முதலிய நூல்களைப் பாடியுள்ளனர்.

இத் தலத்திலுள்ள கோயிலில் பல கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. 46 கல்வெட்டுக்கள் அரசாங்கத்தாரால் படியெடுக்கப்பெற்றும், படியெடுக்கப்படாதது ஒன்றும் ஆக 47 கல்வெட்டுக்கள் இருக்கின்றன. சோழ மன்னர், கோப்பெருஞ் சிங்கன், விஜயநகரவேந்தர் இவர்களுடைய காலத்தவை. இத்தலம் இராஜராஜ வளநாட்டுத் திருக்கழுமல நாட்டுப் பிரமதேயம் திருக்கழுமலம் என்று குறிக்கப்படுகிறது. திருக்கழுமலம் உடையார், திருத்தோணிபுரம் உடையார், பெரிய நாச்சியார், ஆளுடைய பிள்ளையார் என்று பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. கோயிலில் ஆளுடைய பிள்ளையார் திருவுருவத்தை முதன் முதலில் எழுந்தருளச் செய்தவள் மூன்றாம் குலோத்துங்கனுடைய அடுக்களைப் பெண்டுகளில் மூத்தவளான இராஜவிச்சாதரி என்பாள். கங்கை கொண்ட சோழ புரத்தான் ஒருவன் சம்பந்தர் கோயில் முதற் பிரகார மதில் எடுக்கப் பொன் கொடுத்தான். பொத்தப்பி சோழன் என்பவன் வீர பாண்டியனை வென்று அங்கிருந்த நடராஜ மூர்த்தியை சீகாழியில் கொண்டு வந்து வெற்றிப் பரிசாக வழங்கினான். தேவாரத் திருமுறைகள் எழுதிவைக்கப் பெற்றிருப்பதைப் பூசித்துக் கண்காணிக்க தமிழ் விரகர் ஒருவர் நியமிக்கப்பட்டார். தேவாரப் பண் இசைப்பார்க்கும், பயிற்றுவிப்பார்க்கும் நிலம் விடப்பட்டது. கோப்பெருஞ் சிங்கன் (கி. பி. 1243) திருத்தோணி புரமுடைய நாயகர்க்கும், திருக்கைகோட்டித் திருப்பதிகம் ஓதுவார்க்கும் இறையிலியாக நிலம் அளித்தான். வீரவிருப்பண்ண உடையார் தில்லை விடங்க நல்லூரில் சில பட்டர்களுக்கும், சீகாழியிலுள்ள திருநெறி மாளிகை மடத்துக்கும் மடப்புறமாக நிலம் விட்டார். கோயிலுக்கு விளக்குகள், நித்த நைமித்திகங்கள் இவைகள் நடைபெறப் பலர் நில தானங்கள் செய்ததையும் கல்வெட்டுக்கள் கூறுகின்றன, நில அளவை (Land survey) இராஜராஜன் மாடை என்ற நிறை கல் (weight), கோயிலுக்குச் செய்த பல திருப்பணிகள், மூர்த்திகளை எழுந்தருளச் செய்த பல செய்திகளையும் இங்குள்ள கல் வெட்டுக்களின் மூலம் அறியலாம்.

இத்தலத்தில் ஆறுகால பூசைகள் நடைபெறுகின்றன. சித்திரை மாதத்தில் பிரமோற்சவம் நடைபெறுகிறது, இதில் இரண்டாந் திருநாளில் திருமுலைப்பால் உற்சவம் சிறப்பாகக் கொண்டாடப் படுகிறது. ஆளுடைய பிள்ளையாருக்கு மலைமேல் விளங்கும் பெரிய நாயகியம்மை ஞானப்பால் ஊட்டிக் காட்சி கொடுத்த ஐதிகம் நடைபெறுகின்றது,

பல்லாயிரக் கணக்கான மக்கள் கண்டு, சம்பந்தருக்கு நிவேதித்த பாலையுண்டு மகிழ்கின்றனர். அம்மையார் கொடுத்த பாலையுண்ட பின் காழிப் பிள்ளையாரின் நிலையைச் சேக்கிழார் பெருமான் பின் வரும் பாடலில் அழகு பெற அமைத்துக் காட்டுகிறார் :—

சிவனடியே சிந்திக்கும்
திருப்பெருகு சிவஞானம்
பவமதனை அறமாற்றும்
பாங்கினி லோங்கியஞானம்
உவமையிலாக் கலைஞானம்
உணர்வரிய மெய்ஞ்ஞானம்
தவமுதல்வர் சம்பந்தர்
தாமுணர்ந்தா ரந்நிலையில்.

காழிச் சீராம விண்ணகரம்

சீகாழிப் பதியில், காழிச் சீராம விண்ணகரம் என்ற மங்களசாசனம் பெற்ற திவ்விய தேசமும் இருக்கின்றது. இதைத் தாடாளன் கோயில் என்ற பெயரால் மக்கள் இப்போது வழங்குகின்றனர். எம்பெருமான் திருநாமங்கள் திரிவிக்கிர மூர்த்தி, தாடாளன் என்பன. இறைவன் நின்ற திருக்கோலத்தில் கிழக்கே திருமுகமண்டலமாகக் காட்சியளிக்கின்றனர். நாச்சியார் திருப்பெயர் மட்டவிழுங்குழலியார் என்பது. இங்குள்ளது புஷ்கலாவர்த்த விமானம். சங்கதீர்த்தம், சக்கரதீர்த்தம் என இரண்டு தீர்த்தங்கள் உள்ளன. எம்பெருமான் அஷ்டகோண மகரிஷிக்குப் பிரத்தியட்சம். திருமங்கையாழ்வார் இத் திருப்பதிக்குப் பத்துப் பாசுரங்களை அருளியுள்ளார். 'தெருவில் மலி விழா வளமும் சிறக்கும் காழிச் சீராம விண்ணகரே சேர்மினீரே' என்று கூறுகிறார். முதல் பாசுரத்திலேயே தாடாளன் என்று இறைவனைக் குறிக்கிறார். வாமனவதாரம், கிருஷ்ணவதாரம், இராமவதாரம் இவைகளின் சிறப்பை விளக்கியுள்ளார்.

செல்லும்தொறும் உயிர்ப்பின்
செல்லும் இருவினையை
வெல்லும் உபாயம் விரும்புவீர்!
தொல் அரங்கர்
சீராம விண்ணகரம்
சேர்மின்; பின்மீளாத
ஊர்ஆம் அவிண்
ணகரம் உண்டு.

—திவ்வியகவி பிள்ளைப் பெருமாளையங்கார்.


மதுரை, ஸ்ரீ மதனகோபால சுவாமி சந்நிதியில் ஸ்ரீ மதனவல்லி ஸ்ரீ ஆண்டாள் உற்சவ விக்ரக பிரதிஷ்டை 7-6-59 முதல் 10-6-59 முடிய நன்முறையில் நடந்தேறியது. இக்கோயிலில் புஷ்பப் பல்லக்கு புறப்பாடு இந்தப் பிரதிஷ்டை வைபவத்தில்தான் முதன்முதலாக ஏற்படுத்தப்பட்டது. ஷை கோயில் சந்நிதித் தெருவிலிருக்கும் திரு என். இராமசுப்பிரமணிய அய்யர் அவர்களால் அனுமார் விக்ரகப் பிரதிஷ்டை தன்சொந்தச் செலவில் விரைவில் செய்து கொடுக்க இசைந்துள்ளார்கள்.

கும்பகோணம், ஸ்ரீ ஆதிகும்பேசுர சுவாமி ஆலய திருக்கல்யாண மண்டபத்தில், தமிழ்நாடு இந்து ஆலய, அறநிலையத் தர்மகர்த்தர்களின் இரண்டாவது மாநாட்டை 13-6-59ல், அறநிலைய அமைச்சர் கனம் திரு எம். பக்தவச்சலம், பி.ஏ., பி.எல்., அவர்கள் திறந்து வைத்தார்கள். திருவாரூர் திரு வி. எஸ். தியாகராஜ முதலியார், எம்.ஏ., அவர்கள் தலைமை வகித்தார்கள். அறிஞர்களும் தர்மகர்த்தர்களும் மாநாட்டில் கலந்து கொண்டார்கள்.

தென்காசி ஸ்ரீ காசிவிசுவநாதசுவாமி கோயிலில் 29-5-59ல் சமய நூல் நிலையத்தை, திருநெல்வேலி இந்து சமய அறநிலையப் பாதுகாப்புத்துறை உதவி ஆணையர் திரு டி. எச். விவேகானந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி., அவர்கள் திறந்து வைத்தார்கள். சமய நூல் நிலையத்தின் அவசியத்தைப் பற்றியும், எம்முறையில் நடத்தப்பட வேண்டுமென்ற விவரங்களைப்பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். இவ்விழாவிற்கு இலஞ்சி திரு ஐ. ஏ. சிதம்பரம் பிள்ளை, எம்.ஏ., அவர்கள் தலைமை தாங்கினார்கள். திருக்குற்றாலநாதர் ஆலயம் அறங்காவலர்கள் குழுத்தலைவர் திரு ஏ. சி. சண்முகநயினார் பிள்ளை, பி.ஏ., பி.எல்., அவர்கள் நன்றி நவில, விழா இனிது முடிந்தது.

திருப்புள்ளிருக்குவேளூர்

(வைத்தீசுவரன்கோயில்)



ஆறுமுகக்குமாரர்

பண்ணொன்ற விசைபாடு
மடியார்கள் குடியாக
மண்ணின்றி விண்கொடுக்கு
மணிகண்டன் மருவுமிடம்
எண்ணின்றி முக்கோடி
வாணாள துடையானைப்
புண்ணொன்றப் பொருதழித்தான்
புள்ளிருக்கு வேளூரே

—திருஞானசம்பந்தர்

பத்திமையாற் பணிந்தடியேன்
றன்னைப் பன்னாட்
பாமாலை பாடப்
பயில்வித் தானை
எத்தேவு மேத்து
மிறைவன் றன்னை
யெம்மானை யென்னுள்ளத்
துள்ளே யூறும்


அத்தேனை யமுதத்தை
யாவின் பாலை
யண்ணிக்குந் தீங்கரும்பை
யரனை யாதிப்
புத்தேளைப் புள்ளிருக்கு
வேளூ ரானைப்
போற்றாதே யாற்றநாள்
போக்கினேனே

—திருநாவுக்கரசர்

வைத்தீசுவரன் கோயில் என்பது சோழ நாட்டிலுள்ள பாடல் பெற்ற சிவத்தலங் களில் ஒன்று. முருகன் திருப்பதியாகவும் சிறந்து விளங்குவது. தேவாரத் திருமுறை களிலும் திருப்புகழிலும் புள்ளிருக்குவேளூர், வேளூர் என்ற பெயர்களால் குறிக்கப்பட்

டிருக்கிறது. இது தஞ்சாவூர் மாவட்டத்தின் சீகாழி கோட்டத்தில் இருக்கிறது. காவிரிக்கு வடபால் அமைந்துள்ளது. வைத்தீசுவரன்கோயில் என்ற புகை வண்டி நிலையமும் இருக்கிறது.

புள் (ஜடாயு), இருக்கு (இருக்கு வேதம்), வேள் (முருகன்) இவர்கள் வழிபட்ட ஊர் ஆயினமையின் **புள்ளிருக்குவேளூர்** என்ற பெயர் உண்டாயிற்று. ஜடாயு வழிபட்டதால் **ஜடாயுபுரி** எனவும், வேதம் பூசித்தமையின் **வேதபுரி** என்றும், கந்தன் வழிபட்டதால் **கந்தபுரி** எனவும், சூரியன் வழிபட்டதால் **பரிதிபுரி** என்றும், அங்காரகன் பூசித்தமையின் **அங்காரகபுரம்** எனவும், அம்பிகை வழிபட்டதால் **அம்பிகாபுரம்** என்றும் பெயர்கள் உண்டு. **வினைதீர்த்தான்கோயில், தையனுயகிகோயில், வைத்தீசுவரன்கோயில்** என்று மக்கள் சாதாரணமாக வழங்குகின்றனர்.



ஸ்ரீ வைத்தியநாதப் பெருமான்

திருக்கோயில் ஊர் நடுவே மதில், இராஜகோபுரம், சிறு கோபுரங்களுடனும் அமைந்திருக்கிறது. கிழக்கிலும் மேற்கிலும் கோபுர வாயில்கள் இருக்கின்றன. தென்புறம் சாதாரண வாயில் ஒன்று உண்டு. நான்கு பெரிய தேரோடும் வீதிகளும், மடவிளாகமும் உள்ளன. கோயிலுக்கு இரண்டு பிரகாரங்கள் இருக்கின்றன. இத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் திருநாமம் **வைத்தியநாதர்** என்பது; சந்நிதி மேற்கு நோக்கியுள்ளது. இறைவியின் திருப்பெயர் **தையனுயகி**; சந்நிதி தெற்கு நோக்கி யிருக்கிறது. ஆலயத்தின் கிழக்கே வைரவரும், மேற்கே வீரபத்திரரும், தெற்கே கற்பக விநாயகரும், வடக்கே காளியும் காவல் புரிகின்றனர்.


கோயிலுள் மேலக்கோபுர வாயில் வழியாக நுழைந்ததும் மேற்கு வெளிப்பிரகாரத்தில் **அறுமுகக்குமாரர்** சந்நிதி இருக்கிறது. தென்புறம் சந்தனக்குழம்பு மண்டபம் உள்ளது. வடக்கு வெளிச்சுற்றில் சுவாமி கோயிலையொட்டி காளியம்மன் கோயில் இருக்கிறது, **செல்வமுத்துக்குமாரர்** சந்நிதிக்கு ஒரு கட்டை கோபுரமும் உண்டு. அக்கோபுரத்தின் தென்புறம் ஜுரஹரேசுவரர், நவக்கிரகம், கிழக்கு முகமாக தண்டபாணி, தெற்கு முகமாக அங்காரகன் ஆகியோர் சந்நிதிகள் இருக்கின்றன. கிழக்குப் பிரகாரத்தில் தலவிருட்சமான வேம்பு இருக்கும் **வேம்படிமால்** உளது. இதுதான் **ஆதி வைத்திய**

நாதபுரி என்று வழங்கப் பெறுகிறது. தெற்குப் பிரகாரத்தில் அம்பிகை சந்நிதியில் **சித்தாமிர்ததீர்த்தம்** இருக்கிறது; நடுவில் அழகிய நீராழி மண்டபமும், சுற்றிலும் நாற்புறமும் திருமாளிகைப் பத்தி மண்டபங்களும் இருக்கின்றன,

சுவாமி சந்நிதிக்குச் செல்லும் வாயில் இருபுறமுள்ள குடைவறைகளில் அதிகார நந்தி, ஜடாயு உற்சவமூர்த்திகள் எழுந்தருளியிருக்கின்றனர். மேற்புறம் செல்வமுத்துக்குமாரர் உற்சவர் வள்ளி, தெய்வயானையுடன் காட்சி தந்தருளுகிறார். வடக்கு உட்சுற்றில் நடராஜர், சிவகாமியும், தெற்குப் பிரகாரத்தில் அறுபத்துமூவரும், ஜடாயுகுண்டமும், கட்டுமலையில் சட்டைநாதரும், கீழே தென்முகக்கடவுளும் கோயில் கொண்டுள்ளனர்.

இத்தலத்தில்தான் முருகன் சூரன் மார்பைப் பிளக்க வேல்வாங்கியதென்பர். செல்வமுத்துக்குமாரர், குமரகுருபர அடிகளார்க்கு 'பொன்பூத்த குடுமி' என அடியெடுத்துக் கொடுத்துப் பிள்ளைத் தமிழ் பாடச் செய்தார். இங்கு இறைவனை வழிபடுவோர் எல்லா நோய்களும், பேய் பிடிப்பு முதலியனவும் நீங்கப் பெறுகின்றனர். இத்தலத்தில் அங்காரகனுக்கு (செவ்வாய்க்குப்) பெருமை அதிகம். செவ்வாய் தோஷம் நீங்குவதற்கும் இங்கு வந்து வழிபடும் வழக்கம் இருக்கிறது.

செல்வமுத்துக்குமாரருக்கு **நேத்திரப்பிடி சந்தனம்** அர்த்தசாம பூசையில் சாத்தப்படுகிறது. அதை அணிபவர்களுக்குச் சகலநலன்களும் கொடுக்கவல்லது. இராமபிரான் ஜடாயுவின் வேண்டுகோளின்படி தகனம் செய்த இடமே **ஜடாயுகுண்டம்.** அக்குண்டத்திலுள்ள திருநீற்றை அணிபவர்கள் சகல நோய்களும் நீங்கப் பெறுவர். வைத்தியநாதரிடத்தில் நோய் நீங்கப் பெறுவான் வேண்டிப் பெற்றுக் கொள்ளும் மாத்திரை **திருச்சாந்துண்டை** எனப்படும், இவ்வூர்க்கலம்பகத்தில் 'ஒருண்டை மண்ணையுண்டால் ஐயிரண்டு பிறப்புமவர்க்கொழிக்கலாமே' என்றும், 'வாயிலே மண்போட்டு வாங்குவர் காண் அம்மானை' என்றும் கூறப்பட்டிருக்கிறது.



வைத்தீசுவரன்கோயில் தோற்றம்

இத்தலத்தில் பதினெட்டுத் தீர்த்தங்கள் உள்ளன, **சித்தாமிர்தத்தீர்த்தம்** மிகச் சிறந்தது. இதில் தவளைகள் இல்லாதது குறிக்கத்தக்கது. நோய் நீங்க வேண்டிப் பிரார்த்தனை செய்து கொள்பவர் இத்திருக் குளத்தில் வெல்லம், உப்பு முதலியவைகளைக் கரைத்து, பின்னர் நீராடி இறைவனை வழிபடுகின்றனர். இன்னும் கோதண்ட தீர்த்தம், கௌதம தீர்த்தம், வில்வதீர்த்தம், முனிவர் தீர்த்தம், அங்கசந்தான தீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் இருக்கின்றன.


நாள்தோறும் ஆறுகால பூசைகள் நிகழ்கின்றன. பங்குனித் திங்களில் பிரமோற்சவம் நடைபெறுகிறது. அதில் ஐந்தாம் நாளன்று செல்வமுத்துக்குமாரர் வைத்திய நாதரிடம் செண்டுபெறும் காட்சி மிகச் சிறப்பாக நடைபெறும். செல்வமுத்துக்குமாரருக்குத் தைமாதத்தில் திருவிழா நடைபெறுகிறது. மாதந்தோறும் கார்த்திகை, சஷ்டி நாட்களில் செல்வமுத்துக்குமாரருக்கு அபிஷேகம் நடைபெறும். கார்த்திகை நாளன்று சந்தனக் குழம்பைப் பல்லாயிரக்கணக்கான மக்கள் பெற்றுச் செல்லும் காட்சி காணத்தக்கது. அர்த்தசாமத்தில் செல்வமுத்துக்குமாரருக்கு **புழுகாப்பு** என்ற வழிபாடு நடந்த பின்னர்தான் சுவாமிக்கு நடைபெறும். இது அங்காரகத்தலமானபடியால் செவ்வாய்க்கிழமை மாலை அங்காரகன் ஆட்டுக்கடா வாகனத்தில் பிரகாரம் வலம் வருவர்.

இக்கோயிலில் சில கல்வெட்டுக்களே யுள்ளன. விக்கிரம சோழன் (கி.பி. 1117), வீரபாண்டியன், அச்சுதப்ப நாயக்கர், துளசாமகாராஜர் முதலியோர் காலத்தவை. இவைகளில் கோயிலுக்கு இறையிலியாக நிலங்கள் வழங்கப்பட்டதும், திருப்பணிகள் முதலியன செய்யப் பெற்றதும் குறிக்கப்படுகின்றன.

இத்தலத்தைப்பற்றிப் பாடியவர்கள் பலர். **திருஞானசம்பந்தர்** 'கள்ளார்ந்த பூங்கொன்றை' என்று தொடங்கும் பதிகம்பாடியுள்ளார். 'தள்ளாய சம்பாதிசடா யென்பார் தாமிருவர் புள்ளானார்க்கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே' யென்று சம்பாதி சடாயு என்ற பறவைகளைக் கூறியிருக்கிறார். 'தையலாள் ஒரு பாகம்' என்ற கூற்றால் தையல்நாயகியம்மையைக் குறித்தார். 'திறங்கொண்ட அடியார்மேல் தீவினை நோய் வாராமே' என்றும், 'செடியாய உடல் தீர்ப்பான் தீவினைக்கோர்மருந்தாவான்' என்றும் வைத்தியநாதப் பெருமான் மகிமையைக் கூறுகிறார். திருநாவுக்கரசர் இத்தலத்திற்கு இரண்டு பதிகங்கள் ஓதியுள்ளார். 'மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்' என்று குறிப்பிடுகிறார். மேற்சொன்ன இருவர்களின் திருவாக்குகளினின்றும் வைத்தியநாதப்பெருமான் உடற்பிணி மருத்துவனோடு உயிர்ப்பிணி மருத்துவனாகவும் இருக்கின்றான் என்று உணரலாகும்.

அருணகிரிநாதர், பதினான்கு திருப்புகழ்ப் பாடல்கள் பாடியுள்ளனர். பன்னிரண்டு பாடல்களில் **வேளூர்** என்றே கூறியிருக்கிறார். வைத்தியநாதப் பெருமாள், தையல்நாயகி என்ற பெயர்களை இரண்டு பாடல்களில் சொல்கிறார். ஒரு பாடலில் 'வேளூர் வாழ் வினைதீர்த்த சங்கரர்' என்று குறிக்கிறார்.

காத்தியாயனரிருப்பு என்ற ஊரைச் சேர்ந்த வடுகநாததேசிகர் என்பவர் 1133 விருத்



ஸ்ரீ செல்வமுத்துக்குமாரசாமி

தங்களுடைய வேலூர்த்தலபுராணம் இயற்றியுள்ளார்.

தருமபுர ஆதீனம் பத்தாவது குருமூர்த்தியான சிவஞானதேசிகர் பத்துப்பாடல்களுள்ள முத்துகுமாரசாமி திருவருட்பா என்னும் அரிய நூலை அருளியுள்ளார். அவை கல்மனமும் கரையவைக்கும் தன்மையுடையன. ஒரு பாடல் வருமாறு:—

அன்னைசொற் கொருசெவி
யையர்சொற் கொருசெவி
யம்மான் துதிக்கொரு செவி
யானைசொற் கொருசெவி
வீரர்சொற் கொருசெவி
அயன்றுதிக் கொருசெவிவிண்ணோர்
மன்னர்சொற் சொருசெவி
வள்ளிசொற் கொருசெவி
வான்வனிதை சொற்கொருசெவி
மறைதுதிக் கொருசெவி
யடியர்சொற் கொருசெவி
வல்லசுரர் சொற்கொருசெவி
பன்னிரண் டுங்கொடுத்
தென்சொல்கே ளாமற்
பாராமுகம தாருயிந்தாற்
பாவியேன் மெலிவுகுறை
யெவர்செவியி லேற்றிப்
படுந் துயர் களைந்து கொள்வேன்
முன்னமறை நாலும்வந்
துன்னுபுள் ளூரனே
முக்காட் குருக்கள் குருவே
முத்தர்குரு வேயோக
சித்தர்குரு வேபால
முத்துக்கு மாரகுருவே.

குமரகுருபர அடிகளார் இயற்றியருளிய முத்துகுமாரசுவமிபிள்ளைத் தமிழ் என்னும் நூல் பிள்ளைதமிழ் நூல்களில் சிறந்ததொன்று என அறிஞர் போற்றிப்புகழ்கின்றனர். இன்னும் படிக்காசுத்தம்பிரான், சிதம்பர முனிவர், காளமேகப்புலவர், இராமலிங்கசுவாமிகள் முதலியவர்களும் இத்தலத்தைப்பற்றிப் பாடியுள்ளனர்.

மீனேறு குண்டகழி தீவாய் மடுத்ததனி
வில்லியா ரிளவலோடும்
விதிமுறை வணங்கச் சடாயுபுரி யிற்கருணை
வெள்ளமென வீற்றிருக்கும்
ஆனே றுயர்த்திட்ட வையற்கு மம்மைக்கும்
அருமருந் தாகிநின்ற
ஆதிப் பிரானென்று மும்முதற் கடவுளும்
அடித்தொழும் பாற்றமற்றக்
கூனேறு மதிநுதற் றெய்வக் குறப்பெண்
குறிப்பறிந் தருகணைந்துன்
குற்றேவல் செய்யக் கடைக்கண் பணிக்கெனக்
குறையிரந் தவள் தொண்டைவாய்த்
தேனூறு கிளவிக்கு வாயூறி நின்றவன்
செங்கீரை யாடியருளே
செத்துப் பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள
செங்கீரை யாடியருளே

—முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்

நாகை தாலுகா, செம்பிய மாதேவியில் ஸ்ரீ கைலாசநாதசுவாமி ஆலய அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் 13-5-59ல் நடைபெற்றது. அன்று காலை செம்பியன் மாதேவி தலராற்று வெளியீட்டு விழா அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு டி. எம். நாராயணசாமிபிள்ளை, எம்.எல்.சி. அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. தல வரலாற்றை எழுதிய அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு டி. வி. சதாசிவ பண்டாரத்தார் அவர்களை தஞ்சை துணை ஆணையாளர் திரு ஏ. சர்க்கரை சேர்வை, பி.ஏ. பி.எல்., அவர்கள் தங்கப்பதக்கம் அணிந்து, பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள். ரிஜிஸ்டிரார் திரு டி. டி. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சொற்பொழிவாற்றினார்கள். கும்பாபிஷேகத்தை யொட்டி விருதைக் கல்லூரி வித்துவான் திரு என். சேதுரகுநாதன், அண்ணாமலை பல்கலைக்கழகம் திரு. வெள்ளைவாரணனார் ஆகியோர்கள் சமயச் சொற்பொழிவாற்றினார்கள், திரு டி. வி. நமசிவாயம், திரு எல். என். கானசரசுவதி ஆகியோரின் இன்னிசையுடன் காருகுறிச்சி திரு கே. பி. அருணாசலம் நாதசுரக் கச்சேரியும் நிகழ்ந்தது.

திருவள்ளூர், ஸ்ரீ வீரராகவசுவாமி கோயிலில் இராஜகோபுர ஜீர்ணோத்தாரண மகாசம்ப்ரோக்ஷணம் 14-6-59ல் நடைபெற்றது.

அப்பூதியடிகள் நாயனார்

ஒருநம்பி யப்பூதியடியார்க்கு மடியேன்.

திருத்தொண்டத்தொகை—சுந்தரர்.

தனமா வதுதிரு நாவுக் கரசின்
சரண மென்று
மனமார் புனற்பந்தர் வாழ்த்திவைத்
தாங்கவன் வண்டமிழ்க்கே
யினமாத் தனது பெயரிடப்
பெற்றவ னெங்கள்பிரான்
அனமார் வயற்றிங்க ளூரினில்
வேதிய னப்பூதியே.

திருத்தொண்டர்திருவந்தாதி
—நம்பியாண்டார் நம்பிகள்.

காவிரிக்கு வடகரையில் அமைந்துள்ளது திங்களூர் என்ற பதி. அவ்வூரில் அப்பூதி என்னும் அந்தணர் வதிந்தனர். திருநாவுக்கரசரைப் பார்க்காதிருந்தும் அவர் பெருமையைக் கேட்டு அவர்மேல் பேரன்பு பூண்டார். அதன் காரணமாகத் தன்வீட்டு மக்கள், பசு,எருமை, முகத்தல், நீட்டல், நிறுத்தல் முதலிய அளவைகளுக்கெல்லாம் திருநாவுக்கரசர் என்ற பெயரிட்டு ஒழுகிவந்தார்; மடங்களும் தண்ணீர்ப் பந்தர்களும் அவர் பேரால் அமைத்தார். திருப்பழனம் என்னும் தலத்தை வணங்கிய அப்பர்பெருமான் மற்றத் திருப்பதிகளை வணங்கும் பொருட்டு திங்களூர் வழியாக வந்தார். அப்பூதியடிகளார் அமைத்த தண்ணீர்ப் பந்தரை அடைந்தார். அங்கு **திருநாவுக்கரசர்** என்ற பேரை எங்கும் எழுதியிருப்பதைக் கண்டார்; வியப்பு கொண்டார். அங்கிருந்தவர்களைப் பார்த்து 'இப்பந்தர் இப்பெயர் இட்டு இங்கு அமைத்தார் யார்' என்று கேட்டார். 'செப்பெருஞ்சீர் அப்பூதியடிகளார் செய்தமைத்தார்' என்று அவர்களிடமிருந்து பதில் வந்தது. இதன் கருத்து என்னவாக இருக்கும் என்று எண்ணிய ஆளுடைய அரசர், 'அவர் எவ்விடத்தவர்' என்று அவர்களை வினவினர். 'அவர் இவ்வூரார்தான்; இப்பொழுதுதான் போனார்; வீடும் தூரத்தில்லை கிட்டேதான்' என்று அவர்கள் மொழிந்தார்கள். ஆண்ட அரசும் அவர் வீட்டின் கடை வாயிலை வந்தடைந்தார். அப்பூதியடிகளும் அவரை அன்புடன் வரவேற்றார். வாகீசர், 'திருப்பழனத்திறைவனை வழிபட்டு வரும் வழியில் நீங்கள் வைத்திருந்த தண்ணீர்ப் பந்தரைப் பார்த்தோம்; மற்றும் நீங்கள் செய்த அறங்களைப்பற்றியும் கேட்டு இங்கு வந்தோம்; நீங்கள் அமைத்த தண்ணீர்ப் பந்தரில் நுங்கள் பேர் எழுதாமல் வேறொரு பேர் எழுதக்காரணம் என்னவோ சொல்லுங்கள்' என மொழிந்தார். அப்பூதியார் நிலைகலங்கி "நீங்கள் நன்மொழிகளைச் சொல்லவில்லை; திருத்தொண்டின் உறைப்பாலே சமணர்களை வென்றவர் பேரோ வேறொரு பேர்? திருநாவுக்கரசர் பேரை வேறொரு பேர் என்ற வெஞ்சொற்களை யான் கேட்க விளம்பினீர்கள்; கல்லே புணையாகக் கொண்டு கடலினின்றும் கரையேறியவர் பெருமை இப்புவனத்தில் அறியாதார் இல்லை; சிவவேடம் தாங்கி இவ்வாறு கேட்ட நீங்கள் யார்? எவ்விடத்தவர்?' என்று கேட்டார். இதைச் சேக்கிழார்,

"பொங்குகடற் கன்மிதப்பிற்
போந்தேறு மவர்பெருமை
அங்கணர்தம் புவனத்தி
லறியாதா ரியாருளரே!
மங்கலமாந் திருவேடத்
துடனின்றிவ் வகைமொழிந்தீர்;
எங்குறைவீர்? நீர்தாமியார்?
இயம்பு"மென வியம்பினர்

என்று வெகு அழகாகக் கூறுகிறார். அப்பூதியடிகளாரின் பெருமையையறிந்த அப்பரடிகள், "புறச்சமயத் துறையினின்றும் ஏறும் பொருட்டு சூலை நோய் தந்து இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட சிறுமையேன் யான்"என்றார். அது கேட்ட திங்களூர் மறையவர் கைகூப்பி, கண்ணருவிபாய, உரை குழற, உரோமஞ் சிலிர்க்க, தரையின் மீது வீழ்ந்து தாண்டக வேந்தரை வணங்கினர்; வறியவர் பெருநிதியம் பெற்றதுபோல் மகிழ்ந்தனர்; ஆடினர்; பாடினர்; முன்செய்வது அறியாமல் மனைவி மக்கள் எல்லோரையும் அழைத்து வணங்கச்செய்தார்.

திருவமுது செய்தருள வேண்டுமென்று விண்ணப்பித்தார். அப்பர்சுவாமிகளும் அதற்கிசைந்தார். அறுசுவைகளுடன் அமுது ஆக்கப்பெற்றது. மூத்த திருநாவுக்கரசு என்னும் மைந்தனை வாழை இலை அறுத்து வரும்படி அப்பூதியடிகளார் சொன்னார். அவனும் அவ்வாறே சென்று வாழைக் குருத்தை அரியும் போது அவன் கையை அரவம் தீண்டிற்று. ஓடோடியும் வந்து பெற்றோரிடம் இலையைக் கொடுத்துவிட்டு விடம்தலைக்கேறக் கீழே விழுந்து அவ்விளவல் மாண்டனன். உடற்குறிகளால் விடந்தீண்டியதை யறிந்த பெற்றோர், இது தெரிந்தால் அடியவர் உணவுண்ணார் என்றெண்ணி, புதல்வனைப் பாயிற்சுருட்டி புறக்கடையில் வைத்துவிட்டனர்.

திருநாவுக்கரசரை அமுதுண்ண அழைத்தனர். அவரும் எழுந்தருளி ஆசனத்தில் அமர்ந்து எல்லோருக்கும் திருநீறு வழங்கும் போது மூத்த மகன் எங்கேயென்று கேட்டார். அப்பூதியாரும் அவர் மனைவியாரும் 'இப்போது இங்கு அவன் உதவான்' என்று சொன்னார்கள். அப்பமூர்த்திகளின் திருவுள்ளத்தில் ஒரு தடுமாற்றம் ஏற்பட்டது. உண்மையைச் சொல்லும்படி கேட்டார். பெற்றோர்களும் நிகழ்ந்ததைக் கூறினார்கள்.

திருநாவுக்கரசரும் அம்மகனின் சவத்தை அவ்வூர் இறைவன் திருக்கோயில் முன் கொண்டுவரச் செய்து 'ஒன்று கொலாம்' என்று தொடங்கும் பதிகத்தைப்பாடியருளினர். அவ்வளவில் மறையவர் மைந்தன் தூங்கி யெழுபவனைப்போல் எழுந்தான். அப்பரும் அவனுக்குத் திருநீறளித்தனர். அப்பூதியாரும் அவர் மக்களும் உடன் அமர, அவர் மனைவியார் படைக்க அப்பர் பெருமான் அமுதுண்டனர். அவ்வாறு பல நாட்கள் அரசுகளும் அப்பூதியாருடன் தங்கியிருந்தனர். பிறகு திருப்பழனம் சென்று 'சொன்மாலை' என்று தொடங்கும் பதிகம்பாடி அதில் அப்பூதியடிகளாரின் அடிமைத் திறத்தைச் சிறப்பித்துப் பாடியருளினர். அப்பாடல் வருமாறு :

வஞ்சித்தென் வளைகவர்ந்தான்
வாரானே யாயிடினும்
பஞ்சிக்காற் சிறகன்னம்
பரந்தார்க்கும் பழனத்தான்
அஞ்சிப்போய்க் கலிமெலிய
அழலோம்பும் அப்பூதி
குஞ்சிப் பூவாய்நின்ற
சேவடியாய் கோடியையே.

அப்பூதியடிகளார், அப்பர் சம்பந்தர் காலத்தவராதலின் கி. பி. ஏழாம் நூற்றாண்டினர் என்று கொள்ளக்கிடக்கின்றது. திருநாவுக்கரசர் பெருமையைக் கேட்ட அப்பூதியடிகள் அவரைப் பார்க்காதிருந்தும் பேரன்பும் பெருநட்பும் பூண்டார். 'புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான் நட்பாம்கிழமை தரும்' என்ற திருக்குறள் வாக்கிற்குப் பொருந்த நின்றார். அவருடைய வரலாற்றினின்றும் பல உண்மைகளைத் தெரிந்துகொள்கிறோம். அடியவர்களை வரவேற்று அமுதளிக்கும் முறை; தாம் வழிபடும் பெரியோர் பேர்களைத் தாம் எழுப்பிய கட்டிடங்களுக்கு அமைத்தல்; சாதி சமயங்கடந்த சிவபோத நிலையில் நின்று உடன் உண்ணல்; அடியவர் தம்மை வணங்குவதற்கு முன் தாம்வணங்கல்; தம்மை தத்தம் பெருமைபற்றி தாமே அறிவித்துக்கொள்வது கீழோர்தன்மை; தமது சிறுமைபற்றித் தெரிவித்துக்கொள்வது அறிவுடைப் பெருமக்களின் பண்பு; இன்னோரன்ன பிற.

ஒன்றுகொ லாமவர் சிந்தை யுயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவ ரூர்வது தானே

—விடந்தீர்த்தப்பதிகம்-திருநாவுக்கரசர்.

அந்தமிலாற் றிங்களூர்வரு மப்பூதியரு
மறையோர்திரு நாவுக்கரசினுமம்
பந்தரிடை யெழுதக்கண் டரசுமெய்தப்
பணிந்து பரிகலநேடிப் படப்பைசேர்ந்த
மைந்தனுயிருயர் கதலியிலை மேற்றுஞ்சும்
வாளரவு கவரஉடல் மறைத்தல்கேட்டுச்
சிந்தைமகிழ்ந் துயர்பதிக மருந்தாற் றீர்த்துத்
திருவமுது செயவருளைச் சேர்ந்துளாரே.

—திருத்தொண்டர் புராணசாரம்.

சிவ விஷ்ணுத்தல அட்டவணை

சிவத்தலங்கள்

சோழ நாடு

தஞ்சாவூர் மாவட்டம்.

	தலம். (1)	இறைவன் இறைவி. (2)	பாடல். (3)	இரயில் நிலயம். (4)	குறிப்பு. (5)
102	நாகைக்காரோணம் (நாகப்பட்டினம்)	காயாரோகணேசுவரர் நீலாயதாட்சி	அப்பர், சுந்தரர், சம்பந்தர்	நாகப்பட்டினம் ...	சப்தவிடங்கதலங்களில் ஒன்று. (சுந்தர விடங்கர் வீசிநடனம்) அதிபத்தநாயனருடைய தலம். நாகாபரண விநாயகர் சிறப்பு.
103	திருநாட்டியத்தான் குடி	மாணிக்கவண்ணர் மலைமங்கையம்மை	சுந்தரர் ...	திருநாட்டியத்தான் குடி.	கோட்புலி நாயனருடைய தலம். கைகாட்டி விநாயகர் சிறப்பு.
104	திருநாலூர் மயானம். ...	பலாசவனேச்சுரர் பெரியநாயகி	சம்பந்தர் ...	கும்பகோணம் ...	ஆபஸ்தம்ப முனிவர் பூசித்த தலம்.
105	திருநின்றியூர் ...	மகாலட்சுமீசுவரர் உலகநாயகி	சம்பந்தர், அப்பர் சுந்தரர்	ஆனதாண்டவபுரம்	இலக்குமி பூசித்த தலம்.
106	திருநீடூர் ...	அருட்சோமநாதேசுரர் வேயுறுதோளியம்மை	சுந்தரர் ...	நீடூர் ...	இங்கே முனையாடுவார் நாயனர் சிவனடியார்களுக்கு திருவமுது செய்து முக்தி பெற்ற தலம். இந்திரன், சூரியன், சந்திரன், நண்டு, காளி பூசித்த தலம். வருணனும், தேவகன்னிகைகளும் பூசித்த தலம்.

	(1)	(2)	(3)	(4)	(5)
107	திருநீலக்குடி (தென்னல்குடி).	நீலகண்டேசுவரர் உமையம்மை (ஒப்பிலா இள முலை யம்மை).	அப்பர் ...	ஆடுதுறை ...	வருணனும், தேவ கன்னிகைகளும் பூசித்த தலம்.
108	திருநெய்த்தானம் (தில்லைதானம்).	நெய்யாடியப்பர் பாலாம்பிகை.	சம்பந்தர், அப்பர் ...	தஞ்சாவூர் ...	தக்ஷிணாமூர்த்தி நின்ற திருக்கோலம். சப்தஸ்தானதலம்—ஏழாவது. சரஸ்வதி பூசித்த தலம்.
109	திருநெல்லிக்கா ...	நெல்லிவனநாதேசுவரர் மங்களநாயகி.	சம்பந்தர் ...	திருநெல்லிக்காவல்.	மேற்குப் பார்த்த சந்நிதி. சூரியனும், பிரமனும் பூசித்த தலம். நெல்லி ஸ்தல விருக்ஷம். இதனுடைய காய்கள் சுவாமிக்கு மட்டும் உபயோகப்படுகின்றன.
110	பட்டீச்சுரம் ...	பட்டீசுவரர், பல்வளை நாயகி.	,, ...	தாராசுரம் ...	இராமருக்கு சாயை ஹத்தி தோஷம் தீர்ந்த தலம். சிவபெருமான் சம்பந்தருக்கு முத்துப்பந்தல் கொடுத்த தலம். நந்தி, சம்பந்தருக்காக விலகியிருக்கிறது. காமதேனுவின் நான்கு புத்திரிகளில் பட்டி என்பவள் பூசித்த தலம்.
111	திருப்பந்தணை நல்லூர்.	பசுபதீசுரர், காம்பன தோளி அம்மை	அப்பர், சம்பந்தர் ...	குற்றாலம் ...	தேவ கன்னிகைகளும், காமதேனுவும் பூசித்த தலம்.
112	திருப்பயற்றூர் ...	திருப்பயற்றீசுவரர் காவியங்கண்ணி யம்மை.	அப்பர் ...	வெட்டாறு ...	பைரவ முனிவர் பூசித்த தலம்.
113	பரிதிநியமம் (பரிதியப்பர் கோயில்).	பரிதியப்பர் மங்களநாயகி	சம்பந்தர் ...	தஞ்சாவூர் ...	சூரியன் பூசித்ததலம்.
114	திருப்பழனம் ...	ஆபத்சகாயேசுவரர் பெரியநாயகி.	சம்பந்தர், அப்பர் ...	,, ...	சப்தஸ்தான க்ஷேத்திரங்களில் இரண்டாவது. அப்பூதியடிகளுடைய அவதார தலமான திங்களூர் இங்கிருந்து ஒரு மைலில் இருக்கிறது. வேணுகோபால சுவாமி சந்நிதி இருக்கிறது.

(1)		(2)	(3)	(4)	(5)
115	பழயாறை வடதலி	சோமேசுவரர் சோமகலாநாயகி.	அப்பர் ...	தாராசுரம் ...	அமர்நீதி நாயனுருடைய அவதார தலம். சந்திரன் பூசித்த தலம். காமதேனுவின் நான்கு புத்திரிகளில் விமலி பூசித்த தலம்.
116	பள்ளியின் முக்கூடல்.	முக்கோணநாதேசுவரர் மைம்மேவுகண்ணி.	,, ...	திருவாரூர் ...	இராமர் பூசித்த லிங்கம்.
117	திருப்பறியலூர் (பரசுலூர்)	வீரட்டேசுரர் இளங்கொடியம்மை.	சம்பந்தர் ...	மாயவரம் ...	அட்ட வீரட்டங்களில் ஒன்று. தக்கன் சிரங்கொய்த தலம்.
118	திருப்பனந்தாள் (தாடகேச்சுரம்)	சடையப்பர் பெரிய நாயகி.	,, ...	ஆடுதுறை ...	குங்குலியக்கலய நாயனுருக்காக சிவபெருமான் நிமிர்ந்த தலம். மேற்குபார்த்த சந்நிதி.
119	திருப்பனையூர் ...	சௌந்தரியநாதர் பெரிய நாயகி,	சம்பந்தர், சுந்தரர் ...	திருவாரூர் ...	சிவபெருமான் திருக்கூத்தோடு சுந்தரருக்கு காட்சி கொடுத்த தலம். பராசர முனிவர் பூசித்த தலம். துணையிருந்த பிள்ளையார் விசேடம்.
120	பரதாளீச்சுரம் (பாமணி)	சர்ப்பபுரீசுவரர் அமிர்த நாயகி.	சம்பந்தர் ...	மன்னுர்குடி ...	தனஞ்சய முனிவர் பூசித்த தலம்.
121	திருப்பாம்புரம் ...	பாம்புரேசுவரர் வண்டார்பூங்குழலியம்மை.	,, ...	பேரளம் ...	நாகராஜா பூசித்த தலம்.
122	திருப்பாலைத்துறை.	பாலைவன நாதர் தவளவெண்ணகையம்மை.	அப்பர் ...	பாபநாசம் ...	.....
123	திருப்புகலூர் ...	அக்னீசுவரர், கருந்தாழ்குழலியம்மை.	சம்பந்தர், அப்பர், சுந்தரர்.	நன்னிலம் ..	முருக நாயனுருடைய அவதார தலம். அப்பர் பெருமான் முக்திபெற்ற தலம்.

(1)		(2)	(3)	(4)	(5)
124	திருப்புகலூர் (வர்த்தமானீச்சுரம்).	வர்த்தமானேசுவரர் கருந்தாழ்குழலியம்மை.	சம்பந்தர் ...	நன்னிலம் ...	இது திருப்புகலூர் ஆலயத்திலேயே இருக்கிறது.
125	திருப்புள்ளமங்கை (பசுபதிகோயில்)	ஆலந்தரித்தசுவரர் அல்லியங்கோதை.	,, ...	பசுபதிகோயில் ...	மேற்குப்பார்த்த சந்நிதி.
126	புள்ளிருக்குவேளூர் (வைத்தீசுவரன் கோயில்).	வைத்தியநாதர் தையல்நாயகி.	சம்பந்தர், அப்பர் ...	வைத்தீசுவரன் கோயில்.	முத்துக்குமார சுவாமி சந்நிதி விசேடம் மானக்கஞ்சார நாயனாருடைய அவதார தலமான கஞ்சானூர் (ஆனதாண்டவபுரம்) பக்கத்தில் இருக்கிறது.
127	திருப்புறம்பயம்	சாட்சிநாதேசுவரர் கரும்பன்ன சொல்லம்மை.	சம்பந்தர், அப்பர், சுந்தரர்.	கும்பகோணம் ...	பிரளயங்காத்த பிள்ளையார்.
128	திருப்புனவாயில்.	பழம்பதிநாதர், கருணைநாயகி.	சம்பந்தர், சுந்தரர் ...	அறந்தாங்கி அல்லது காரைக்குடி	பாண்டி 14 தலமும் இங்கு இருப்பதாக சொல்லப்படுகிறது, மூலலிங்கமும், ஆவுடையாரும் மிகப் பெரியன. குலச்சிறை நாயனாருடைய அவதார தலமான மணமேற்குடி பக்கத்தில் இருக்கிறது.
129	திருப்புன்கூர்	சிவலோகநாதர் சொக்கநாயகி.	சம்பந்தர், அப்பர்; சுந்தரர்.	வைத்தீசுவரன் கோயில்.	நந்தனாருக்காக நந்தியை விலகும்படி செய்தருளிய தலம். ஏயர்கோன் கலிக்காமநாயனார் திருப்பணிகள் செய்த தலம். இவருடைய அவதார தலமான திருப்பெருமங்கலம் $1\frac{1}{2}$ மைலில் இருக்கிறது. நந்தனாருடைய அவதார தலம் சிதம்பரம் தாலுகா திருக்கடம்பூர் அருகே 4 மைலில் உள்ள ஆதனூர் என்பர். மாயவரத்திலிருந்து 7 மைலில் உள்ள ஆதமங்கலம் என்றும் சொல்வர் சிலர்.
130	திருப்பூந்துருத்தி ...	புஷ்பவனநாதர் அழகார்ந்தநாயகி.	அப்பர் ...	தஞ்சாவூர் ...	அப்பர் பெருமான் திருமடங்கட்டி வசித்த தலம். சப்த ஸ்தான தலம்.

	(1)	(2)	(3)	(4)	(5)
131	திருப்பூவனூர் ...	புஷ்பவனேச்வரர் கற்பகவல்லி.	அப்பர்	... நீடாமங்கலம்	... சுகமுனி முதலானோர் புஷ்பவனம் வைத்து சுவாமியைப் பூசித்து முக்தி பெற்ற தலம்.
132	திருப்பெரும்புலியூர்.	வியாக்ரபுரீசவரர் சௌந்திரநாயகி.	சம்பந்தர்	... தஞ்சாவூர்	... வியாக்ர பாதர் பூசித்த தலம்.
133	பெருவேளூர் (காட்டூர் ஐயன் பேட்டை).	பிரியா ஈசுவரர் மின்னனையாளம்மை.	சம்பந்தர், அப்பர்	... திருவாரூர்	... கௌதம முனிவர் முதலியோர் பூசித்த தலம்.
134	பேணுபெருந்துறை	சிவாநந்தேசுவரர் மலையரசியம்மை.	சம்பந்தர்	... கும்பகோணம்	... சிவ சக்தி, பிரமன் முதலியோர் பூசித்த தலம். சுப்ரமண்யர் மூகைத் தன்மை நீங்கப் பெற்ற தலம்.
135	பேரெயில் (ஓகைப் பேரையூர்).	ஜகதீசுவரர், ஜகந்நாயகி.	அப்பர்	... குழிக்கரை	... சபாபதி விக்ரகம் அழகானது.
136	திருமங்கலக்குடி ...	பிராணவாதேச்சுரர் மங்களநாயகி.	சம்பந்தர், அப்பர்	... ஆடுதுறை	... மாகாளி, சூரியன், விஷ்ணு, பிரமன், அகத்தியர் இவர்கள் பூசித்த தலம்.
137	திருமணஞ்சேரி ...	அருள்வள்ளனயகேசுரர் யாழின் மென்மொழியம்மை.	,,	... குற்றாலம்	... மன்மதன் பூசித்த தலம்.
138	திருமண்ணிப்படிக் கரை (இலுப்பைப் பட்டு).	நீலகண்டர், அமிர்த கரவல்லியம்மை.	சுந்தரர்	... வைத்தீசுவரன் கோயில்	சிவபெருமான் ஆல கால விஷத்தை அருந்திய பொழுது உமாதேவியார் அவருடைய கண்டத்தைப் பிடிக்க அவர் அவ்விஷக் கறையை தனது கண்டத்தில் காட்டியருளிய தலம்.

	(1)	(2)	(3)	(4)	(5)
139	திருமயிலாடுதுறை (மாயூரம்).	மாயூரநாதேசுவரர் அபயாம்பிகை.	சம்பந்தர், அப்பர்	... மாயவரம்	... பார்வதி மயிலாயிருந்து சிவபெருமானைப் பூசனை செய்த தலம். உருத்திர பசுபதிநாயனருடைய அவதார தலமான திருத்தலையூர் 10-வது மைலில் வடக்கிலுள்ள திருத்தலையூர் என்பர் சிலர். நேச நாயனருடைய அவதார தலமான கூறைநாடு இது என்பர் சிலர். மற்றும் சிலர் பெல்லாரியிலுள்ள ஹம்பிக்கு வடக்கே 25 மைலில் உள்ள காம்பீலி என்பர் சிலர்.
140	திருமயேந்திரபள்ளி.	திருமேனியழகர் வடிவாம்பிகை.	சம்பந்தர்	... கொள்ளிடம்	... சந்திரன், சூரியன், பிரமன், இந்திரன் ஆகிய இவர்கள் வழிபட்ட தலம்.
141	திருமருகல் ...	மாணிக்கவண்ணர் வண்டுவார்குழலியம்மை.	சம்பந்தர், அப்பர்	... நன்னிலம்	... சம்பந்தர் விஷந்தீர்த்த தலம். திருநீலநக்க நாயனருடைய அவதார தலமான சாத்தமங்கை 1 மைலில் இருக்கிறது. செருத்துணை நாயனருடைய அவதார தலமான தஞ்சாவூர் 5 மைலில் இருக்கிறது.
142	திருமறைக்காடு (வேதாரண்யம்).	மறைக்காட்டீசுவரர் யாழைப்பழித்த மொழியம்மை.	சம்பந்தர், அப்பர், சுந்தரர்.	வேதாரண்யம்	... சப்தவிடங்க தலங்களில் ஒன்று. (புவனிவிடங்கர்–ஹம்சபாத நடனம்) வேதங்கள் பூசித்து திருக்காப்பு செய்த கதவை அப்பரும், சம்பந்தரும் திறக்கவும், அடைக்கவும் பாடிய தலம். சிந்தாமணிக் கணபதி சிறப்பு.
143	திருமீயச்சூர் ...	முயற்சிநாதேசுவரர் சௌந்திரநாயகி.	சம்பந்தர்	... பேரளம்	... சுவாமியையும், தேவியாரையும் யானைமேல் வைத்து சூரியன் பூசை செய்த தலம்.
144	திருமீயச்சூர் இளங்கோயில்.	சகலபுவனேசுவரர் மேகலாம்பிகை.	அப்பர்	... ,,	... திருமீயச்சூரிலுள்ள உட்கோயில். காளி பூசித்த தலம்.

(1)		(2)	(3)	(4)	(5)
145	தென்திருமுல்லை வாயில்.	முல்லை வனநாதர் கோதையம்மை.	சம்பந்தர் ...	சீர்காழி ...	இந்திரன், கார்க்கோடகன், சுதர்மன் பூசித்த தலம்.
146	திருவலஞ்சுழி ...	கற்பகநாதேசுவரர் பெரியநாயகி.	சம்பந்தர்; அப்பர் ...	சுவாமிமலை ...	வெள்ளை விநாயகர் சிறப்பு. திருவேரகம் (சுவாமி மலை) பக்கத்தில் இருக்கிறது.
147	திருவலம்புரம் (பெரும்பள்ளம்).	வலம்புரிநாதர், வடுவகிர் கண்ணம்மை.	சம்பந்தர், அப்பர் சுந்தரர்.	சீர்காழி ...	திருமால் பூசித்து வலம்புரிச்சங்கு பெற்ற தலம்.
148	வலிவலம் ...	மனத்துணைநாதர் மாழையங்கண்ணி யம்மை.	,,	திருவாரூர் ...	மாடக்கோயில், சூரியனும், சாரண முனிவரும், கரிக்குருவியும் பூசித்த தலம்.
149	திருவன்னியூர் ...	அக்னீசுவரர் பார்வதியம்மை.	அப்பர் ...	மாயவரம் ...	அக்னி பூசித்த தலம்.
150	திருவாஞ்சியம் ...	வாஞ்சிலிங்கேசுரர் மங்களநாயகி.	சம்பந்தர், அப்பர், சுந்தரர்.	நன்னிலம் ...	விஷ்ணு பூசித்த தலம். இங்கு கார்த்திகை ஞாயிற்றுக்கிழமை ஸ்நானம் சிறப்பு. இயமனுக்கு சந்நிதி இருக்கிறது.
151	திருவாய்மூர் ...	வாய்மூர்நாதர், பாலினு நன்மொழியம்மை.	சம்பந்தர், அப்பர் ...	திருவாரூர் ...	சப்த விடங்க தலங்களில் ஒன்று. நீல விடங்கர் (கமல நடனம்) அப்பர் பெருமானை வேதாரண்யத்தில் இவ்வூருக்கு வரும்படி கட்டளை இட்டார் சிவபெருமான்.
152	திருவாளொளி புத்தூர்.	மாணிக்கவண்ணர் வண்டார் பூங்குழலம்மை.	சம்பந்தர், சுந்தரர் ...	வைத்தீசுவரன் கோயில்.	விஷ்ணு மாணிக்கத்தை வைத்து பூசித்த தலம்.
153	விஜயமங்கை ...	விஜயநாதர். மங்கை நாயகி.	சம்பந்தர், அப்பர் ...	கும்பகோணம் ...	அருச்சுனன் தவஞ்செய்து பாசுபதாஸ்திரம் பெற்ற தலம்.

	(1)	(2)	(3)	(4)	(5)
154	திருவியலூர் ...	யோகா நந்தர் சௌந்திரநாயகி.	சம்பந்தர் ...	கும்பகோணம் ...	......
155	விளநகர் ...	துறைகாட்டும் வள்ளலார், வேயுறுதோளி யம்மை.	,, ...	மாயவரம் ...	அருள்விந்தன் என்னும் அந்தணனை வெள்ளத்தினின்றும் காத்து அருளிய தலம்.
156	விளமர் ...	பதஞ்சலி மனோகரர் யாழினுமென்மொழி யம்மை.	,, ...	திருவாரூர் ...	பதஞ்சலி முனிவர் பூசித்த தலம்.
157	திருவிற்குடி ...	வீரட்டானேசுவரர் ஏலவார் குழலி.	,, ...	விற்குடி ...	அட்ட வீரட்டானங்களில் ஒன்று. சலந்தராசுரனை சங்கரித்த தலம். மேற்குப் பார்த்த சந்நிதி.
158	திருவீழிமிழலை ...	நேத்திரார்ப்பனேசுரர் சுந்தர குஜாம்பிகை.	சம்பந்தர், அப்பர், சுந்தரர்.	குற்றாலம் ...	சம்பந்தரும், அப்பரும் படிக்காசு பெற்ற தலம். திருமால் பூசை செய்யும் பொழுது ஒரு பூ குறைய தன் கண்ணையே யெடுத்து சாத்தி சக்கரம் பெற்ற தலம்.
159	திருவெண்காடு ...	சுவேதாரண்யேசுவரர் பிரமவித்யா நாயகி.	சம்பந்தர், அப்பர், சுந்தரர்.	சீர்காழி ...	அகோர வீரபத்ர மூர்த்தி சந்நிதியும். காளி சந்நிதியும் சிறப்பு. இத்தலத்தின் முக்குளங்களும் சிறப்பு. அச்சுதகளப்பாளர் இங்கு ஸ்நானம்செய்ய மெய்கண்டார் அவதரித்தார்.
160	திருவெண்டுறை ...	வெண்டுறை நாதர் வேனெடுங்கண்ணி யம்மை.	சம்பந்தர் ...	மன்னார்குடி ...	பிருங்கி முனிவர் வண்டு ரூபமாய் அர்த்த நாரீசுரருடைய உருவத்தைத் தொளைத்து சுவாமியை மட்டும் பிரதக்ஷிணம் செய்தனரென்பர்.
161	திருவெண்ணி (கோயில் வெண்ணி).	வெண்ணிக்கரும்பர் அழகிய நாயகி.	சம்பந்தர், அப்பர் ...	கோயில்வெண்ணி.	சுவாமி கருப்பங்கழிகளை ஒன்று சேர்த்து வைத்தாற்போன்ற உருவத்தினர், சுயம்புமூர்த்தி.

உ

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

திருவெம்பாவை

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
    போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
    வேதமுதல் விண்ணோரும் மண்ணுந் துதித்தாலும்
ஓதஉலவா ஒருதோழன் தொண்டருளன்
    கோதில் குலத்தரன்றன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
    ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.

[சிவபெருமான் திருக்கோயிலில் விளங்கும் குற்றமற்ற பணிப்பெண்களே! இறைவன் திருவடித் தாமரை பாதளத்தின் கீழ் இங்குதான் என்று சொல்லமுடியாது; திருமுடியும் எல்லாப் பொருள்களுக்கும் முடிவாயுள்ளது. ஒரு பாதியில் அம்மை விளங்குகிறாள். ஓரே உருவுடையவனல்லன். வேதமும், விண்ணும், மண்ணும் புகழ்ந்தாலும் புகழின் அளவு கடந்த உயிர்த்துணைவன். அடியவர்கள் உள்ளத்தினன். அவன் ஊர் எது? அவன் பேர் என்ன? உற்றார் யார்? அயலவர் எவர்? அவனைப் பாடும் தன்மை எது? சொல்லுங்கள்.]

உ

ஸ்ரீ மதே ராமாநுஜாய நம:

ஆண்டாள் அருளிச்செய்த

திருப்பாவை

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்
    மாற்றமும் தாராரோ வாசல்திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாராயணன் நம்மால்
    போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும்
    தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ
ஆற்ற அனந்தல் உடையாய் அருங்கலமே
    தேற்றமாய் வந்து திறவேலோர் எம்பாவாய்.

[நோன்பை மேற்கொண்டு சுவர்க்கம் செல்லும் தாயே! கதவைத் திறக்காவிட்டாலும் ஒரு பேச்சாகிலும் பேசாரோ? துளசி மாலைமார்பன் நம்மால் வணங்கப்படுபவன்; பாவை நோன்பின் பயனைத் தருபவன். கும்பகரணனும் உன் தூக்கத்தைக் கண்டு தோல்வியுற்றுத் தன் தூக்கத்தையும் உனக்குக் கொடுத்துவிட்டுப் போனானோ? மிகுதியும் தூங்குபவளே! ஆபரணமணிந்தவளே! உடனே எழுந்து வந்து கதவைத் திறப்பாயாக]

அடியவர்கள் திருநட்சத்திரங்கள்


விகாரி — ஆடி

சைவம்

13உ—மூர்த்தி நாயனார்
,, —புகழ்ச்சோழ நாயனார்
17உ—கூற்றுவ நாயனார்
25உ—பெருமிழலைக் குறும்ப நாயனார்
,, —சுந்தர மூர்த்தி சுவாமிகள்
,, —சேரமான் பெருமாள் நாயனார்
28உ—கலிய நாயனார்
,, —கோட்புலி நாயனார்

வைணவம்

5உ—தேர்க்காழ்வார்
19உ—பிரதிவாதி பயங்கர அண்ணன்
22உ—ஸ்ரீ ஆண்டாள்
,, —கந்தாடை தோழப்பர்
24உ—பத்ரிநாராயணப் பெருமாள்
26உ—பக்ஷிராஜர் - பாரத்வாஜ ஸ்ரீனிவாஸ ஜீயர்
31உ—ஸ்ரீ ஆளவந்தார்
,, —ஸ்ரீ புண்டரீகாக்ஷர்



மதுரை கூடலழகர் கோயிலிலுள்ள ஒரேகல்லில் செய்யப்பட்ட பலகணி

Printed at Paari Achakam, 127, Broadway Madras-1.
Edited and Published by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department, Madras-2.